# சுதந்திரன்
SUTANTIRAN

194A, SILVERSMITH STREET, COLOMBO-12.



வாரப்பதிபு விலை சதம் 15

USHA உஷா
தையல் மெஷின்கள் சகாய விலைகள்
மடக்கும் மாதிரி (போல்டிங்) ஷின் ரூ 395
சாதாரண கால் (டிரிடல்) ரூ 370
கை ரூ 265
சோல் ஏஜண்டு:- G. H. REIMOO
17, புதியசோனகத்தெரு கொழும்பு
டெலிபோன் 6060



புத்தகம் 6 | நந்தன ஸ்ரீ மார்கழி மீ 14உ | [28-12-52] | ஞாயிற்றுக்கிழமை | ரபியுல் ஆகிர் பிறை 10 | இதழ் 30


# சூறுவளி கஷ்ட நிவாரணத்திற்கு ★ முட்டுக் கட்டை

## பொக்கிஷ இலாகா கிளப்பியுள்ள ஆட்சேபம்?

### கமக்காரர் "அந்தரித்தவர்கள்" அல்லவாம்!

[நமது நிருபர்]

சமீபத்தில் யாழ்ப்பாணக் குடாநாட்டில் வீசிய சூறாவளியால் மக்களுக்கு ஏற்பட்டுள்ள கஷ்டத்தையும் நஷ்டத்தையும் சுலபமாகக் கணக்கிட்டுவிட முடியாது மந்திரிகள் 50 லட்சம் என்கின்றனர் ஆனால் அகில இலங்கை காந்தி சேவா சங்கத்தினரோ ஒரு கோடி ரூபாவுக்குமேல் நஷ்டம் ஏற்பட்டிருப்பதாகக் கூறுகின்றனர்

புயலால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நாலரை லட்சம் ரூபாய் அரசாங்கம் கொடுத்துதவும் என்று பறைசாற்றப்பட்டது. ஆனல் இப்பொழுது கிடைத்துள்ள தகவலின்படி ரூ 70 ஆயிரந்தான் இதுவரை கஷ்டநிவாரணத்திற்காக கொடுக்கப்பட்டிருக்கிறதென்றும் பாதிக்கப்பட்ட கமக்காரர்களை திக்கற்றவர்கள் என்று கருத முடியாததலால் அவர்களுக்கு நிவாரணமளிப்பது சாத்தியமில்லையென்று பொக்கிஷ இலாகா ஆட்சேபம் கிளப்பியிருப்பதாகவும் சொல்லப்படுகிறது.

இக்கொடிய சூறுவளிக் காற்றினல் வீடுகள் அநேகம் அழிந்துபோய்விட்டன. வாழைத் தோட்டம், வெற்றிலைத் தோட்டம் மரவள்ளித் தோட்டம் என்பன முற்ருக நாசமடைந்து போயுள்ளன. மா, பலா, முதலிய பழ மரங்களுக்கும் இதே கதிதான். ஆடு, மாடுகள் முதலான கால்நடைகள் ஏராளமாக மாண்டிருக்கின்றன. பாழாகிப் போன தோட்டம் வயல்களையோ வீடுவாசல்களையோ திருத்துவதற்கு ஜனங்களிடம் போதிய பணம் கிடையாது. உடனடியாக அவர்களுக்கு நஷ்டஈடும், பணஉதவியும் அளிக்காவிடில் கமத் தொழிலாளர் மிகுந்த கஷ்டத்துக்குள்ளாக நேரிடும்" என்று காந்தி சேவா சங்கத்தினர் பிரதம மந்திரிக்கு அனுப்பியுள்ள ஒரு மகஜரில் குறிப்பிடுகின்றனர்

**திக்கற்றவர்களல்ல**

இம்மாதிரியான விபத்துக்கு ஆளாகித் தவிக்கும் கமக்காரர்களை திக்கற்றவர்களல்லவென்று பொக்கிஷ இலாகா வியாக்கியானம் செய்வதாகத் தெரிகிறது.

புயலடித்ததும் மந்திரிகள் யாழ்ப்பாணத்திற்குப் பறந்தார்கள். பாதிக்கப்பட்ட பிரதேசங்களை காரிலிருந்தபடியே பார்வையிட்டார்கள் மகாநாடு நடத்தினர்கள் கடைசியாக பாதிக்கப்பட்டவர்களுக்கு அரசாங்கம் நாலரை லட்சம் ரூபாய் நிவாரணமளிக்குமென்று கூறப்பட்டது ஆனல் இந்த உதவியும் இப்பொழுது எட்டாக்கனியாகிவிட்டதா? கஷ்டநிவாரணமாக இதுவரை 70 ஆயிரம் ரூபாய்தான் கொடுக்கப்பட்டிருக்கிறதாம்.

**கமக்காரர்களுக்கு உதவியில்லை**

விவசாயத்தை இழந்து கஷ்டப்படும் கமக்காரர்களுக்கு இதுவரை ஒரு சதம்கூட நிவாரணமாக கொடுக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. அவர்கள் "அந்தரித்தவர்கள் அல்ல" என்ற புதிய விசித்திர வியாக்கியானந்தான் அதற்குக் காரணம்.

இந்த 70 ஆயிரம் ரூபாவையும் கடற்கரைப் பகுதிகளில் பாதிக்கப்பட்ட மீன்பிடித் தொழிலாளர்களுக்கு மட்டுமே அளிக்கப்பட்டிருக்கிறது. அதுவும் யானைப் பசிக்கு சோளப் பொரியைக் கொடுப்பதைப் போல.

**விவசாயிகளுக்கு ஏமாற்றம்**

பயிர் பச்சையை இழந்த விவசாயிகள் தங்கள் நிலங்களில் புனருத்தாரண வேலை செய்தாலும் அவர்களுக்கு நிவாரணத் திட்ட விகிதத்தின்படி நாட் சம்பளம் கொடுக்கப்படும் என்று சொல்லப்பட்டது. ஆனல் இதுவரை விவசாயிகளுக்கு ஒரு சதம்தானும் கஷ்ட நிவாரணப் படியாக அளித்ததாகத் தெரியவில்லை. இனிமேலும் மந்திரிசபை தலையிட்டு பொக்கிஷ இலாகாவின் ஆட்சேபனையை "வீடோ" பண்ணுத வரையில், விவசாயிகளுக்கு எதுவும் கொடுபடுமென்று நம்புவதற்கு இடமில்லை.

## தூக்குத் தண்டனைக் கைதிகள் புகைபிடிக்கலாம்

### அப்பம், பழம் கூட கிடைக்குமாம்!

இறை மசோதாவின் புதிய சட்டங்கள் அமுலுக்கு வந்ததும், தூக்குத் தண்டனை பெறும் கைதிகளுக்கு விசேஷ உணவு உண்பதற்கும், புகை பிடிப்பதற்கும் சந்தர்ப்பம் கிடைக்கும், இதற்கு அவர்கள் சிறை அதிகாரியிடம் அனுமதி பெற்று கொள்ளவேண்டும்.

இப்புதிய சட்டம் ஜனவரி 6ந் தேதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படுமென்று தெரிகிறது.

சாதாரண சிறைக் கைதிகளுக்கு கிடைக்கும் காலை ஆகாரத்திற்குப் பதிலாக தூக்குத் தண்டனை பெறும் கைதிகளுக்கு மூன்று அவுன்ஸ் அப்பம், வாழைப் பழம் மூன்று, கொஞ்சம் தேநீர், அரை அவுன்ஸ் சீனி, மூன்று வெற்றிலை பீடா அல்லது மூன்று சுருட்டு ஆகியவை கொடுக்கப்படுமாம்.

## தங்க மாளிகையின் தானம்

### புயல் கஷ்டத்திற்கு ரூ 1000

யாழ்ப்பாணம் பிரபல வைர நகை வியாபாரிகளான "தங்க மாளிகை" எல். கே எஸ் லெப்பை பிரதர்ஸ் ஸ்தாபனத்தார் வட பகுதியிலேற்பட்ட புயல் கஷ்ட நிவாரணத்திற்கென ரூ 1000 நன்கொடையளித்திருக்கின்றனர். இத்தொகையை அவர்கள் யாழ்ப்பாணம் மாநகரசபையின் மேயருக்கு நேரடியாக அனுப்பி புயலால் ஏற்பட்டிருக்கும் நஷ்டத்தோடு ஒப்பிட்டுப்பார்க்கையில் இத்தொகை வெகு சொற்பமாயிருந்த போதிலும் அவசரமான கஷ்ட நிவாரண வேலைகளுக்கு இது பயன்படும் என்று நம்புகிறோம். எதிர்காலத்திலும் எடிமையான வரை மேலும் தொடர்ந்து உதவி புரிய காத்திருக்கிறோம் என்றும் கடிதம் எழுதியிருக்கிறார்கள்.


நமது பாலிஸிதார் அனைவருக்கும் நம் பிரதிநிதிகள் யாவருக்கும் எங்கள் மனமுவந்த

**புது வருட வாழ்த்து!**

பாரதமாதா பரிபூரண பாதகாப்பு அளிக்கிறது. கம்பெனியின் நிதிகள் யாவும் இலங்கை இந்திய அரசாங்கத்தில் முதலீடு செய்யப்பட்டிருக்கிறது

மக்களின் சேவையே எங்களின் லட்சியம்

**நீங்களும்**

ஒரு பாலிஸி எடுத்து உங்களின் எதிர்காலநன்மையைத் தேடிக்கொள்ளுங்கள்.

**கண்ணியமான ஏஜண்டுகள் தேவை.**

கண்டி, மாத்தளை, பதுளை பகுதிகளுக்கு அனுபவம் வாய்ந்த இன்ஸ்பெக்டர்கள் தேவை நல்ல சம்பளம் கொடுக்கப்படும்.

**பாரதமாதா பிராவிடன்ட் அஷ்யூரன்ஸ் கம்பெனி லிமிட்டெட்.**


117-119, செட்டியார் தெரு, கொழும்பு



**தொழில் ஸ்தாபனங்கட்கு தேவையான ஸ்ரோர் சாமான்கள்**



தோட்டக் கருவிகள்
ஆயுதங்கள்
பம்ப் வகைகள்
கட்டிட சாமான்கள்
சீமெந்து யந்திரங்கள்
இரும்பு சாமான் வகைகள்
கரத்தைப் பூண்கள்



மூத்தைப் பட்டைகள்
திருக்கல் காத்து அச்சுகள்
புருசுகள்
தீந்தை வகைகள்

**வேலை ஸ்தலம்**

செம்பு இரும்பு வார்ப்புகள்
யந்தரங்கள் பழுதுபார்த்தல்
தண்ணீர் பைப்லைன் வேலைகள்
இரும்புகேடர்வேலைகள்

உங்கள் பொருள்கள் சகாயமான விலைக்கும், வேலைகள் தேவைக்கேற்றவாறு குறைந்த விகிதத்திற்கும், தாமதமின்றி முடித்துக்கொடுக்கப்படும்.

**உங்கள் தேவையை அறியுங்கள்**

**சாமுவேல் சன்ஸ் அண் கொம்பெனி லிமிரெட்**

கொழும்பு 12 | தபால் பெட்டி: 46
கிளைக் கந்தோர்
ஆஸ்பத்திரிரோட், யாழ்ப்பாணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காதலிக்கு விஷப்பாம்பைப் பரிசளித்த வஞ்சகன்

# ஒலிபெருக்கியின் மூலம் திருமணம் நடந்தது

## டிராமா டிக்கட்டுகளைக் கொடுத்து ஏமாந்த சோணகிரி

### காதல் வஞ்சகம்

தான் முன்பு காதலித்த ஒரு யுவதியிடம் தனக்குள்ள வெறுப்பைக் காட்ட விநோதமான வழியைக் கையாண்டான் ஒரு வாலிபன். இத்தாலிய தேசத்தைச் சேர்ந்தவன் அவன். பொடன்ஸா என்ற ஊர்வாசி. அகாஸ்டினோ செரபுஸ்டினி என்பது அவன் பெயர்.

அவன் ஒரு அழகிய யுவதியைக் காதலித்தான். ஆனால் அந்த யுவதி அவனை மணக்காமல் வேறு ஒரு வாலிபனை மணந்துகொண்டுவிட்டாள். அகாஸ்டினோ செரபுஸ்டினி மனம் முறிந்துபோய்விட்டான். தன்னை அவள் மோசம் செய்துவிட்டாள் என்ற நினைப்பு அவன் மனத்தில் ஆழப் பதிந்துவிட்டது. தன் மனதிலிருந்து அவளைப்பற்றிய நினைப்பை அகற்றப் பார்த்தான். முடியவில்லை. அவள் மீது தனக்குள்ள வெறுப்பை எப்படி அவளுக்குக் காட்டுவது என்று யோசித்துப் பார்த்தான். ஒரு யோசனை தோன்றியது.

அவனது மாஜி காதலியான அந்த யுவதிக்கு ஒரு நாள் ஒரு அழகிய அலங்காரமான புஷ்பக் கொத்து வந்தது. அதை அகாஸ்டினோதான் அனுப்பியிருந்தான். அந்தப் புஷ்பக் கொத்துடன் அவன் அவளுக்கு ஒரு கடிதக் குறிப்பும் அனுப்பியிருந்தான். அதில் "இந்த அழகிய புஷ்பக் கொத்தின் நடுவே ஒரு அழகிய பொன்னிற முகத்தைப் பார்ப்பாய். உன் சொர்ண முகத்தைப்போலவே மிளிரிடும் அந்த அழகிய முகம் உன்கூடப்பிறந்த சகோதரி போலத் தோற்றமளிப்பாள்" என்று எழுதியிருந்தான்.

அந்தக் குறிப்பைப் படித்துவிட்டு அவள் புஷ்பக் கொத்தைக் கையிலெடுத்து முகரப் போனாள், அந்தக் கொத்தின் நடுவிலிருந்து ஒரு மஞ்சள்நிற விஷப் பாம்பு தலை நீட்டியது. அவள் பதறிப்போய் கொத்தை வீசி எறிந்துவிட்டாள்.

பிறகு அகாஸ்டினோ கைது செய்யப்பட்டு தண்டிக்கப்பட்டான்.

### பாடம் கற்பித்த டிக்கட்

பலரது சுபாவம் பலவிதமாக இருக்கும். பார்ப்போரைக் கவரும்படியாக நடந்துகொள்ளும் பாவனையில் தங்கள் சட்டைப் பைகளில் கைவிட்டுப் பணத்தையோ டிக்கட்டுகளையோ கம்பீரமாக எடுத்து அலட்சியமாகக் கொடுக்கும் சுபாவம் சிலருக்கு உண்டு.

ஒரு அமெரிக்கர் இந்த மாதிரிதான் செய்தார். அவரும் அவர் மனைவியும் இன்னும் இரண்டு விருந்தாளிகளுமாகத் தியேட்டருக்கு நாடகம் பார்க்கச் சென்றனர். அவர்கள் பக்கத்து ஊரிலிருந்து ரயிலில் வந்தார்கள்.

நாடகத்திற்கு முன்பே ரிசர்வ் செய்திருந்தார்கள். எனவே தியேட்டருக்குள் நுழைந்ததும் அவர் கம்பீரமாக, அலட்சிய மனப்பான்மையுடன் தன் சட்டைப் பையில் கையைவிட்டு டிக்கட் பரிசோதகரின் முகத்தையும் பார்க்காமல் அப்பால் பார்த்துக்கொண்டு டிக்கட்டை அவரிடம் நீட்டினார். அதைக் கையில் வாங்கிய டிக்கட் பரிசோதகர் திகைத்துப் போனார். "ஸார்" என்று கூப்பிட்டு "இந்தாருங்கள் உங்கள் டிக்கட். இது தியேட்டர் டிக்கட் அல்ல" என்றார்.

அலட்சிய சுபாவப் பேர்வழி டிக்கட்டைப் பார்த்துவிட்டு பரக்கப்பரக்க விழித்தார். அவைகள் அவர்கள் வாங்கியிருந்த ரயில் டிக்கட்டுகள்!

அவர் முகத்தில் அசடு வழிந்தது. யோசித்துப் பார்த்தபோது அவருக்கு ஞாபகம் வந்தது. தான் ரயில்வே ஸ்டேஷனில் டிக்கட்டுகளை பரிசோதகரிடம் கொடுத்துவிட்டு அவன் முகத்தை அலட்சியமாக பார்த்தபோது அவன் முகம் சந்தோஷப்பட்டதன் காரணம் அவருக்குத் தெரிந்தது.

ரயில்வே டிக்கட்டுக்குப் பதில் அவர் தனக்கு உயர் வகுப்பு டிராமா டிக்கட்டுகளைக் கொடுத்திருக்கும்போது ஆனந்தப்படாமல் எப்படி அவனால் இருக்க முடியும்?

### ஒலிபெருக்கித் திருமணம்

மிஸ் விடா டெனஎயிக் என்ற பெண்ணின் கலியாணம் நடந்தவிதம் விசித்திரமானது. அவளுக்கு கலியாணம் நடக்க ஏற்பாடாகி கலியாண தினமும் குறிக்கப்பட்டு விட்டது. கலியாண தினமும் வந்துவிட்டது. மணப்பெண் காலையில் [illegible] படுக்கையிலிருந்து எழுந்திருந்தாள். உடம்பு சரியாக இல்லை. கண்ணாடியில் முகத்தைப் பார்த்துக்கொண்டாள். அவளுக்கு விளையாட்டு அம்மை போட்டிருந்தது.

இன்னும் கலியாணம் நடக்க நாலைந்து மணிநேரம்தான் இருந்தது. அதற்குள் இந்த வியாதி அவளுக்கு ஏற்பட்டுவிட்டது. சகல ஏற்பாடுகளும் ஆகியிருக்கையில் கலியாணத்தை நிறுத்திவிடுவதா, அல்லது இந்த நிலைமையில் நடத்துவதா? புரியாமல் தவித்தாள் அவள். அவளால் தேவாலயத்திற்குப் போக முடியாதாகையால் எவ்விதம் மணம் நடக்க முடியும்? அதோடு அது தொத்து வியாதி ஆதலால் மற்றவர்களோடு பழகவும் முடியாது.

ஆனால் அவள் கலியாணம் எவ்வித தடங்கலும் இல்லாமல் அதே முகூர்த்தத்தில் நடந்துவிட்டது. காதல் எப்படியும் ஒரு வழி கண்டுபிடித்துவிடும் சக்தி வாய்ந்தது. ஆனால் கலியாணம் நடந்தவிதம் விசித்திரம். மணப்பெண் வீட்டில் தன் அறையில் படுக்கையிலேயே உட்கார்ந்திருந்தாள். கலியாணப் வீட்டில் நடந்தது. மணமகனும் மற்றவர்களும் ஹாலில் இருந்தார்கள். கலியாணத்தை நடத்தி வைத்த மதகுரு ஹாலிலிருந்து கலியாணத்தை நடத்தினார். ஒரு ஒலிபெருக்கியை தன் கையில் வைத்துக்கொண்டிருந்த மணப்பெண் மேல் மாடியிலிருந்து மதகுரு "நீ இவரை மணந்துகொள்கிறாயா?" என்று கேட்ட கேள்விக்கு "ஆமாம் நான் மணந்து கொள்கிறேன்" என்று சொன்னாள். கலியாணம் நடந்தது.

### சரியான பரிகாரம்

நமது சகோதரர்களில் சிலர் சிலபோது ரேடியோக்களில் ஒலிபெருக்கிகளை வால்யூம் அதிகமாக வைத்து காதைத் துளைக்கின்றனர். இதேமாதிரி வீடுகளிலும் கூட பெரிய சள்ளை அனுபவிக்க நேரிடுகிறது. இந்த மாதிரி செய்பவர்கள் மீது ஆத்திரம் ஏற்படுகிறது. இதனால் பல தகராறுகளும் ஏற்படுகின்றன.

ஆனால் இத்தாலிய தேசத்தின் தலைநகரான ரோம் நகரின் சர்வகலாசாலை தத்துவப் பேராசிரியர் கையாண்ட முறை வெகு தமாஷானது. அவர் பெயர் பட்டானியா என்பதாகும்.

அவரது அண்டை வீட்டுக்காரன் லூயிகி வலீரியோவிடம் "உங்கள் வீட்டு ரேடியோவை இவ்வளவு வால்யூம் அதிகமாகச் சப்தம்போட வைக்கிறீர்கள்; எனக்கு உபத்திரவமாக இருக்கிறது. குறைத்து அடக்கமாக உங்கள் வீட்டுக்குள் மட்டும் கேட்கும்படியாக வைத்துக்கொள்ளுங்கள்" என்று சொல்லிப் பார்த்தார். லூயிகி வலீரியோ இதைக் காதில் போட்டுக்கொள்ளவே இல்லை.

புரொபஸருக்கு ஆத்திரம் ஏற்பட்டது. அண்டை வீட்டுக்காரரை எவ்விதம் தண்டிப்பது என்று யோசித்துப்பார்த்து ஒரு முடிவுக்குவந்தார். கையில் ஒரு நீளமான கயிற்றை எடுத்துக்கொண்டு அண்டை வீட்டுக்காரரின் வீட்டுக்குள் நுழைந்தார்.

அப்போது லூயிகி வலீரியோ ரேடியோ கேட்டுக்கொண்டிருக்கவில்லை நாற்காலியில் உட்கார்ந்து பத்திரிகை படித்துக்கொண்டிருந்தார்.

பட்டானியா அவரை நாற்காலியோடு சேர்த்து அந்தக் கயிற்றால் இறுக்கிக் கட்டினார் பிறகு ரேடியோவைப் பக்கத்தில் காதுக்கு அருகில் சில அங்குல தூரத்தில் கொண்டு வைத்தார், ரேடியோவைத் திருகிவிட்டு முழு வால்யூமையும் வைத்துச் சப்தம் அவர் காதைத் துளைக்கச் செய்துவிட்டுத் திரும்பிப் போய்விட்டார்.

காதில் அலறிவிழும் ரேடியோசப்தம் தாங்க முடியாமல் அவதிப்பட்டார் லூயிகி.

இந்த மாதிரி செய்ததற்காக பட்டானியாமீது வழக்குத் தொடர்ந்தார்; விசாரித்த ஜட்ஜ் அவர் செய்ததில் தப்பு இல்லை என்றும் லூயிகி தினம் ரேடியோவைப் பலக்க வைத்து அவருக்கு ஆத்திரம் ஏற்படச் செய்ததால்தான் அவர் இப்படி நடந்துகொள்ள ஏற்பட்டதென்றும் கூறினர்.

### அரசாங்க அறிக்கை
### கிருஷிக இலாகா

பெண்கள் கிருஷிக பாடசாலை திண்ணைவேலி யாழ்ப்பாணம்-விவசாய செய்கையிலும், மிருக வளர்ப்பிலும், வீட்டுப்பணியிலும், கைத்தொழில் சம்பந்தமான பாடங்களிலும் சுதேச பாஷையில் பயிற்சி பெற விரும்பும் விவாகமாகாத பெண் பிள்ளைகளிடமிருந்து விண்ணப்பங்கள் 7-1-53 வரை யாழ்ப்பாணம் கிருஷிக உத்தியோகத்தால் ஏற்றுக்கொள்ளப்படும் இத்திகதியின் பின் கிடைக்கும் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டா. பயிற்சிக் காலம் 1953, மாசி மாதம் 2ம் கிழமை தொடக்கம் 1 வருடம் வரை மற்று விபரங்களும், விண்ணப்பப்பத்திரங்களும் யாழ்ப்பாண கிருஷிக உத்தியோகத்தரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.



[illegible] படுகின்றன. இதோ இந்த ஹெலிகொப்டர் விமானங்கள் கொரியப் போர்முனையிலே எதிரிகளின் அணிகளுக்குப் பின்னால் எக்கச்சக்கமாக மாட்டிக்கொண்டு விழிபிதுங்கும் போர் வீரர்களுக்கு உணவுப் பொட்டலங்களையும் மருந்துப் பார்சல்களையும் கொடுப்பதற்காக வானவீதியிலே வாயுவேகத்தில் பாய்ந்து செல்கின்றன.

## குழந்தைகள்

"மஹாகவி"

தயங்கிடவே மாட்டாள்;
தருவாள்முத் தங்கள்; என்
புயங்களிலே நித்திரைதான்
போவாள்!— மயக்கவைப்பாள்;
கொவ்வை இதழாள்;
கொலைவிழியால வாழ்வளிப்பாள்;
அவ்வளவோ டென்றனை வெல்லாள்! (1)

பத்துமா தம் சுமந்து,
பெறும்போது பாதிஉயிர்
செத்துப் பிழைத்தாள் என்
செல்வப்பெண்! — முத்தேபோல்
பிள்ளையினைப் பெற்றெடுத்த
பின்னர்தான் என் இதயம்
கொள்ளைகொடுத் தேன் அவளுக்கு! (2)

முட்டி முலையால் என்
மகவுக்குப் பாலூட்டிக்
கட்டின் அழ(கு) உடையும்
கண்மணியாள் — தொட்டிலினை
ஆட்டுவாள்; தாலாட்(டு)
இசைப்பாள்; அவளே என்
வீட்டிலே வைத்த விளக்கு. (3)

கிலுகிலுப்பை ஒன்று
கிலுக்குப; மைப் புட்டியைப்போய்
உலைகிழாய்ச் சாய்க்கும் ஒன்(று); இத்
தங்கச் — சிலையையெலாம
பெற்றெனக்குத் தந்த
பெறற்கரிய தந்தாள்: யான்
பெற்றவற்றுளே அவளே பேறு! (4)

வீட்டிலே பாட்டும்
விளையாட்டு மாய்ச் சத்தம்
போட்டு-கொண் டேயிருக்கும்
பொற்கிளிகள்! — கேட்டே—நான்
புளகாங் கிதம்[illegible]
பூரிப்பேன்; வா[illegible]
இளமுகில் தோளுடையானே! (5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ★ தமிழ் போதனா மொழியாவதை ஆதரிக்கின்றோம்

## ஆனால் சில கல்லூரிகளில் தமிழ் வகுப்பேகிடையாதே!

## திரு மேத்தானந்தாவின் வகுப்பு வாதத்திற்குச் சூடு

(வி. நவரத்னம்)

**திரு. நவரத்னம் "டெயிலி நியூஸ்" பத்திரிகையில் எழுதிய ஒரு கடிதத்தின் சுருக்கம் இங்கே தரப்படுகிறது. தமிழ் போதனா மொழியாவதால் தனித் தமிழ் அரசு நிறுவுதல் சுலபமாகும் என்று கூறும் இக்கட்டுரையாளர் சில கல்லூரிகளில் தமிழ் வகுப்பை மூடியதால் ஏற்படும் விளைவுகளையும் விளக்குகிறார். —ஆசிரியர்**

கடந்த பொதுத் தேர்தல் சமயத்தில்நான்பலகூட்டங்களில் கூறியதை மக்களின் கவனத்திற்கு கொண்டுவர விரும்புகிறேன். தமிழ்ப் பேசும் மாணவர்களுக்கு 1953ல் 6ம் வகுப்பு வரையும், 1954ல் 7ம் வகுப்புவரையும், 1955ல் 8ம் வகுப்புவரையும் தமிழ் மொழிதான் போதனா மொழியாக இருக்கும்.

### இரு பகுதிகள்

8ம் வகுப்புவரை தமிழில் கல்வி பயின்ற ஒரு மாணவன் 1956ல் எஸ். எஸ். ஸி. அல்லது ஜி. ஸி. ஈ. பரீட்சை தமிழைத் தவிர வேறு மொழியில் எழுதுவான் என்று எதிர்பார்க்க முடியாது இவ்வாறு எஸ் எஸ். ஸி அல்லது ஜி. ஸி ஈ பரீட்சையில் தேறிய மாணவன் 1957ல் பொது குமாஸ்தா பரீட்சை எழுதினால், தமிழில்தான் எழுத முடியும். அதன்பிறகு அவர் அரசாங்க உத்தியோகஸ்தராகும்போது தமிழில் கல்வி பயின்ற ஒருவர் குருநாகல்லுக்கோ அம்பலாங்கொடைக்கோ காலிக்கோ நியமனம் செய்யப்படுவார் என்று கருதுமளவுக்கு நாம் மதியீனர்களல்ல. டாக்டர்கள், வழக்கறிஞர்கள், சிவில் சேர்விஸ் உத்தியோகஸ்தர்கள், இஞ்சினியர்கள் முதலியோரைப் பொறுத்த வரையிலும் இதே நிலைமைதான் ஏற்படும். இவ்வாறு தேசம் இரு பகுதிகளாகப் பிரிக்கப்படுதல் பூர்த்தியாகும்.

### தனி அரசுகள்

அப்பொழுது அரசாங்கத்தின் நிலை என்ன? அன்றும் அரசாங்கம் 101 பிரதிநிதிகளைக்கொண்ட ஒரு பாராளுமன்றத்தின் கையிலேதான் இருக்கும். இன்றுள்ள தமிழ்ப் பேசும் பிரதிநிதிகள் 16 பேர்தான் அன்றும் இருப்பார்கள். 16 என்பது நிரந்தரமான ஒரு தொகையன்று. கடந்த பாராளுமன்றத்தில் 25 தமிழ்ப் பேசும் பிரதிநிதிகள் இருந்தனர். கல்-ஓயா, கந்தளாய்,மின்னேரியா, பல்வத்து ஓயா (அருவி ஆறு என்ற தமிழ்ப்பெயர் இலங்கைக்கு சுதந்திரம் வந்த பிறகு பல்வத்து ஓயா என்று மாறிவிட்டது) இன்னும் ஏனைய திட்டங்கள் அனைத்தும் பூர்த்தியானதும் யாழ்ப்பாணக் குடாநாட்டின் சார்பாக மட்டும் அநேகமாக 7 தமிழ்ப் பிரதிநிதிகள் வரைதான் பாராளுமன்றத்தில் அங்கம் வகிக்க முடியும். இதையெல்லாம் நான் சுட்டிக்காட்டத் தொடங்கினால், ஒரு படுமோசமான வகுப்புவாதி, அல்லது சீர்திருத்த முடியாத மிதவாதி என்று என்மீது கண்டனக் கணைகளை ஏவிவிடக்கூடும்.

அரசியல் ரீதியாக ஒரு சமஷ்டி யூனியனில் பிணைக்கப்பட்ட தனித் தமிழரசும் தனிச் சிங்கள அரசும் ஏற்படுவது நிச்சயமென்பதை தெளிவாக உணர்ந்திருக்கிறோம்.

### ஏன் ஆதரிக்கிறோம்?

அரசாங்கத்தின் போதனா மொழிக் கொள்கைக்கு இலங்கையின் தமிழ்நாடு தனது ஒத்துழைப்பை அளிக்கிறது. காரணம், அரசியல் விடுதலையைப் பெற அதனால் எங்களுக்கு வழி ஏற்படும் என்பதனால்தான்.

ஆனந்தாக் கல்லூரி அதிபர் திரு மேத்தானந்தா "பூதக்கண்ணாடியால் பார்க்கப்பட வேண்டிய சிறுபான்மை" என்றெல்லாம் தாக்குவதை நாங்கள் அங்கீகரிக்க முடியாது. அவர் கிறிஸ்து மத கல்வி ஸ்தாபனங்களைப்பற்றித்தான் இப்படிக் குறிப்பிடுகிறார். விரும்பத்தக்க சுயபாஷா போதனாமொழிக் கொள்கையே தமிழர்கள் கிறிஸ்து மத பாடசாலைகளின் உதவியை நாடும்படியான நிர்ப்பந்தத்தைச் சிருஷ்டி செய்கிறது.

### வகுப்பு ஒற்றுமை?


நானும் திரு மேத்தானந்தாவின் பழைய மாணவன்தான். "பல்வேறு இனங்களைச் சேர்ந்த மாணவர்களை ஒரே கூரையின்கீழ் ஒன்றுபடுத்திவரும் ஆனந்தாக்கல்லூரி வகுப்பு ஒற்றுமையை வளர்த்திருக்கிறது" என்று அவர் பெருமிதத்துடன் ஒருசமயம் கூறினதுண்டு. ஆகவே எனது குழந்தைகளையும் நான் படித்த அதே கல்லூரியில் கல்வி பயிலும்படி செய்வதுதானே இயல்பு ஆயினும் அந்தோ! இன்றைய நிலைமை என்ன?

### மும்மொழிகளில் வகுப்புகள்

இன்று ஆனந்தாக் கல்லூரி தமிழ் மாணவர்களை ஆரம்பத் தமிழ் வகுப்புகளுக்கு ஏற்றுக்கொள்வதில்லை. ஆனால் கிறிஸ்தவ மிஷனரிப் பாடசாலைகளோ ஏற்றுக்கொள்கின்றன. அவைகள் மும்மொழிகளிலும் வகுப்புகளை நடத்துகின்றன: எனவே அவற்றின் ஆதரவை நாடி ஓடும்படி தமிழர்கள் வற்புறுத்தப்படுகிறார்கள். மும்மொழிகளிலும் வகுப்புகளை நடத்துவதில் அவைகளுக்குப் பெருஞ் செலவு ஏற்படுகிறது. ஆதலால் அப்பாடசாலைகளை நிர்ப்பந்தப்படுத்தும் ஒரு கொள்கையை அவைகள் எதிர்க்கின்றன. மேற்கூறிய காரணத்தை முன்னிட்டுதான் தமிழ் உலகம் அவைகளுக்கு அனுதாபம் காட்டுகிறது. ஆகவே 'பூதக்கண்ணாடியால் பார்க்கப்பட வேண்டிய சிறுபான்மை" என்றெல்லாம் எவரும் கூற வேண்டிய அவசியமில்லை.

### உறிஞ்சலுக்கு அரண்

சுதந்திரத் தமிழரசு ஏற்படுவதைத் தடை செய்யும் பொருட்டு எதிர்நடவடிக்கையாக "உறிஞ்சும் கொள்கை" (தமிழர்களை படிப்படியாக சிங்கள இனத்தினுள் உறிஞ்சிக்கொள்வது—ஆ-ர்) கையாளப்படுகிறது. "பூதக்கண்ணாடியால் பார்க்கப்பட வேண்டிய சிறுபான்மைதான்" திட்டமிடப்பட்ட இந்த "உறிஞ்சல்" முறையை எதிர்த்து நிற்கும் அரண்.



ஜோன்கொப்என்னும்பிரபல மோட்டார்படகு ரேஸ் ஓட்டக்காரர் உலக "ரிக்கோர்டை" உடைப்பதற்காக தண்ணீரைக் கிழித்துக் கொண்டு பாயும் இந்த புதிய மோட்டார் படகைக் கட்டியிருக்கிறார்

---

மல்லர் அரங்கம்

# காதலியைக் கவர்ந்த நண்பனின் காலை முறித்த "செந்தேள்"

## முகமூடியணிந்து சண்டை போடுவதின் மர்மம்

இப்பொழுது கொழும்பில் நடைபெறும் சர்வதேச குஸ்திப் போராட்டத்திலே தாராசிங், பாரன் வான் ஹெக்ஸி போன்ற பிரபல மல்லர்களைக்கூட மண்கவ்வும்படி செய்த ஒரு பலசாலியைப்பற்றி ஒரு சில வார்த்தைகள் கூற விரும்புகின்றோம்.

ரெட் ஸ்கோர்ப்பியன் அல்லது செந்தேள் என்ற புனைப் பெயருடன் நடமாடும் இந்த ஆசாமி ஒரு முகமூடியுடன்தான் எப்பொழுதும் காட்சி அளிக்கிறார். இதுவரை இவரைத்தோற்கடித்தவர்கள் யாருமில்லை.

ஐரோப்பிய நாடுகளிலே பல குஸ்திப் போராட்டங்களில் பங்கெடுத்து அவர் வெற்றியடைந்திருக்கிறார். பயங்கரமான முறையில் வெட்டடி கொடுக்கும் இந்த மல்லருடன் குஸ்தி போடுவதற்கு பிரபல மல்லர்கள் கூட அஞ்சி பின்னடைவதால் ஐரோப்பாவில் அவருக்குப் போட்டி கிடையாது என்ற நிலைமை ஏற்பட்டு விட்டது. ஆகவே ஆசிய நாடுகளிலே தன்னுடன் போட்டி போட்டு ஜெயிக்கக்கூடிய மல்லர்கள் இருக்கிறார்களா என்று தேடிப் பார்ப்பதற்காக இப்பொழுது கீழ்த்திசைக்கு விஜயம் செய்திருக்கிறார்.

### விவாக ஏற்பாடு

நெற்றியில் ஒரு தேளின் உருவத்தைப் பச்சை குத்திக்கொண்டிருக்கும் அவர் கழுத்திலிருந்து சிரசு முழுவதையும் சிகப்புத் துணியால் மூடிக்கொண்டிருக்கிறார். தான் தோற்கடிக்கப்படும்வரை முகமூடியை அகற்றப் போவதில்லை என்று கூறும்போது அவர் யாரையோ மிரட்டுகிறார் அல்லது சவால் விடுகிறார் என்றுதான் தோன்றும்.

கண்கள், வாய், மூக்கு ஆகிய இடங்களில் மட்டும் துளை போட்டிருக்கும் இந்த விசித்திரமான முகமூடி ஒரு சுவாரஸ்யமான காதற் காட்சியுடன் சம்பந்தப்பட்டதாகும்.

அவரைப்போன்ற வாலிப வயதுள்ள ஒரு குஷியான மல்லனின் நட்பு அவருக்கு கிடைத்தது. இந்த நண்பனுடன் அடிக்கடி கோதாக்களில் தோன்றி வெற்றிக்கொடி நாட்டி வந்த இச்செந்தேள் பயில்வான் ஒரு அழகிய யுவதியுடன் விவாக ஏற்பாடு செய்துகொண்டிருந்தார் ஒருசமயம் குஸ்திச் சண்டைக்காக வெளிநாடுகளில் சுற்றுப்பிரயாணம் செய்துவிட்டு வரும்போது பேரிடிபோன்ற ஒரு செய்தி அவருக்காக காத்திருந்தது

### கம்பிநீட்டினாள்

சண்டையில் எதிரியின் அடிகளுக்கும் பிடிகளுக்கும்கூட அஞ்சாத அவரது உள்ளம் இச்செய்தியைக் கேட்டதும் சுக்குநூறாக சிதறுண்டுவிட்டது அதனால் அவருக்கு வாழ்க்கையே கசந்துபோய்விட்டது இத்தகைய அதிர்ச்சியைக் கொடுத்த செய்தி என்னவெனில், தன்னோடு காதல் உலகில் ஆட்சிபுரிந்த அவரது உயிர்க் காதலி தனது நண்பனுடன் கம்பி நீட்டிவிட்டாள் என்பதுதான்:

[6-ப் பக்கம் பார்க்க]

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## சட்டத்தின் அட்டகாசம்


பிரேமாவதி கொலை வழக்கு வழக்குகளுக்கே உரித்தான லட்சணப்படி மாஜிஸ்டிரேட் கோர்ட்டில் பலதடவை ஒத்திவைக்கப்பட்டு ஈற்றில் சுப்ரீம் கோர்ட்டுக்கு "கமிட்" செய்யப்பட்டது. ரஞ்சிதம் தனது பணத்தை வாரியிறைத்தும் பாரிஸ்டர் சிற்றம்பலம் தமது சட்ட அறிவையெல்லாம் பிரயோகித்தும் மனோகரனை ஜாமீனில் விடுவிக்க முடியாது போனமையால் மனோகரன் நெடுங்காலம் "ரிமாண்டில்" இருக்க வேண்டியதாயிற்று. அரசியல் கைதியாக பல தடவை அரசாங்க விருந்தாளியாக இருந்து பழகிப்போன மனோகரனுக்கு சிறைவாசம் அவ்வளவு கஷ்டமானதாகத் தெரியவில்லை. ரஞ்சிதம் வாரம் ஒரு முறை மனோகரனைச் சந்தித்து அவனுக்கு வேண்டிய சௌகரியங்கள் கிடைக்கும்படி செய்து வந்தாள். ஜெயில் அதிகாரிகளுக்கு பணத்தை வாரியிறைத்தால் என்னதான் செய்ய முடியாது? மனோகரன் கொலைகாரனல்லவென்பதை மனோகரன் அறிவான் ரஞ்சிதம் அறிவாள். கடவுளும் அறிவார். ஆனால் சட்டம் அறியுமா? சட்டத்தின் முட்டாள் தனத்தால் மனோகரன் கொலைகாரனாகி விடக் கூடாதேயென்று பயந்து ரஞ்சிதம் துப்புத் துலக்குவதற்காக துப்பறியும் கோபாலனை பெரும் பணச்செலவில் இந்தியாவிலிருந்து வரவழைத்திருந்தாள்.

துப்பறியும் கோபாலன் பிரேமாவதி பங்களாவுக்கும், டக்ளஸ் பங்களாவுக்குமாக அலைந்தார். எஸ்டேட் கணக்குப் புத்தகங்களைப் புரட்டினார் சிவபாலனையும் மீனாட்சியையும் கண்டு பேசினார். ஜெயிலில் மனோகரனைச் சந்தித்து சம்பாஷித்தார். இப்படியிருக்கையில் சுப்ரீம் கோர்ட்டில் பிரேமாவதி கொலை வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளும் நாளும் வந்துவிட்டது.

அன்று கோர்ட்டில் ஆண்களும் பெண்களும் மாணவர்களும் மாணவிகளுமாக பெருந்திரளான ஜனங்கள் குழுமியிருந்தனர். மனோகரன் கைதிக் கூண்டில் நிறுத்தப்பட்டிருந்தான். பாரிஸ்டர் சிற்றம்பலத்துக்கு சமீபத்தில் ரஞ்சிதம் ஒரு நாற்காலியில் உட்கார்ந்திருந்தாள். மூன்பு கிறீன் எஸ்டேட் மாரிமுத்துக் கங்காணிக்கு, அவருடைய மகன் சுந்தரத்தின் காதல் விவகாரத்தைப் பற்றி மொட்டைக் கடிதமெழுதிய சதாசிவம் இப்பொழுது ஒரு உயர்தர போலீஸ் அதிகாரி. இந்த வழக்கில் அவன்தான் பிராசிகியூஷன் ஆபீஸர். "சுந்தரம் தொலைந்தான்; ரஞ்சிதத்தின் ஆகாயக் கோட்டை இடிந்து தரைமட்டமாகிவிட்டது" என்றெல்லாம் மனப்பால் குடித்துக் கொண்டிருந்த இவன் மனோகரனை ரஞ்சிதம் சுற்றித் திரிவதைக்கண்டு மனோகரனை நிழல்போல்

# ரஞ்சிதம்

மாயாவி



தொடரும்படி இரகசியப் போலீஸாரை ஏவினன். மனோகரன் வாழைத்தோட்டத்தில் நடைபெற்ற கூட்டத்தில் தலையில் காயம் பட்டு ஆஸ்பத்திரியிலிருந்த பொழுதும் இரகசிய போலீஸ்காரன் ஒருவன் பக்கத்துக் கட்டில் ஒன்றில் நோயாளிபோல் படுத்துக் கொண்டு மனோகரனைக் கவனித்து வந்தான். அங்கு மனோகரனுக்கும் ரஞ்சிதத்துக்குமிடையே நடைபெற்ற சம்பாஷணையைக் கொண்டு சுந்தரமே மனோகரன் என்ற செய்தியை அறிந்து சதாசிவத்திடம் கூறியிருந்தான். ஆகவே சதாசிவம் மனோகரனை இவ்வழக்கு மூலம் தீர்த்துக் கட்டுதற்கான முஸ்தீப்புகளுடன் நீதிபதியின் ஆசனத்துக்கு அருகில் வந்து நின்று எதிரிமீதுதான் கொண்டு வந்திருந்த குற்றச் சாட்டுகளை வாசிக்கலானன்.

"ஆரம்பத்தில் எதிரிமீது மல்லிகைத் தோட்ட தேயிலை பாக்டரிக்கு தீ வைத்ததாகவும் அல்லது தீவைப்பதற்கு உதவியாகவும் உடந்தையாகவும் இருந்ததாகவும், பிரேமாவதியைக் கொன்றதாகவும் பிரேமாவதி பங்களாவில் களவெடுக்க முயன்றதாகவும் மூன்று குற்றச் சாட்டுகள் கொண்டு வரப்பட்டிருந்தன. அதன்பின்பு போலீஸார் நடத்திய புலன் விசாரணைகளின் பயனாக குற்றச் சாட்டுகள் மாற்றப்பட்டு எதிரிமீது பிரேமாவதியின் கணவனான சமரவீராவை மூன்றாண்டுகளுக்கு முன்னர் கொன்றுவிட்டு இந்தியாவுக்குப் போய் மனோகரன் என்ற பெயருடன் மாறுவேடம் பூண்டு இலங்கைக்குத் திரும்பி இந்தியத் தொழிலாளிகளிடையே பிரசாரம் நடத்தி இந்நாட்டின் முக்கிய தொழிலான தேயிலை உற்பத்தித் தொழிலுக்கு நஷ்டம் விளைவித்து மல்லிகைத் தோட்டத் தேயிலை பாக்டரியை சுட்டுக் கொளுத்தி அல்லது சுட்டுக் கொளுத்தும்படி தூண்டிவிட்டு அதைச்செய்வதற்கு உதவியாகவும் உடந்தையாகவும் இருந்து சமரவீரா கொலை வழக்கில் பிரதம சாட்சியாக பயன்படக் கூடிய பிரேமாவதியைக் கொலை செய்திருக்கிறானென்ற குற்றச் சாட்டுகள் சுமத்தப்பட்டிருக்கின்றன"

இந்த வழக்கில் டக்ளஸ் துரை முதலாவது சாட்சியாக விசாரிக்கப்பட்டார்.


சுந்தரம்தான் மனோகரன் என்ற செய்தியறிந்ததும் அவருக்கு என்னமோ போல் இருந்தது. சுந்தரம் சமரவீராவைக் கொன்ற குற்றத்திலிருந்து தப்பித்துக் கொள்வதற்காகவே பிரேமாவதியைக் கொன்ருன் என்று பிராசிகியூஷன் ஆபீஸர் கொண்டுவந்த குற்றச்சாட்டு ரொம்பவும் பொருத்தமாகவும் நம்பக் கூடியதாகவும் இருந்ததைக்கண்டு அவர் அடைந்த சந்தோஷத்துக்கு அளவேயில்லை

எதிரிதரப்பு வழக்கறிஞரான சிற்றம்பலம் டக்ளஸை குறுக்கு விசாரணை செய்தார். பிரேமாவதி விஷயமாக சிற்றம்பலம் கேட்ட கேள்விகள் டக்ளஸுக்கு கசப்பாயிருந்தன. "சமரவீராவின் மரணத்துக்குப் பின்னர் பிரேமாவதியைக் கண்டியில் குடியேற்றிப் படியளந்தீரே, அது ஏன்?' என்று சிற்றம்பலம் கேட்டால் டக்ளஸுக்கு கசக்காமலிருக்குமா? "சமரவீரா ரொம்பவும் தங்கமான மனிதன். விசுவாசத்துடன் வேலை செய்தான் பாவம்! அவனுடைய அகால மரணத்தால் அனாதையான பிரேமாவதியை பராமரிக்கும் பொறுப்பை நான் ஏற்றுக் கொண்டேன்" என்று டக்ளஸ் மென்று விழுங்கிக் கொண்டு சொன்னான்.

சுந்தரத்தைப் பற்றிக் கேட்டபொழுது சுந்தரம் கெட்டவன் என்று கூற முடியாமல் டக்ளஸ் திண்டாடினான். சுந்தரம் மல்லிகைத் தோட்டத்தில் எஸ். டி ஆன மர்மம் கோர்ட்டில் அம்பலமாயிற்று நடுக்காட்டில் காடையர்களிடம் சிக்கிய தன்னைக் காப்பாற்றியதற்குப் பிரதி உபகாரமாக சுந்தரத்தை தனக்குக் கீழே வேலைக்கு வைத்துக் கொண்டதாக டக்ளஸ் ஒப்புக் கொண்டான். டன்லப் பாலத்தடியில் காடையர்களிடம்போய் மாட்டிக் கொண்டு விழிக்கையில் முகமூடியணிந்த மனிதன் வந்து டக்ளஸைக் காப்பாற்றிய சமாச்சாரத்தை சிற்றம்பலம் கோர்ட்டில் அவிழ்த்து விட்டபொழுது கோர்ட்டாரால் சிரிப்பை அடக்க முடியவில்லை. ரஞ்சிதமும் சிரித்தாள். டக்ளஸின் முகத்தில் அசடு வழிந்தது.

வேறு சாட்சிக்காரர்களும் விசாரிக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்பட்டனர். கிறீன் எஸ்டேட் மாரிமுத்துக் கங்காணியும் அவருடைய மனைவியும்கூட இவ்வழக்கில் சாட்சி கூற அழைக்கப்பட்டிருந்தனர். சுந்தரம்தான் மனோகரன் என்பதைக் கண்டுபிடிப்பதற்கு அவர்களின் சாட்சியம் அவசியமல்லவா? மனோகரனின் முகத்திலிருந்த தாடியை க்ஷவரம் செய்து அவனை மாரிமுத்து கங்காணி தம்பதிகள் முன்னிலையில் கொண்டுவந்து நிறுத்தி "இவன் உங்களுடைய மகன் சுந்தரம்தானா?" என்று கோர்ட்டார் கேட்டபொழுது கிழவனும் கிழவியும் என்ன சொல்வதென்று தெரியாமல் விழித்தார்கள். "அப்பா! அம்மா! இந்தக் கொலைகாரனை உங்கள் பிள்ளை என்று கூறுவதற்கு உங்களுக்கு வெட்கமாயிருக்கிறதா? ஏன் தயங்குகின்றீர்கள்? என்னை உங்களுக்குத் தெரியவில்லையா? நான் சுந்தரமேதான் என்று ஒத்துக்கொண்டால் போதும் கோர்ட்டார் என்னை நம்பத் தயாராக இல்லை. நீங்கள் சொன்னால்தான் நம்புவார்கள்" என்று சுந்தரம் கூறினன் உண்மையைக் கூறினால் தங்களுடைய பிள்ளைக்கு ஏதாவது ஆபத்து நேர்ந்துவிடும் என்றஞ்சித் தயங்கி நின்ற கங்காணியும் மனைவியும் மகன் கூறிய வார்த்தைகளால் தைரியமடைந்தவர்களாக "இவன் எங்கள் மகன் சுந்தரமேதான்" என்று ஏககாலத்தில் கூறினார்கள்.

பிராசிகியூஷன் தரப்பு வழக்கறிஞர் சுந்தரத்தின் மீது சாற்றப்பட்ட குற்றச் சாட்டுகளையும் அக்குற்றங்களை அவனே செய்தான் என்று நம்புவதற்கு ஆதாரமாகவிருந்த சாட்சியங்களையும் அக்குவேறு ஆணிவேருக விளக்கி இரண்டு மணி நேரம்வரை பேசினார். அவருடைய பேச்சையும் அவ்வப்பொழுது அவர் சட்ட நூல்களிலிருந்து எடுத்துக்காட்டிய மேற்கோள்களையும் கேட்டுக்கொண்டிருந்த வக்கீல்களும் பாமர மக்களும் மனோகரனின் கழுத்தில் சுருக்கு விழுவது நிச்சயமென்றெண்ணினார்கள்.



மனோகரன்மீது சுமத்தப்பட்ட பிரேமாவதி கொலை வழக்கு உயர்தர நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. மனோகரன் கைதிக் கூண்டில் நிறுத்தப்பட்டிருப்பதையும், பாரிஸ்டர் சிற்றம்பலத்துக்கு சமீபத்தில் ரஞ்சிதம் ஒரு நாற்காலியில் அமர்ந்திருப்பதையும் காண்க.

பின்னர் எதிரிதரப்பு வழக்கறிஞரான பாரிஸ்டர் சிற்றம்பலம் தமது கட்சியை தொகுத்துரைக்கலானார்;—

"எதிரி நன்னடத்தையும் நற்குணமும்வாய்ந்தவரென்பதை டக்ளஸ் ஒத்துக் கொள்கிறார். எதிரிக்கும் சமரவீராவுக்குமிடையே எத்தகைய மனஸ்தாபமும் இருந்ததென்பதற்கு ஆதாரமில்லை. சமரவீரா கொலையுண்ட அன்று மாலையில் சுந்தரம் துரை பங்களாவுக்குப் போய்விட்டு தன்னுடைய பங்களாவுக்கு அரை மணி நேரத்துக்குள் திரும்பி வந்துவிட்டார் என்பதற்கு போதிய சாட்சியங்கள் இருக்கின்றன. அரை மணி நேரத்துக்குள் சமரவீரா கொலையுண்டுகிடந்த இடத்துக்கு சென்று திரும்புவது சாத்தியமானதல்ல. மல்லிகைத் தோட்டத்தில் நடைபெற்ற கூட்டத்தில் மனோகரன் "கொளுத்து, பொசுக்கு, எரி" என்றபதங்களைப் பிரயோகித்தாரென்பதைக்கொண்டு அவர் பாக்டரியை கொளுத்தச் சொன்னாரென்று பிராசிகியூஷன் தரப்பு வழக்கறிஞர் விவரிப்பது பகுத்தறிவுக்குப் பொருத்தமாயில்லை.

(9-ம் பககம் பார்கக)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சீனத்து அரிசி கிடைத்தும் பயனில்லையா?

## பங்கீடு அரிசி அளவைக் கூட்டவோ விலையைக் குறைக்கவோ முடியாதாம்!

### 10 கோடி லாபம் திரட்டவா இந்த வியாபாரம்?

ஊர்ப் புலகந்து கொண்டிருந்த பொருளாதார நெருக்கடி திடீரெனக் குமுறத் தொடங்கியதால் யு. என். பி ஆட்சியாளர்கள் மூச்சுத் திணறித் திண்டாடினார்கள்.

பங்கீட்டு அரிசி அளவைக் குறைத்தும், அரிசி விலையை உயர்த்தியும், சீனி விலையைக் கூட்டியும் நிதி நெருக்கடியைத் தவிர்க்க நடவடிக்கை எடுத்தது அரசாங்கம். சீனத்துடன் செய்துகொண்ட குறுகியகால, நீண்டகால வர்த்தக உடன்படிக்கைகளும் பேருதவியாக இருந்ததால் அரசாங்கம் நெருக்கடிக்குப் பலியாகாமல் தப்பித்துக் கொண்டது என்பது உண்மையே.

சீனாவுடன் செய்துகொண்டுள்ள குறுகியகால, நீண்டகால வர்த்தக ஒப்பந்தங்களினால் 350 ஆயிரம் டன் அரிசி இலங்கைக்கு கிடைக்கும். குறுகியகால உடன்படிக்கையின்படி 80 ஆயிரம் டன் அரிசி ஏற்கனவே இலங்கைக்கு வந்து கொண்டிருக்கிறது.

**இது நியாயமா?**

ஆதலால் பங்கீட்டு அரிசியேனும் குறைத்துக் கொடுப்பதற்கு எவ்வித நியாயமும் கிடையாது. அது அநீதியுங்கூட. நெருக்கடியைத் தவிர்ப்பதற்காக அரிசி அளவு வாரமொன்றுக்கு ஒரு கொத்துவீதம் குறைக்கப்பட்டது. இப்பொழுது நெருக்கடி நீங்கிவிட்டது. ஆதலால் அரிசி பங்கீடு மீண்டும் பழைய அளவுக்கு உயர்த்தப்பட வேண்டியது தானே நியாயம்?

ஆனால் அரசாங்கம் அதற்குத் தயாரில்லை. பங்கீட்டு அளவைக் கூட்டுவதற்குப் பதிலாக அரிசி இறக்குமதியையே குறைக்கப்போகிறார்களாம். 1952ல் 400 ஆயிரம் டன் அரிசி இறக்குமதி செய்யப்பட்டது. ஆனால் 1953ல் 350 ஆயிரம் டன்தான் இறக்குமதி செய்யப்படுமாம். பாக்கி 50 ஆயிரம் டன் அரிசியும் அதிகப்படியாக இலங்கையில் உற்பத்தியாகிவிட்டது என்று கருதிவிடாதீர்கள். உள்நாட்டில் உற்பத்தி அதிகரித்து வெளிநாட்டு இறக்குமதியைக் குறைப்பதானால் யாருக்கும் ஆட்சேபனையே இருக்க முடியாது! ஆனால் இங்கே அந்த நிலைமை கிடையாது.

**வயிற்றில் அடிக்காதே!**

இறக்குமதியில் குறைக்கப்படும் அந்த 50 ஆயிரம் டன் அரிசியும் மக்கள் சாப்பிடும் சாதத்தின் அளவிலிருந்துதான் குறைக்கப்பட்டிருக்கிறது. ஆகையால்தான் இறக்குமதியைக் குறைத்து ஏழை மக்களின் வயிற்றிலடிப்பதை நாம் எதிர்க்கின்றோம்.

சீனத்திலிருந்து குறைந்த விலைக்கு அரிசி கிடைக்கிறது. சீனத்திற்கு ரப்பர் விற்பதினாலும் லாபம் கிடைக்கிறது. ஆனால் கூட்டிய அரிசி விலையைக் குறைப்பதற்கு அரசாங்கம் தயாரில்லை. இது அக்கிரமமாகும்.

**மக்களின் ஏமாற்றம்**

இச்சீன வியாபாரத்தினால் 10 கோடி ரூபாய் லாபம் கிடைக்கப்போகிறதாம். உண்மையில் இந்த லாபம் எங்கே இருந்து வருகிறது. அரிசி விலையைக் கூட்டியதிலிருந்துதான் இந்த லாபம் திரளுகிறதென்பது – அதாவது: சாதாரண மக்களிடமிருந்தே மறைமுகமாக உறிஞ்சப்படுகிறதென்பது – ஆட்சியாளருக்குத் தெரியாத விஷயமன்று. ஆயினும் முன்போல பங்கீடு அரிசி விலையைக் குறைத்து நாட்டு மக்களுக்கு நன்மை செய்யாமல் அவர்களைத் தொடர்ந்து சுரண்டவே வழி வகுக்கப்படுகிறது.

சீனத்திலிருந்து குறைந்த விலைக்கு போதுமான அரிசி கிடைத்தும் பங்கீடு அரிசி அளவைக் கூட்டவோ விலையைக் குறைக்கவோ அரசாங்கம் தயாரில்லாததினால் குறிப்பாக சாதாரண மக்கள் பெரிதும் ஏமாற்றமடைந்திருக்கின்றனர்.

---

### பாரதி ஜயந்தி

பாரதி ஜயந்திவிழா 20-12-52ல் வடக்கன்குளம் நேரு இளைஞர் சங்கத்தின் சார்பாக சங்க கட்டிடத்தில் திரு. பி. எஸ். தாஸன் தலைமையில் கொண்டாடப்பட்டது. திருவாளர்கள் ஏ. எம். ஜே. தாஸ் தோ. சேவியர் முதலானோர் பாரதியாரின் பண்பு, பாரதியார் வழியில் சுவாமிசுத்தானந்த பாரதியார் என்னும் பொருள் பற்றி விரிவாகப் பேசினார்கள். பின்அடியிற் கண்ட தீர்மானம் நிறைவேறியது.

நாஸ்திக பிரச்சார நோக்கத்தோடு வெளிவரும் பேசும்படங்களை திரையிட அரசாங்கம் அனுமதி அளிக்கக்கூடாதென்று இலங்கை, இந்திய அரசாங்கங்களை இக்கூட்டம் தாழ்மையாய் கேட்டுக் கொள்கிறது.

### கிராண்ட்பாஸ் தி. மு. கழகம்

கிராண்ட்பாஸ் திராவிட முன்னேற்றக் கழகத்தின் செயற் குழுக் கூட்டம் கடந்த 21-12-52ல் தோழர் பெரியண்ணன் தலைமையில் கூடியது. அதுசமயம் கீழ்க்கண்ட தீர்மானம் நிறைவேறியது.

ஆந்திரமாகாணம் கோரி உண்ணாவிரதமிருந்து காலஞ்சென்ற பொட்டி ராமுலு அவர்களுக்கு இக்கூட்டம் தனது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக் கொள்கிறது.

---

# சாவக்கச்சேரியில் சாராய அரக்கனுக்கு கல்தா!

## ஆள் மாருட்டத்திற்கு திரு குமாரசாமியும் பலி

"சூயா"

பட்டின சங்கத் தேர்தல், பாராளுமன்றத் தெரிவு ஆகிய இவைகளின் வெற்றி தோல்விக்குச் சாராய நாதனையே தஞ்சமெனவாழ்ந்து வருகின்ற பிரமுகர்களெல்லாரும் இனி என்ன செய்வோமென்று கையற்றேங்கவும், வயிற்றுக்குத்து, வயிற்றுவலி, வாய்வுக்கோளாறு இவைகளைச் சாட்டாக வைத்து ஒரு 'டிரும்' இரகசியமாகப் போட்டுக்கொள்ளும் பெண்களும், ஆண்களும், "போச்சே. இனி நம்பாடு" என்று பிரலாபிக்கவும் "என் மனைவியின் பிரசவத்தின் போது சாராய ஊறல் போட்டுக்கொடுக்க இனி ஒரு போத்தல் சாராயத்துக்கு என்ன பண்ணுவது" என்று சிலசத்திராஸர்கள் தலையிற் கையைவைத்தழவும், சாவகச்சேரிப்பட்டின மக்கள் சாராயத்தவறணையைச் சாவகச்சேரியினின்றும் ஓட்டுவதற்கு நடடளித்தும் பெருமிதவெற்றி கண்டு விட்டார்கள். வெற்றியென்றால் சாமானியவெற்றியல்ல எண்பத்தநாலு சதவீதம் வோட்டளித்துக் கண்ட வெற்றி மதுவிலக்குச் சபையார் மற்றெந்த இடங்களிலும் காணமுடியாத வெற்றியைச் சாவகச்சேரியிற் கண்டிருக்கின்றனர். மதுவகைகளைக் கண்ணாலும் கண்டறியாத புள்ளிபடெருமக்கள் கூட ஒருவர் விடாமல் வந்து உற்சாகததோடு வோட்டளித்தார்களென்றால், அப்புறம், சாவகச்சேரியில் சாராய அரக்கன் எப்படித்தான் உயிர்வாழ முடியுமென்று கேட்கின்றேன்!

**தவறான கருத்து**

இந்த வாக்கெடுப்பின்போது, கள்ளிறக்குந் தொழிலை மேற்கொண்டிருக்கும் ஹரிஜன நண்பர்கள் அதிகம் பங்கெடுத்துக் கொள்ள வில்லை! என்பதையும் ஈாமிங்கு குறிப்பிடத்தான் வேண்டியிருக்கின்றது. ஹரிஜன நண்பர்கள் வேண்டுமென்றே இதைச்செய்யவில்லை அவர்களிடையே யுண்டாய ஒருவகைத் தப்பபிப்பிராயந்தான் இதற்குக் காரணமாயிருக்கக்கூடுமென்று நான் எண்ணுகிறேன். சிலர் தங்கள் எண்ணத்தை வெளிப்படையாகவுஞ் சொல்லிக் கொண்டார்கள் "மதுவிலக்குப் பிரச்சாரசபையார் இப்பொழுது சாராயத்தை நீக்குவதற்கு முயற்சி செய்கிறார்கள்; இதில் அவர்கள் வெற்றி கண்டுவிட்டால், சிலநாள் பொறுத்து அவர்கள் கள்ளை நீக்கவும் முயற்சி செய்வார்கள் கள்ளை நீக்கி விட்டால் அப்புறம் நாங்கள் என்ன தொழிலைப் புரிவது? ஆகையினாலே நாங்கள் இந்தவாக்கெடுப்பில் கலந்து கொள்ளக்கூடாது" என்று சில ஹரிஜன நண்பர்கள் அங்கங்கே பேசிக்கொண்டதையும் நான் கேட்டேன் இவ்வகைத் தவறான அபிப்பிராயம் அவர்களிடையே நிலவிய படியாற் தான் அவர்களிலனேகர் இந்த வாக்கெடுப்பின் போது தீவிரபங்கெடுத்துக் கொள்ளவில்லையென்பது என் அபிப்பிராயம்.

**மக்கள் ஆதரவு**

20ம் திகதி சனிக்கிழமை காலை 8 மணிக்கு வாக்கெடுப்பு தொடங்கியது. முதலில் ஒன்றிரண்டு பேராக வாக்களிக்குமிடத்துக்கு மக்கள் வந்துகொண்டிருந்தனர். இதைக் கண்டதும் மதுவிலக்குச் சபையாரின் முகங்கள் சுண்டிப்போயின வல்வெட்டித்துறையைப்போல் இங்கும் படுதோல்விதான் கிட்டுமென அவர்கள் எண்ணிவிட்டார்கள். பார்த்துக்கொண்டு நின்ற எனக்குக்கூட நம்பிக்கை குறையத் தொடங்கிவிட்டது. இப்படியே நாள்முழுவதுமிருந்தால் நிச்சயமாகவே சாராய அரக்கனைத் தொலைக்க முடியாதென நாங்கள் எண்ணிவிட்டோம். ஆனால் இந்தச் சுமூகமற்ற நிலை வெகுநேரம் நீடிக்கவில்லை. வாக்கெடுப்பு தொடங்கி அரைமணியானதோ இல்லையோ மக்கள் அலை அலையாக வரத் தொடங்கிவிட்டனர். தேர்தல் அதிகாரிகளால் நிலைமையைச் சமாளிக்க முடியாமற்போய்விட்டது. இந்தச் சுமுகமான நிலையைக் கண்டதும் மதுவிலக்குச் சபையார் துள்ளிக்குதிக்கவும் ஒருவரையொருவர் சந்தோஷத்தால் தழுவிக் கொள்ளவும் தொடங்கி [illegible] மதுவிலக்குச் சபையைச் சேர்ந்த அவர்களைக் கண்டயாரும் "இதென்ன இது! இவர்கள் எல்லாரும் ஒவ்வொரு 'டிரும்' போட்டுவிட்டு வந்திருக்கின்றார்கள் போலிருக்கே!" என்று சொல்லத்தான் செய்வார்கள். வல்வெட்டித்துறையில் தமக்குக் கிடைத்த தோல்விக்கு இங்கு ஈடு செய்து கட்டிவிடுபவர்களைபோல அவர்கள் கூத்தடிக்கத் தொடங்கிவிட்டார்கள்.

**ஆஷாடபூதி**

இந்த வாக்கெடுப்பின்போது எனக்கு மிகவும் வியப்புண்டாக்கிய ஒரு சம்பவத்தையும் நான் இங்கு குறிப்பிட வேண்டியிருக்கின்றது மகாத்மாவின் தத்துவங்களைப்பற்றிச் சிலாகித்துப் பேசிக்கொள்பவரும் சீர்திருத்தவாதிபோல

(9-ம் பக்கம் பார்க்க)

ஒளியிற் சிறந்தது சூரிய பிரகாசம்
பீடியிற் சிறந்தது கமலா பீடியே

கமலா, லீலா பீடிகளும் பீடிக்குத் தேவையான நாகப்பூர், சிங்கறணி இலைகளும், ஆக்கூழ் நிற்பாணிபுகையிலைகளும் சகாயமான விலைக்கு பெற்றுக் கொள்ளலாம்.
வி. பி. அவசியம் கவனிக்கபபடும்.

கமலா ஸ்டோர்ஸ்
Proprietor: S. V. பொன்னம்பலம்
15, செட்டியார் தெரு கொழும்பு.
போன் 3597. தந்தி: தாமரை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை இந்தியர்களை வயிற்றில் அடிக்கும் அநீதி

## பங்கீடுப் புத்தகம் வழங்கப்படாதவர்களை இடாப்புகளில் பதியச் செய்ததேன்?

### இரண்டாவது ஆள் கணக்கெடுப்பின் இரகசியமென்ன?

இலங்கை இந்தியர்கள் "விஸா" வாங்க வேண்டுமானல் 1944முதல் இலங்கையில் வசித்து வருவதாக இமிகிரேஷன் இலாகா அதிகாரிகளைத் திருப்தி படுத்தக் கூடிய தஸ்தாவேஜுகளைக் கொண்டு நிரூபிக்க வேண்டும். பதிவுப் பிரஜையாக வேண்டுமென்றாலும் 1939 அல்லது 1946 முதல் இலங்கையில் வசித்து வருவதை நிரூபிக்க தஸ்தாவேஜுகளைச் சமர்ப்பிக்க வேண்டும்.

### தஸ்தாவேஜு ஜுரம்

அதேமாதிரி, புதிய அரிசி ரேஷன் புத்தகம் பெற வேண்டுமானல் 1949 நவம்பர் 1ந் தேதிக்கு முன்பிருந்தே இலங்கையில் வசித்து வருவதாக தகுதியான தஸ்தாவேஜுகளைக் கொண்டு உணவு இலாகா அதிகாரிகளைத் திருப்தி படுத்த வேண்டும். இல்லையேல் 1940 முதல் இலங்கையில் வசித்து வந்திருந்தாலும் அவர்களுக்கு பங்கீடுப் புத்தகங்கள் வழங்கப்பட மாட்டா. அதனல் சில வருடங்களாக ரேஷன் புத்தகங்கள் தொடர்ச்சியாக பெற்றுகொண்டிருந்தவர்கள் அநேகருக்கு இனி மேல் புத்தகங்கள் கிடைக்க முடியாத இக்கட்டான நிலைமை ஏற்பட்டிருக்கிறது. 1949 நவம்பர் 1ந் தேதி முன்பிருந்தே இங்கே வசித்து வருவதாக நிரூபிப்பது சிரம சாத்தியம். எந்தத் தஸ்தாவேஜைச் சமர்ப்பித்தாலும் அதிகாரிகளுக்கு திருப்தி ஏற்படப்போவதில்லை என்பதை இமிகிரேஷன் காரியாலயத்தில் பார்த்துவிட்டோம், எதற்கெடுத்தாலும் தஸ்தாவேஜுகளைக் கொண்டு நிரூபியுங்கள் என்ருல், அத்தலைய தஸ்தாவேஜுகளை எங்கேதான் தேடுவது?

### பட்சபாதம் ஏன்?

போதுமான அரிசி வெளிச் சந்தையில் கிடைக்கக்கூடியதாக இருப்பதால் பங்கீட்டுப் புத்தகம் வழங்கப்படாத இலங்கையரல்லாதோருக்கு (இந்தியர்களுக்கு) இதனல் கஷ்டம் ஏற்பட முடியாது என்று உணவுக் கட்டுப்பாட்டு அதிகாரி தனது அறிக்கையொன்றில் கூறுகிருர் இந்த அதிகாரியின் கூற்று விசித்திரமானது மட்டுமின்றி வேடிக்கையானதும் கூட. வெளிச்சந்தையில் விற்பனைக்கிருக்கும் அரிசியைப் பங்கீடுப் புத்தகம் வழங்கப்படாத இந்தியர்கள் மட்டுமா வாங்க முடியும்? புத்தகங்கள் வழங்கப்பட்டவர்களுந்தான் வாங்க முடியும். அப்படியானல், புத்தகங்களையே வழங்காமல் எல்லோரும் சந்தையில் அரிசி வாங்கிக் கொள்ளுங்கள் என்று கூறியிருக்கலாமே? இ. இந்தியர்களுக்கு மட்டும் ஏன் அதைக்கூறவேண்டும்? ஆகவே அது ஒருதலைப் பட்சமான பேச்சு என்பது தெளிவு.

### சூழ்ச்சியா?

நாட்டிலே பங்கீடு முறையை அமுல் நடத்திக் கொண்டே, சட்ட பூர்வமாக இங்கே வசித்துவரும் சிலருக்கு மட்டும் பங்கீடுப் புத்தகங்களை வழங்காமல், சந்தையில் அரிசி கிடைப்பதால் உங்களுக்குக் கஷ்டமில்லையென்று பொறுப்பற்ற முறையில் கூறுவது இந்நாட்டில் வாழும் மக்களில் ஒரு பகுதியினரை வயிற்றில் அடிப்பதாகும்.

இலங்கைவாழ் இந்தியர்களை இந்நாட்டிலிருந்து விரட்டுவதற்காக எடுக்கப்படும் நடவடிக்கைகளில் இதுவும் ஒன்று என்பது தெளிவாகிறது.

இப்பொழுது இலங்கை இந்தியர்கள் அனைவருக்கும் புதுவிதமான ஒரு பாரத்தைக் கொடுத்து மீண்டும் ஒருமுறை அவர்களைக் கணக்கெடுக்க ஆரம்பித்திருக்கின்றனர். இதில் ஏதோ ஒரு சூழ்ச்சி அல்லது சதி இருக்குமென்ற சந்தேகம் ஏற்பட்டிருக்கிறது.

### இரகசியம்

1949 நவம்பர் முதலாந் தேதிக்குப் பின்பு இலங்கைக்கு வந்தவர்கள்—அல்லது அந்தத் தேதிக்கு முன்பிருந்தே இலங்கையில் வசித்திருப்பதாக நிரூபிக்க முடியாதவர்கள் வீட்டுக் குடியிருப்பாளர் இடாப்புகளில் தங்களின் பெயர்களைப் பதிவு செய்ய வேண்டியதில்லை என்று முதலாவது ஆள் கணக்கெடுப்பின் போதே அறிவித்திருந்தால் அவர்கள் தங்களின் பெயர்களைப் பதிவு செய்திருக்க மாட்டார்களல்லவா?

அவர்களுக்குப் பங்கீடுப் புத்தகங்களை வழங்குவதில்லையென்ருல், அவர்களது பெயர்களையும் விபரங்களையும் குடியிருப்பாளர் இடாப்புகளில் பதியும்படி செய்ததேன்? இதில்தான் இரகசியமிருக்கிறது

### தீண்டத் தகாதவர்கள்

பதிவுமூலம் இலங்கைப் பிரஜைகளானவர்களும் இரண்டாவது கணக்கெடுப்பில் அகப்பட்டுக்கொள்கிருர்கள். இதிலிருந்து பதிவுப் பிரஜைகளுக்குள்ள உரிமைகளின் லட்சணம் வெட்டவெளிச்சமாகிறது. பதிவுப் பிரஜைகள் வம்சாவளிப் பிரஜைகளைப்போலல்லாமல் தீண்டத்தகாத ஒதுக்கப்பட்ட ஒரு கும்பலாக கருதப்படுகிருர்களென்பது கொஞ்சம் கொஞ்சமாக அம்பலத்திற்கு வருகிறது.

தோட்டத் தொழிலாளர்கள் இதனல் பாதிக்கப்படமாட்டார்களாம். அவர்களுக்கு 2வது கணக்கெடுப்பும் இருக்காதாம் 1949, நவம்பர் 1ம் திகதிக்குப் பிறகு வந்த தோட்டத் தொழிலாளருக்கும் பங்கீடுப் புத்தகங்கள் வழங்கப்படுமாம். இந்தப் பாகுபாடு ரொம்ப விசித்திரமாகத்தான் இருக்கிறது. இலங்கை இந்தியர்களில் தோட்டத் தொழிலாளருக்கு ஒரு சட்டமும், தோட்டத் தொழிலாளர் அல்லாதவர்களுக்கு மற்ருெரு சட்டமுமா?

### பகுபாடு ஏன்?


இதற்கு ஒரே ஒரு அர்த்தந்தான் இருக்க முடியும். அதாவது: தோட்டத் தொழிலாளர்கள் அல்லாதவர்களை வெளியேறும்படி நிர்ப்பந்திப்பதும், தோட்டத் தொழிலாளர்களை இன்னும் சிலகாலம் இந்நாட்டிலேயே தங்கும்படி செய்வதுமேயாகும் இந்நாட்டின் தேசிய செல்வத்தை உற்பத்தி செய்து குவித்துக் கொண்டிருக்கும் தோட்டத் தொழிலாளர்களின் உழைப்புச் சக்தியை இன்னும் சில காலத்திற்கு சுரண்ட வேண்டிய அவசியமிருப்பதுதான் அதற்குக் காரணம். அவர்களும்வெளியேறும்படியான நிர்ப்பந்த நிலைமையைச் சிருஷ்டி செய்துவிட்டால் தேசிய பொருளாதாரம் முறிந்து நாடு குட்டிச்சுவராவதோடு முதலாளிக் கும்பலின் டால்டமார டம்ப வாழ்க்கைக்கும் சாவுமணி அடிக்கப்படுமென்பது அவர்களுக்கு நன்கு தெரியும்.

இச்சுரண்டலின் அடிப்படைதான் பங்கீடுப் புத்தகங்களை வழங்கும் விஷயத்தில் இந்தியர்களிடையே பாகுபாடு காட்டக் காரணம்.

### பழிவாங்குதல்

தற்கால வாசபர்மிட் காலாவதியானவர்களுக்கு பங்கீடுப் புத்தகங்கள் வழங்கப்படமாட்டாதாம். தற்கால வாசபர்மிட் பெற்றவர்கள் 1944க்கு முன்பிருந்தே இந்நாட்டில் வசிப்பவர்கள் அவர்களுக்கும் பங்கீடுப் புத்தகங்கள் கிடையாதென்பது வடிகட்டின அவஞ்சனையாகும். அதற்கு ஆதாரமாக ஒரு வழக்கில் மாஜிஸ்ட்ரேட் அளித்த தீர்ப்பைச் சுட்டிக்காட்டி தற்கால வாசபர்மிட் காலாவதியானவர்கள் இந்த நாட்டில் வசித்திருப்பதே சட்ட விரோதம் என்று அதிகாரிகள் வாதிக்கின்றனர்

ஆனல் அந்த வழக்கு முடிவடையவில்லையென்பதும் அது சுப்ரீம் கோர்ட்டில் விசாரிக்கப்படவிருக்கிறதென்பதும் தெரிந்திருந்தும் அரசாங்கம் வாசகால பர்மிட் காலாவதியானவர்களைப் பழிவாங்க முயற்சி செய்வது அடாத செயலாகும்.



ஒரு அமெரிக்க விமானி "ஹோக்கர் ஹண்டர்" என்னும் சண்டை விமானமொன்றில் [illegible]வைப் படத்தில் காண்க.

# காதலியைக் கவர்ந்த நண்பனின்............

[3-ம் பககத் தொடர்ச்சி]

காதல் நோயினல் கஷ்டப்பட்ட அந்த பீமன் தனக்கு மாபெரும் துரோகம் செய்த நண்பனை வஞ்சம் தீர்க்க வேண்டுமென்றும் அதை மக்கள் முன்னிலையில் ஒரு கோதாவிலேயே நிறைவேற்ற வேண்டுமென்றும் திடசங்கற்பம் செய்து கொண்டார்.

### கொலைக்காண்டம்

ஆனல் அந்த நண்பனே இவரிடம் சிக்காமல் தலைமறைவாக இருந்துவந்தான். ஆகவே அவர் முகமூடி அணிந்துகொண்டு, "செந்தேள்" என்னும் பெயரையும் சூட்டிக்கொண்டு வெளிஉலகில் நடமாடத் தொடங்கினர். கடைசியில் அவரது எண்ணம் நிறைவேறியது.

அந்த நண்பன் அவரை யாரென்று தெரியாமலே அவருடன் சண்டைபோட இசைந்தான். ஆயிரக்கணக்கான ரசிகர்கள் கண்கொட்டாது பார்த்திருக்க மல்லர்கள் இருவர்களும் கோதாவில் ஏறினர்கள். கோதாவில் வைத்து நண்பனின் காதுக்குள் தான் யாரென்பதைக் கூறிய செந்தேள் நண்பனை ஒழித்துக்கட்டி விடுவது என்று முடிவு செய்தார். அவ்வளவுதான் குஸ்திச் சண்டை இரத்தம் சொட்டும் கொலைக்காண்டமாக மாறியது.

### காலை முறித்தார்

சண்டை பயங்கரமாக நடைபெற்றது. என்ன நடக்குமோ என்று எல்லோரும் 'கப்சிப்'பென்று இருந்தனர். மூன்ருவது ரவுண்டில் நண்பனைக் கீழே தள்ளி, அவனுடைய காலை இரு இடங்களில் முறித்து வஞ்சம் தீர்த்துக்கொண்டார் நமது "செந்தேள்." சண்டை முடிவடைந்தது; அத்தோடு நண்பனின் குஸ்தி வாழ்க்கையும் முடிவடைந்தது.

அன்றுமுதல் தான் யாரென்பது வெளியாகாதிருப்பதற்காக முகமூடி அணிந்து வருகிருர். தன்னைத் தோல்வி காணும்படி செய்யக்கூடிய மல்லர்கள் உண்டா என்று பார்ப்பதற்காக அவர் இப்பொழுது உலகச் சுற்றுப்பிரயாணம் செய்து வருகிருர்.

கொழும்பில் தாராசிங்கையும் தோற்கடித்து வெற்றிகண்ட இந்த மல்லர் இன்னும் கிங்கொங்குடன் சண்டைபோட வேண்டியிருக்கிறது கொழும்பில் அவர் முகமூடியைக் கிழித்தெறிய வேண்டிய நிலைமை ஏற்படுமா என்பது இனிமேல்தான் தெரிய வேண்டும்.

—எஸ். ஏ.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வங்க இலக்கியத்தின் புரட்சிக்கவி நஸ்ருல் இஸ்லாம்

## விலங்கினால் விலங்குடைப்போம் என்று காஜித்தவர்

# இன்று சோகத்தில் மூழ்கியிருப்பது ஏன்?

"சய்யித்"

வங்க இலக்கியப் பூங்காவிலே ஒரு நறுமண மலராக விளங்கும் நஸ்ருல் இஸ்லாம், இன்று வாழ்வில் வலுவிழந்தவராக இருக்கிறார். கிழக்குப் பாகிஸ்தான் அரசாங்கம் இவருக்கு மாதந்தோறும் 250 ரூபாய் இலக்கிய உதவிச் சம்பளம் அளித்துவருகிறது. இந்தியப் பிரதமர் ஜவஹர்லால் நேருவும் அண்மையில் (ஜூலை 1952) இவருக்கு 250 ரூபாய் நன்கொடையளித்து, ஒவ்வொரு மாதமும் 100 ரூபாய் வீதம் ஓராண்டுக்கு உதவபுரிவதாக வாக்களித்துள்ளார். இதையன்றி, மத்திய சர்க்காரின் கல்வியிலாகாவும் இவருக்கு இரண்டாயிரம் ரூபாய் மான்யம் வழங்கியுள்ளது. இவருடைய புரட்சிக் கவிதைகளும் பாட்டுக்களும் இன்றுகூட கிழக்கு வங்கத்திலும், மேற்கு வங்கத்திலும் நாட்டுப் பொதுமக்களால் நன்கு போற்றப்பட்டுவருகின்றன

வங்கப் பிரதேசத்தின் கவிஞர் என்று கூறலாம் காஜி நஸ்ருல் இஸ்லாம் அவர்களை. வங்க இலக்கியத்தின் 'புரட்சிக் கவி' என அவர் அழைக்கப்படுகின்றார். 'புரட்சி' என்பதைப் பற்றி அவர் எழுதிய அருமையான கவிதை அவருக்குப் 'புரட்சிக் கவி' என்னும் அடைமொழியைத் தந்துவிட்டது. அவருடைய வாழ்வு முழுதும் புரட்சி மனப்பான்மை கொண்டவர் என்ற காரணத்திற்காகவும் அவர் அவ்வாறு அழைக்கப்படுகின்றார். வங்க இலக்கிய வானிலே அவர் ஒரு வால் நட்சத்திரத்தைப் போலத் தோன்றினார்.

### சோகத்தின் உருவம்

52 வயதுடைய இக்கவிஞர் இன்னமும் உயிர் வாழ்ந்து வருகிறார் ஆனால் இருந்தும் இறந்தவரைப் போலவே இப்போது இருந்து வருகிறார். காரணம், அவர் குழப்பமுற்ற மனநிலையிலிருக்கிறார். ஒரு காலத்தில் உடலுறப் பெற்று விளங்கிய அவர் இன்று எலும்பும் தோலுமாக இருப்பது பெரிதும் இரக்கத்தக்கதாகும். அவருடைய இனிமையான குரல் எங்கோ சென்றுவிட்டது. சுருண்ட கேசத்தையுடைய அவரது அழகிய தலை முழுதும் இப்போது வழுக்கையாக இருக்கிறது. சொல்ல முடியாத வருத்தத்தைத் தாங்கவியலாது துவளுகின்றவர்போல அவரது உடல் கூனிக் குறுகிவிட்டது. இன்று அவரைக் காணச் செல்லும் நண்பர்களுக்கும், பழக்கப்பட்டவர்களுக்கும் கண் கலங்காமலிருப்பது கடினமாகவே இருக்கும்.

சுருலியா என்னும் கிராமத்தில் இவர் பிறந்தார். இந்த ஊர் பர்துவான் ஜில்லாவிலே இருக்கிறது. இவருடைய மூதாதையர்கள் பீஹாரிலிருந்து பர்துவானுக்குக் குடியேறினார்கள் எனச் சொல்லப்படுகிறது. இவருடைய பெற்றோர்களுக்கு நான்கு குழந்தைகள் இறந்து, ஐந்தாவது குழந்தையாக இவர் பிறந்தார். ஆகவே இவர் தமது பெற்றோர்களுக்குச் செல்லப் பிள்ளையாக இருந்தார் என்பதைக் கூற வேண்டுவதில்லை. அழுகில்லாத பெயராக இருந்தால்தான் குழந்தையை இஸ்ராயீல் என்னும் மரணதேவதை அணுகாது என்ற மூட நம்பிக்கையின்மீது இவருக்கு வங்க மொழியில் "துக்கு மியா" என்ற வேடிக்கைப் பெயர் இடப்பட்டது. இப் பதத்திற்குச் 'சோகத்தின் குழந்தை' என்றுபொருள். ஆனால் இவரைப்பொறுத்த வரையில் இந்தப் பெயர் முற்றிலும் உண்மையாகிவிட்டது!

### நாடோடிப் பாடல்கள்

குழந்தைப் பருவத்திலே இவர் மிகவும் குறும்புத் தனமுடையவராகத்தான் இருந்தார். கொஞ்சம்தான் படித்தார். ஆனால் வகுப்பில் யாரும் இவரை அடிக்க முடியாது. குழந்தைத்தனமான இவருடைய செயல்கள் அந்த கிராமமெங்கும் பிரசித்தமாகிவிட்டன. இதன் காரணமாக 'கேபா' — பைத்தியக்காரன் — என அழைக்கப்பட்டார். இதுவும் இவருடைய பிற்கால வாழ்வில் உண்மையாகிவிட்டது! பள்ளிக்கூடத்தில் படித்தாரோ படிக்கவில்லையோ எப்படியோ மற்றவர்களைவிட அதிகமாகத் தேர்ச்சியடைந்து பள்ளியினின்றும் வெளியேறிவிட்டார். "மாணவர் ஆசிரியர்" அல்லது "சோட்டா உஸ்தாத்ஜி" என்ற பெருமைக்கும் இவர் உரியவரானார்.

குழந்தைப் பருவத்திலேயே மத விஷயத்தில் அசாதாரணமான அக்கறை இருந்து வந்தது. உள்ளூர் பள்ளிவாசலிலே முஅஸ்ஸினைப்போல் இருந்துவந்தார் பாங்கு சொல்லுவார். இமாமாக நின்று தொழுகையை நடத்துவார். தர்காவிலோ புனித ஸ்தலங்களிலோ விளக்குகளை ஏற்றும் பணியில் ஈடுபட்டு வந்தார். மத சம்பந்தமான நாடோடிப் பாடல்களையும் இயற்றிவந்தார் அவைகள் பொருள் செறிந்து அழகாக இருக்கும்.

### நாடகங்களையும் இயற்றினார்

"ஏ, சய்யத நஸருல் இஸ்லாம்! அல்லாஹ்வை வணங்குவதில் உன் காலத்தை நீ செலவிடு. உன் வாழ்க்கையைப் பாவத்தில் கழிக்காதே. ஏனெனில், இறப்பு முது சுன்னுக்குத் தெரியாத அந்த 'மஹ்ஷர்' மைதானத்திலே அந்தப் பாவம் உன்னை வெட்கித் தலைகவிழச் செய்துவிடும்"

இந்தப் பாடல்கள் "புந்திஸ்" என புகழ்பெற்ற நாடோடிப் பாடல்களை நினைவூட்டுகின்றன. இப் பாடல்கள் மக்களுக்கு உணர்ச்சியூட்டின. கவிஞர் நஸ்ருல் இஸ்லாம் இந்தப் பழைய பாடல்களைப் படித்தே முன்னேறினார். பிற்காலத்திலே இக்கவிஞர் வங்க மொழியிலேயே அநேக "முஸ்லிம் வார்த்தைகளை"ப் புகுத்தினார்.

கிராமப் பள்ளியினின்றும் வெளியேறிய கவிஞர் கவிதைகளையும் நாடோடிப் பாடல்களையும் இயற்றுவதில் மூழ்கினார். சிறு சிறு நாடகங்களையும் இயற்றினார். இவருடைய நாடோடிப்பாடல்களை மக்கள் பெரிதும் விரும்பினர். அவர்களிடையே இவருக்கு அமோகமான வரவேற்பு இருந்தது.

உலக யுத்தமும் கல்வியும்

ஒருநாள் வீட்டில் யாருக்கும் தெரியாமல் அஸன்ஸால் என்னுமிடத்திற்குச் சென்றுவிட்டார். அங்கு வேறு எந்த வேலையும் கிடைக்காத காரணத்தால் மாதம் 5 ரூபா சம்பளத்தில் ஒரு ரொட்டிக் கடையிலே வேலை செய்து வந்தார். அங்கு வேலை செய்துவந்த இவர் எப்படியோ ஒரு முஸ்லிம் சப்-இன்ஸ்பெக்டரின் இதயத்தைக் கவர்ந்துவிட்டார். அவர் இந்த ஏழை விஷமக் குழந்தையை ஒரு மனிதனாக்கவேண்டும் என்ற எண்ணத்துடன் கிழக்கு வங்கத்திலுள்ள மைமன்ஸிங் என்னும் தன்னுடைய ஊருக்கு அனுப்பிவைத்தார்.

நஸ்ருல் அங்கே சுமார் ஒரு வருடம் தங்கியிருந்தார் ஏதோ கொஞ்சம் படித்தார், ஆனால் விஷமச் செயல்கள் அதிகமாகிவிட்டன, பின்னர் மறுபடியும் அஸன்ஸாலுக்கே சென்று, ஒரு உயர்நிலைப் பள்ளியில் சேர்ந்து படித்தார். முதல் உலகப் போர் துவங்கும் வரையில் படித்தார். பிற்காலத்தில் இவரே குறிப்பிட்டுள்ளவாறு, முதல் உலகப் போர் இவரைப் "பள்ளி வாழ்க்கையிலிருந்து பரந்த உலக" வாழ்க்கைக்கு இழுத்தது.

### ராணுவத்தில் கவிஞர்

1916ம் ஆண்டில் கவிஞர் கல்கத்தாவுக்கு ஓடி அங்கே 49ம் வங்கப் பட்டாளத்திலே சேர்ந்துகொண்டார். அப்போது இவருக்கு 17 வயது. பட்டாளத்தில் ஒரு ஊழியராகச் சேர்ந்து கராச்சிக்குச் சென்றார் அங்கிருந்து மெஸபொட்டோமியாவுக்கு அனுப்பப்பட்டார். அங்கே மிகவும் குறுகிய காலத்திலேயே 'ஹவில்தாரா'க உயர்த்தப்பட்டார் 49ம் வங்கச் சேனையிலே ஹவில்தாராக இருந்த போதுதான் நஸ்ருல் இஸ்லாம் வங்க இலக்கிய உலகிலே பிரவேசித்தார்.

போர்முகாம்களில் இருந்தவாறே கல்கத்தாவிலுள்ள வங்க மொழிப் பத்திரிகைகளுக்குப் பல கவிதைகளையும் கட்டுரைகளையும் அனுப்பிவந்தார் 'முக்தி' (மோட்சம்) என்ற நாடோடிப் பாடல் முதன் முதல் பிரசுரிக்கப்பட்டது. "அற்புதம்" என அனைவராலும் ஒருமுகமாகப் பாராட்டப்படும் பெருமையை அது அடைந்தது. அதுவரை அவர் பரீட்சைத் தாள்களில் கவிதைகளாகவே எழுதிவந்ததை அவருடைய பள்ளி ஆசிரியர்கள் மட்டுமே அறிந்திருந்தனர். ஆனால் இப்பொழுது அவருடைய கவிதைகள் இலக்கிய உலகிலும் பிரவேசித்துவிட்டன. அடுத்தடுத்துப் பலப்பல கவிதைகளைப் புனைந்தார். இவர் இருந்த சூழ்நிலை அதற்கு ஊக்கமும், ஆக்கமும் அளித்தது. "நாடோடியின் சுயசரிதை" என்னும் உரைநடைக் கட்டுரை வங்க மொழிப் பத்திரிகையொன்றில் தொடர்ந்து இவரால் எழுதப்பட்டு வந்தது. அதன்மூலம் கவிஞருடைய பெயரும் புகழும் உயர்ந்தன. இந்தச் சுய சரிதை, கவிஞருடைய இலக்கிய வாழ்க்கையில் ஒரு முக்கியமான கட்டத்தின் எல்லை'யாக அமைந்தது.

### புரட்சிக் கவிஞர்

கவிஞர் இருந்து வந்த சேனை கலைக்கப்பட்டது. இவர் கல்கத்தாவுக்குத் திரும்பி அங்குள்ள வங்க முஸ்லிம் இலக்கிய சங்கத்தின் ஆதரவில் இருந்துவந்தார். இவருடைய கவிதைகள் புரட்சிகரமாகவும், உணர்ச்சியூட்டக் கூடியவைகளாகவுமிருந்தன. வங்காளம் முழுதும் சுற்றித் திரிந்துகொண்டேயிருந்தார். இவருக்கு எதிலும் பற்றில்லை, பிடிப்பில்லை. ஆனால் எங்கு சென்றாலும் இவர் கௌரவிக்கப்பட்டார். மக்கள் கொண்டாடத் தொடங்கினர். அடிமைத்தளைகளில் கட்டுண்டு அவதியுற்றுவந்த மக்களைக் காப்பாற்றிய பெருமைக்கு உரியவைகளாயின அவரது கவிதைகள். எனவேதான் இவர் வங்காளத்திலே தலைசிறந்த கவிஞர் எனக் கருதப்படுகின்றார்.

நஸ்ருல இஸ்லாமின் எழுத்தோவியங்களுக்கு வங்க முஸ்லிம்களிடையே குறிப்பாக இளைஞர்களிடையே அடரிமிதமான ஆதரவு இருந்துவருகின்றது. 'புரட்சிக் கவிஞர்' என்று கருதப்பட்டாலும், இவர் முஸ்லிம் லீகிலோ அல்லது வேறு எந்த அரசியல் ஸ்தா

[12-ம் பக்கம் பார்க்க]






கடல் நீரை ஊடுருவி அடித்தளத்தைப் பார்க்கக் கூடிய இப்புதிய டெலிவிஷன் கெமரா பரிசோதனை செய்வதற்காக நீரில் இறக்கப்படுவதைப் படத்தில் காண்க கடலில் மூழ்கிக் கிடக்கும் கப்பல்களைக் கண்டுபிடிப்பதற்கு இக் கெமரா பெரிதும் உதவியாக இருக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜனக்குரல்

## துவேஷம் வளர்கிறது

சில தினங்களுக்கு முன்னதாக கொழும்பிலுள்ள ஒரு பஸ் நிலையத்திற்குச் சென்றிருந்தேன் அங்கே தமிழ்த் துவேஷிகள் சிலரால் "தமிழ கறதரே அப்பிட்ட தமிழ கறதரே" (தமிழ் எங்களுக்கு கரைச்சல்) என்ற சொற்கள் நிறைந்துள்ள துண்டுப்பிரசுரங்களைப் படித்து, விற்பனை செய்வதைக் கண்டேன். சிங்களவர் தமிழையும் தமிழர் சிங்களத்தையும் படிக்க வேண்டுமென்று ஆட்சியாளரும் அறிவுடைப் பெரியோரும் பகிரங்கமாக பறைசாற்றும் இக்காலத்தில், இவ்வித துண்டுப் பிரசுரங்கள் வெளியாவது, சிவபூசையில் கரடிபுகுவதைப் போலல்லவா இருக்கிறது. ஆதலால் இவ்வித துவேஷ மனப்பான்மையை மேலும் வளரவிடாது தடுப்பதற்கு ஆட்சியாளரும் தமிழ்ப் பிரதிநிதிகளும் ஆவன செய்வார்களா?

சு பற்குணம்
தெனவத்தை
பெல்மதுலே

## பெயர்க் "கொலை"

தமிழையும் தேசிய பாஷையாக்க வேண்டுமென்று கிளர்ச்சி செய்யும் நேரத்திலே தேமதுரத்தமிழோசை தெருவெலாம் முழக்கஞ் செய்யுமிக்காலத்தில் நமது கொழும்பு வீதிகளிலுள்ள பெயர்ப்பலகைகள், வினோதமான தமிழ்ப்பிரசாரஞ் செய்து வருகின்றன. "பிரதான வீதிமுன்னாலே" என்று செந்தமிழ் பேசுகிறது ஒரு பலகை "பனிதி தெரு" என்று ஓலமிடுகிறது இன்னொரு பலகை "கி" என்னுமெழுத்தைப் பார்க்கும் பொழுது இதை எழுதுவோர் தமிழ் நெடுங்கணக்கிற்கே ஓர் புதுஎழுத்தைக் கண்டு பிடித்துதவியுள்ளார்களோ என்ற ஐயம் எவர்க்குமெழலாம். இப்பேற்பட்ட "பெயர்க்கொலை" செய்யாமல் ஆங்கிலத்திலேயே அப்பெயர்களிருந்தால் அது அவர்கள் தமிழுக்குச் செய்யும் பெரிய தொண்டாயிருக்குமல்லவா?

அ. இராமச்சந்திரன்
கொழும்பு

## 1000 பேருக்கு வேலை இல்லை

கல்லோயாத் திட்டத்தின் கீழுள்ள மண்டூர்ப் பகுதியில் வேலை பார்த்துவந்த சுமார் 1000 தொழிலாளர்கள் வேலையிழந்து தவிக்கின்றனர் காரணம் கட்டட வேலைகளை கொந்தராத்தில் கொடுத்ததினாலேயாகும். வேலை இழந்த இந்த ஏழை தொழிலாளர்களுக்கு நிவாரணமளிக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா? அல்லது நிர்க்கதியாய் விட்டு விடுமா?

சி. எம். மதார்தீன்
அம்பாறை

சுதந்திரன்
SUTANTIRAN

194ஏ, தட்டாதெரு போன்: 3411

1952 டிசம்பர் மீ 28உ

# ஊக்கமது கைவிடேல்

"ஊக்கமது கைவிடேல்" என்று நம் ஔவைக் கிழவி பாடியபோது, ஒரு சிலருக்கு செயலூக்கத்தைத் தருகின்றதாகிய மதுபானத்தைக் கைவிட்டு விடாதீர்கள் என்ற அர்த்தத்தில் அவள் பாடவில்லை.

இன்னல் நேர்ந்தாலும், இடையூறு நேர்ந்தாலும், கஷ்டம் வந்தாலும், தோல்வி கண்டாலும் எடுத்த கருமத்தைப் பாதியில் விட்டுவிடாமல், கடைசிவரை குன்றாத ஊக்கத்தோடும் குறையாத ஆர்வத்தோடும் செய்து முடிக்க வேண்டும் என்று பொருள்படவே அவள் 'ஊக்கமது கைவிடேல்' என்று பொன்மொழி பகர்ந்தாள்.

யாழ்ப்பாணத்திலுள்ள மதுவிலக்கு மகாசபையினரும் தாங்கள் மேற்கொண்ட மதுவிலக்கு விஷயத்தில் ஊக்கமது கைவிடாமல் உழைத்து வருவது கண்டு அவர்களுடைய நோக்கத்தைப் பாராட்டுகிறோம்.

ஆனால் மதுவிலக்கு வெறும் சாராய விலக்காக மட்டும் இருப்பதில் அர்த்தமில்லை. சாராய விலக்கினால் கள் விற்பனவு அதிகரிக்கலாம். இது ஒரு வகையில அத்தொழிலில் ஈடுபட்டுள்ளோருக்கு பொருளாதார விமோசனம் அளிக்கக் கூடும். ஆனால் வெறும் சாராய விலக்கினால் வேறுபல விபரீதங்களும் ஏற்பட இடமுண்டு. அதாவது கள்ளச்சாராய விற்பனவு அதிகரிக்கவும், மேல் நாட்டுக் குடிவகைகளான பிரண்டி, விஸ்கி, ஜின், உவைன் முதலிய மதுபானங்களுக்கு நம் மக்கள் பணத்தைக் கொட்டித் தொலைத்து அதனால் நமது பணம் வெளிநாடுகளுக்குப் போய்ச் சேரவும், வெளிநாட்டுக் குடிவகைகளைத் தருவித்து விற்கும் நமது உள் நாட்டுப் பெருச்சாளிகள் கொழுக்கவும் இடமுண்டு

இப்படி நேரும்பட்சத்தில் மதுவிலக்கு சபைகளின் புனித நோக்கம் படுதோல்வியடைந்ததாகவே முடியும்.

மதுவிலக்கு நாட்டிற்குப் பயன்தரக்கூடியது என்பதில் நமக்கு அபிப்பிராயபேதம் கிடையாது. மதுவிலக்கினால் பல குடும்பங்களுக்கு வாழ வழிபிறக்கும் என்பதிலும் நமக்கு சந்தேகம் இல்லை. ஆனால் பரிபூரண மதுவிலக்கினால்தான் மதுவரக்கனின் கொடுமையை பரிபூரணமாகப் போக்க முடியும் என்று நாம் கருதுகிறோம். அரைகுறை மதுவிலக்கினால் நாம் எதிர்பார்க்கும் அளவிற்கு பலன் கிடைக்கும் என்று சொல்வதற்கில்லை.

படிப்படியாக மதுவிலக்கை அமுல் நடத்த முயல்வதினால் பல தலைமுறைகளுக்கு கோரிய பலன் கிட்டாது போய்விடும். மதுக் கடைகளை ஆமை வேகத்தில் ஒவ்வொன்றாக மூடும் அரசாங்கக் கொள்கையின் விளைவாக நாடு முழுவதுமுள்ள மதுக் கடைகள் எல்லாவற்றையும் மூடுவதற்கு குறைந்தபட்சம் ஒரு நூற்றாண்டாவது தேவைப்படலாம். ஆகவே அது போகாத ஊருக்கு வழிகாட்டிய கதையாகத்தான் முடியும்.

பரிபூரண மதுவிலக்கை இந்த நாட்டில் அமுல் நடத்துவது சாத்தியமா? சாத்தியந்தான். ஆனால் அப்படி பரிபூரண மதுவிலக்கை அமுல் நடத்துவதாயிருந்தால் இந்தியாவில் நடைபெற்றிருப்பதுபோல் சட்டசபையில் சட்டத்தை நிறைவேற்றினால் மட்டும் போதாது.

முதலில் மக்களுடைய மனதை மதுவிலக்கிற்கு சாதகமாகத் திருப்ப வேண்டும். இந்த அரும் பணியை ஆங்காங்கு தோன்றும் மதுவிலக்கு சங்கங்கள் வலிமைமிக்க பிரசாரங்கள்மூலம் திட்டமிட்டு தொடர்ந்து செய்துவர வேண்டும் யாழ்ப்பாணத்தில் வீசிய சூறாவளியைப்போல் ஒரேநாளில் சுழற்றியடித்துவிட்டு தூங்கிவிடுவதனால் பயனில்லை

இரண்டாவதாக, இப்போது மது இறக்குதல், மது உற்பத்தி செய்தல், மது விற்றல், விநியோகித்தல் ஆகிய தொழில்களில் ஈடுபட்டிருக்கும் தொழிலாளர்களுக்கு வேறு நல்ல உபயோககரமான, உயர்ந்த வருவாய் தரக்கூடிய, கௌரவமான தொழில்களை அரசாங்கம் ஏற்படுத்திக்கொடுக்கவேண்டும்.

இவ்விரண்டு விஷயங்களையும் செய்யாமல் மதுவரக்கனை விரட்டிவிட்டோம் என்று கூப்பாடுபோடுவதெல்லாம் வெறும் வேட்டுக்களாகவே முடியும் என்பதை எதிர்காலம் தெளிவாகக் காட்டும் என்று எண்ணுகின்றோம்.

# முக்கூட்டு மகாநாட்டைக் கூட்டுக!

—o—

## இ. இ. காங்கிரஸ் தீர்மானங்கள்

இம்மாதம் 21ந் தேதி நாவலப்பிட்டியில் நடைபெற்ற இ. இ. காங்கிரஸ் கமிட்டிக் கூட்டத்தில் நிறைவேறிய தீர்மானங்களின் சுருக்கம்:

(1) அரிசிப்பங்கீடுப் புத்தகங்கள் வழங்கப்படுவதில் வம்சாவளிப் பிரஜை, பதிவுப் பிரஜை, பிரஜைகளல்லாதோர் என்றெல்லாம் பாகுபாடு காட்டுவதைக் கண்டு இ இ காங்கிரஸ் கமிட்டி பெரிதும் கவலை கொள்கிறது இந்நாட்டில் வாழும் ஒவ்வொருவரும் உணவுப்பங்கீட்டைப் பெற அருகதை உள்ளவர்களாதலால் மனிதத் தன்மையைக் கருதி பாகுபாடின்றி அனைவருக்கும் பங்கீட்டுப் புத்தகங்களை வழங்குமாறு கா. கமிட்டி அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்கிறது.

(2) இந்தியாவுக்குப் பணம் அனுப்பும் விஷயத்தில் அரசாங்கம் கையாளும் புதிய திட்டத்தைப்பற்றி கமிட்டி விவாதித்தது பணம் அனுப்புவதில் சிலர் ஊழல் முறைகளைக் கையாள்வதைத் தடை செய்வதற்காக எடுக்கப்படும் நடவடிக்கைகளை கமிட்டி ஆதரிப்பதோடு, எல்லோரும் பாஸ்போர்ட்டைக் கொண்டுதான் பணம் அனுப்ப முடியும் என்ற சட்டம் அனாவசியமானது மட்டுமின்றி கடுமையானதும்கூட என்று கமிட்டி கருதுகிறது இது விஷயமாக ஒரு செயல் முறைத் திட்டம் வகுப்பதற்காக இ. இ. காங்கிரஸ் இந்திய சர்க்கார், இலங்கை சர்க்கார் ஆகியோர் கொண்ட ஒரு முக்கூட்டு மகாநாடு நடத்துமாறு அரசாங்கத்தைக் கேட்டுக் கொள்கிறது.

(3) இலங்கையரல்லாதவர்களுக்கு தற்காலிக வாசபர்மிட் வழங்கும் விஷயத்தில் கடுமையான முறைகளைக் கையாள்வதைக் கண்டு காங்கிரஸ் கவலைப்படுகிறது. தற்கால வாசபர்மிட்டுகளை புதுப்பிக்க மறுக்கப்படுவதோடு அதிகாரிகள் உசிதம்போல நடவடிக்கை எடுக்க இடமேற்பட்டிருக்கிறது. ஆகவே காலஞ்சென்ற பிரதமர் அளித்த வாக்குறுதிக்கிணங்க இலங்கை இந்தியர்களை வெளியேறும்படி நிர்ப்பந்திக்கக்கூடிய கொள்கையைக் கைவிடும்படியும் இந்நாட்டில் வசிப்பதற்கு எந்தெந்த தஸ்தாவேஜுகள் தேவை என்பதை வரையறுத்துத் திட்டவட்டமாகக் கூறும்படியும் கமிட்டி அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்கிறது.

(4) பிரஜாவுரிமைபெறாதவர்களுக்கு சமூக இன்ஷூரன்ஸ் வசதிகள் கிடையாதென்ற அரசாங்கத்தின் மனிதத் தன்மையற்ற முடிவை காங்கிரஸ் கடுமையாக ஆட்சேபிக்கிறது. இச்செயல் சர்வதேசிய தொழிலாளர் ஸ்தாபனத்தின் அடிப்படைக் கொள்கைக்கே முரணானது. மனித நீதிக்குப் புறம்பாக சாதாரண மனித உரிமைகள் விஷயத்தில் அரசாங்கம் பாரபட்சம் காட்டுவதைக் காங்கிரஸ் கவலையுடன் நோக்குகிறது.

இந்நாட்டில் வாழும் தொழிலாளர் அனைவருக்கும் ஜாதி, மத, இனவேறுபாடின்றி சமூக இன்ஷூரன்ஸ் வசதிகள் அளிக்குமாறு அரசாங்கத்தைக் காங்கிரஸ் கேட்டுக்கொள்கிறது.

(5) பிரஜாவுரிமை சம்பந்தமாக தற்போதைய நிலைமையையும் கமிட்டி ஆராய்ந்தது. இத்துறையில் எத்தகைய நடவடிக்கை எடுக்கலாமென்பதைப்பற்றி சிபார்சு செய்வதற்காக நியமனம் செய்யப்பட்ட உபகமிட்டி தனது அறிக்கையை சமர்ப்பிக்கும் வரை காத்திருப்பதென்று கமிட்டி முடிவு செய்கிறது.

தானே இயங்கும் கைத்துப்பாக்கிகள்

லைசன்ஸ் கிடையாது

முதலில் பாதுகாப்பு




6 வெடி கைத் துப்பாக்கி

நாடகத்திற்கும், சினிமாவிற்கும், அபாய காலத்தில் திருடர் பயத்திற்கும் மிக உபயோகமானது. வெடி தீர்க்கும் போது புகையையும், நெருப்பையும் கக்குகிறது.

உண்மை கைத் துப்பாக்கியைப் போல் தோற்றமளிப்பது.

ஒரு டஜன் இனும் தோட்டாக்களுடன் விலை ரூபா 8-00. விசேஷ செம்பினாலான ஒக்ஸிடைஸ்ட் 666ப் நம்பர் விலை ரூபா 10-00. பார்சல் தபாற் செலவு ரூபா 1-2-0.

வேறு: ஒவ்வொரு ஆர்டருக்கும் ஒரு புட்டி ரிவால்வர் எண்ணெய் இனும்.

திருப்தியில்லாவிட்டால் பணம் வாபஸ்.

கிடைக்குமிடம்:

MESSERS AMERICAN TRADING COMPANY,
(J. T. C.) Jullundur City (INDIA,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேசிய மொழிகளைக் கட்டாயப் பாடமாக்கக் கூடாதாம்

## சாவக்கச்சேரியில்.........

(5-ம் பக்கத் தொடர்ச்சி) கடித்துக்கொள்பவருமாகிய ஒருவர் வாக்குச்சீட்டுப் போட வந்தார் அவ்வாக்குச்சீட்டைப் போடப் போனபோது நானும் தற்செயலாக அவர் பின்னுல் என் வாக்குச்சீட்டைப் போடப்போனேன் அந்தப் போலிச் சீர்திருத்தவாதி சீட்டுக் கொடுக்கும் ஆபீஸர்களைப் பார்த்து "சாராயம் வேண்டுமென்முல் இந்தத் தண்டில் என்ன செய்வது?" என்று கேட்டதுமே நான் திகைத்துப்போனேன். ஆபீஸர்கள் அவரைப் பார்த்து, "சாராயம் வேண்டுமென்றுல் தண்டில் ஒன்றும் அடையாளம்பண்ணுமல் வெறுமனே மடித்துப் போட்டுவிட்டுப்போங்கள்" என்னவும் அந்த ஆஷாடபூதி சாராயம் வேண்டுமென்பதற்கு அடையாளமாக சீட்டை வெறுமனே மடித்துப் பெட்டியுள் போட்டுவிட்டுப் போய்விட்டார். இதைக்கண்டபோது "காந்தியையும், புத்தனையும், யேசுவையும் மகமதுவையும் சொல்லி உலகை ஏமாற்றும் போலி வேஷதாரிகளும் இருக்கத்தான் செய்கின்றுர்கள்" என்று எண்ணிக்கொண்டேன்.

### ஆள் பாருட்டம்

இந்த வாக்கெடுப்பின் போது சிரிப்புக்குரிய விஷயமென்னவெனில் பிரபலஸ்தர்களாகிய பாராளுமன்றப் பிரதிநிதி திரு வி. குமாரசுவாமியினதும் பட்டின சங்கத் தலைவர் திரு என். அருணசலத்தினதும் வோட்டை யாரோ கள்ளமாகப் போட்டுவிட்டதுதான் பட்டின சங்கத் தலைவர் திரு அருணசலம் அவர்கள் வோட்டளிக்க பகல் பத்தரை மணி சமயம் வந்தார்கள். பாராளுமன்றப் பிரதிநிதி பகல் பதினெரு மணிக்குமேல் வந்தார். ஆனுல் அவர்களிருவருக்கும் வாக்குச் சீட்டுப் போடும் தொந்தரவைப் பொதுமக்கள் விட்டு வைக்கவில்லை ஒருவேளை "இவ்வகைச் சத் காரியத்தில் முழுக்க முழுக்கப் பங்கெடுத்து உழைக்க வேண்டியவர்கள் நீங்களாயிருந்தும் நீங்கள் சாமானிய மக்களைப்போலவாளாவிருந்து விட்டீர்களே! ஆகையினுலே உங்களுக்கு இந்த வகையிற் பாடங் கற்பித்தாற்தான் சரி" என்று யாரும் காலிப்பயல்கள் எண்ணிக்கொண்டு அவர்களிருவரினதும் சீட்டுகளை திருட்டுத்தனமாய்ப் போட்டுவிட்டார்களோ தெரியாது. உண்மையில சாவகச்சேரிப் பட்டினததில் சாராய அரக்கனை நீக்கும் விஷயத்தில் அதிக பங்கெடுத்து உழைக்க வேண்டியவர் பட்டின சங்கத் தலைவர் திரு அருணசலமவாகள்தான அப்படிப்பட்டவர் என்ன காரணத்தினுலோ தெரியாது பகல் 10½ மணிக்குமேல வாக்களிக்க வந்ததும வாக்குச் சீட்டுக இடையாமல் உடனே திரும்பிப் போய் விட்டதும் பின் மாலை வெற்றி முடிபறிந்தவுடன் ஒலி பெருக்கியிற் பேசுவதற்காக ஓடோடி வந்ததும் எல்லாம் சிரிப்புக்குரியவைகளேயன்றி வேறென்ன?

### ஆசிரியர்களின் முன்மாதிரி

சாவகச்சேரிப் பட்டினத்தினின்றும் சாராய அரக்கனை ஓட்டுவதில் கங்கணங் கட்டிக்கொண்டு உழைத்தவர்களுக்கு நாம் நன்றி செலுத்தாமலிருக்க முடியாது சங்கத்தானை இந்துக் கல்லூரியைச் சேர்ந்த இரு வாலிப ஆசிரியர்கள் இது விஷயத்தில் அரும்பாடு பட்டுழைத்தார்கள். அவர்கள் அலைந்த அலைச்சலைப் பார்த்தால் ஒன்றில் அவர்களை சாராயக் குடியில் பட்டுப் பழுத்து இனிமேல் அதைக் கனவிலும் தொடோம் என்று விரதமெடுத்துக் கொண்டவர்களென்னவேண்டும். அன்றேல் சாராயத்தின் மகிமையை இன்னும் அறியாதவர்களேயென்று சொல்ல வேண்டும்.

### விதானைமாரின் சேவை

சாவகச்சேரிப் பட்டினத்தைச்சேர்ந்த மூன்று கிராம விதானைமார செய்த தொண்டையும் நாம் மறக்க முடியாது. "அவன் கிடக்கிறுன் குடிகாரன்; போடா எனக்கொரு மொந்தை" என்று ஒரு குடிகாரன் சொன்னமாதிரி அவர்கள் இருந்து விடாமல் மனம் வாக்குக் காயத்தோடு சாராயத் தவறணையை நீக்கும் விஷயத்தில் இந்தக் கிராம விதானைமார் செய்த சேவையைச் சாவகச்சேரி மக்கள் என்றும் மறக்க முடியாது.

முடிவாகச் சொல்லப் போனுல் புதுவருட நடுப் பகுதியில் சாராய நாதனுக்குச் சாவகச்சேரிப் பட்டினத்தில் அந்திமக் கிரியைகள் செய்வதற்கு ஏற்பாடாகிவிட்டது ஆனுல் தெய்வமேயென்று சாராயம் வேண்டுமென்று வாக்களித்த அந்தப் போலிச் சீர்திருத்தவாதி உட்பட்ட முப்பத்து மூன்று பெயருக்கும் மாத்திரம் வயிறுக்கோளாறோ வாய்வுப் பிடிப்போ ஏதும வந்துவிடாமல் இருக்க வேண்டும்.

குயுக்தியாரின் "கேட்டுப் பாருங்கள்" இவ்வாரம் இடமின்மையினுல் வெளிவரவில்லை அடுத்தவாரம் முதல் தொடர்ந்து வெளிவரும்.

—ஆசிரியர்

—டோக்கியோ

சாங்ஜாங், கோலாங் என்ற இரு வடகொரிய நகரங்களில் நவம்பர் 21-ந் தேதிக்கும், டிசம்பர் 2-ம் தேதிக்குமிடையே இருமிக் குண்டுகளை அமெரிக்கவிமானங்கள் வீசியதாக வடகொரிய ரேடியோ குற்றஞ் சாட்டியது.

## ரஞ்சிதம்

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

"பிரேமாவதியை எதிரி கொன்றமைக்கு கற்பிக்கப் பட்ட நியாயப் பொருத்தமாகத்தான் தோன்றுகின்றது. ஆனுல் சமரவீராவை எதிரிதான் கொன்றுர் என்பது ருசுவாகும்வரை இந்த நியாயம் ஏற்புடையதாகாது, எதிரியின் கையில் ரிவால்வர் இருந்ததால் அவர் கொலையாளியாகி விடமாட்டார், ரஞ்சிதத்தை தேடிக் கொண்டு சென்ற எதிரி உயிர் போகுந்தறுவாயிலிருந்த பிரேமாவதியின் சோகக்கதையைக் கேட்டு விட்டு தான் செய்யும் காரியத்தால் ஏற்படக்கூடிய லாப நஷ்டத்தை உணர முடியாத மன நிலையில் ரிவால்வரைக் கையிலெடுத்துக் கொண்டு ரஞ்சிதத்தைதேடி ஒவ்வொரு அறையாகப் பார்த்திருக்கிறுர். எதிரி கொலை செய்ததை நேரில் கண்ட சாட்சிகள் இல்லை. சந்தர்ப்ப சாட்சியங்களும் சந்தேகத்துக்கிடமளிக்கின்றன. சந்தேகத்துக்கிடமான சாட்சியங்கள் எதிரிக்குச் சாதகமாக பயன்படுத்தப்பட வேண்டும்"

பாரிஸ்டர் சிற்றம்பலம் தமது கட்சியை எடுத்துரைத்த பின்னர் நீதிபதி ஜூரர்களுக்கு வழக்கைத் தொகுத்துரைத்தார். ஜூரர்கள் கூடி யோசித்து ஒரு முடிவுக்கு வருவதற்காக தமது அறைக்குச் சென்று ஐந்தே நிமிஷத்தில் திரும்பி வந்து எதிரி, அவர் மீது சுமத்தப்பட்ட சகலமான குற்றங்களுக்கும் குற்றவாளிதான் என்று ஏகமனதாக முடிவு செய்திருப்பதாகக் கூறினர். இதைக் கேட்டதும் பாரிஸ்டர் சிற்றம்பலத்தின் முகம் கறுத்தது. ரஞ்சிதத்தின் கண்களில் கண்ணீர் வந்தது. அவளுக்கு மயக்கம் வரும்போலிருந்தது. நீதிபதி கண்ணுடியை எடுத்து மாட்டிக்கொண்டு தீர்ப்புக் கூறத் தயாரானுர். மனோகரன் அவருடைய முகத்தையே பார்த்துக்கொண்டு தைரியத்தோடு நின்றுகொண்டிருந்தான்.

அப்பொழுது துப்பறியும் கோபாலன், மீனுட்சியையும் சிவபாலனையும் அழைத்துக்கொண்டு ஒரு காகிதப் பொட்டணத்தோடு கோர்ட்டுக்குள் நுழைந்தார். அவர் நீதிபதிக்கு வணக்கம் தெரிவித்துவிட்டு பிரேமாவதி கொலை வழக்கு சம்பந்தமாக தனக்கு சில சாட்சியங்களும் ருசுக்களும் அகப்பட்டிருப்பதாகக் கூறி அவற்றைக் கோர்ட்டார் முன்பு சமர்ப்பிப்பதற்கு அனுமதி கோரினுர். அப்பொழுது கோர்ட் கலையும் நேரமாகிவிட்டதால் நீதபதியவர்கள் துப்பறியும் கோபாலனுக்கு அவருடைய சாட்சியங்களையும் ருசுக்களையும் மறுநாள் கோர்ட்டில் [illegible] ஒதுக்கி வைத்தார்.


## பிரதம மந்திரி தீர்ப்புக் கூறுவாரா?

ஜி. ஸி. ஈ. பரீட்சைக்கு தேசிய மொழிகளைக் கட்டாயப் பாடமாக்கக் கூடாதென்று லண்டன் பல்கலைக் கழகம் செய்துள்ள முடிவை எதிர்த்து தேசிய மொழிக்குழு அரசாங்கத்தினிடம் ஆட்சேபனை தெரிவித்திருக்கிறது.

தேசிய மொழிகளை அரசகரும மொழிகளாக்கவேண்டுமென்ற அரசாங்கத்தின் கொள்கைக்கு பிரஸ்தாப முடிவு முரண்பட்டது என்பதை தேசிய மொழிக்குழு சுட்டிக்காட்டியிருக்கிறது.

இது விஷயமாக தீர்ப்புக் கூறுமாறு இக்குழு பிரதம மந்திரியைக் கேட்டுக் கொண்டிருப்பதாகத் தெரிகிறது.

தோட்டத் தொழிலாளருக்கு
(இப்போது தயாராகிவிட்டது),
நானுவித தொழில்]சம்பந்தமான
தினக் குறிப்பு (பாக்கெட் செக்ரோல்)
உபயோகமான சட்டதிட்டங்களுடன் கூடியது.
வேலை சம்பந்தப்பட்ட எல்லா விஷயங்களும் குறித்து வைத்துக்கொள்ளலாம் 4 பேர் கொண்ட குடும்பத்திற்கு ஒரு புத்தகம் போதும்.
எல்லா இடங்களிலும் முன்பணம் கட்டக்கூடிய ஏஜண்டுகள் தேவை.
வேண்டுவோர் கீழ்க்கண்ட விலாசத்திற்கு எழுதவும்.
விலை 50 சதம்தான்!
ஸ்ரீ சித்ரா ஸ்டோர்ஸ்
எட்டியாந்தோட்டை.

இரும்புப் பணப் பெட்டிகள்
லண்டன் நகர ஜோண்டான் லிமிட்டெட்டாரால் உற்பத்தி செய்யப்பட்டவை.
1795-ம் ஆண்டில் ஸ்தாபிதம் - மிகப் பழைய ஸ்தாபனம் - உலகத்திலேயே மிகக் கைதேர்ந்த க்ஷேமயந்திர சிற்பிகள்
நெருப்பைத் தடுக்கும் ஒரு ஜோன்டான் இரும்புப் பெட்டியாவது அதனுள் உள்ள பொருள்களை இதுவரை நெருப்பால் நாசப் படவில்லை

கள்வர்களைத் தடுக்கும் ஒரு ஜோன்டான் இரும்புப் பெட்டியாவது இதுவரையில் கள்வர்களால் திறக்கப்படவில்லை
டொட்வெல் & கம்பெனி லிமிட்டெட்.
ஆபீஸ் பொருட்கள் விற்பனை பகுதி
18/20, குவீன்ஸ் வீதி கோட்டை கொழும்பு
போன்: 2301

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சோமாவதி

எஸ்.டி.சிவநாயகம்

எச். எம். எஸ். பர்மிங்ஹாம் என்ற யுத்தக் கப்பல் ஆழமான வங்காள விரிகுடாவின் அலைகளைக் கிழித்துக் கொண்டு திருகோணமலை துறைமுகத்தை நோக்கிப் போய்க்கொண்டிருந்தது.

உலகின் பிரக்கியாதி பெற்ற துறைமுகங்களில் ஒன்றினுள் நுழையப்போகிறோம் என்ற பெருமிதத்தினால் உச்சாணி ஸ்தம்பங்களில் ஏற்றப்பட்டிருந்த யூனியன் ஜாக் கொடிகள் கோணமலையைத் தழுவி வந்த குளிர் காற்றுப் பட்டுத் துடிதுடித்தன.

சொப்பன உலகத்தில் மிதக்கும் ஒரு அற்புத மாளிகையென ஊர்ந்து சென்ற அந்தக் கப்பலின் மேல் தளத்தில் ஓரத்துக் கம்பிகளைப் பிடித்தவாறு திஸநாயகா நின்றுகொண்டிருந்தான்.

நிர்மலமான ஆகாயத்தில் அரும்பிறைச் சந்திரன் ஜொலித்துக் கொண்டிருந்தது. அதைச் சுற்றி ஒரு கூடை மல்லிகைப் பூக்களை நிலாவில் இறைத்ததுபோல் தாரகைகள் செறிந்துகிடந்தன.

வலது கரத்தைக் காற்சட்டையின் பையுள் புகுத்தியவாறு ஆகாயத்தை நிமிர்ந்து பார்த்தான் திஸநாயகா. அந்த பிறைச் சந்திரன் அவனுக்கு சோமாவதியின் பிறை நெற்றியை ஞாபகமூட்டிற்று.

கொட்டியாபுரத்தை அடுத்துள்ள கெவுளியாவின் கலங்கரைத் தீபஸ்தம்பம் சுழன்று சுழன்று சுடரொளியை வீசிக்கொண்டிருந்தது. அந்த ஒளியைத் திசைபிடித்து எச். எம். எஸ். பர்மிங்ஹாம் முன்னேறிக் கொண்டிருந்தது. ஆனால் திஸநாயகாவின் சிந்தனையோ திசைகெட்டு சுழன்று சுழன்று ஒன்பது வருடங்கள் பின்னேறியது.

1939ம் வருடம் ஜெர்மனி யுத்தம் ஆரம்பித்தபோது திஸநாயகாவுக்கு வயது பதினெட்டிருக்கும். திருகோணமலையிலுள்ள செனட் ஜோசப் கல்லூரியில் ஏழாம் வகுப்பில வாசித்துக் கொண்டிருந்தான். நல்ல கட்டுமஸ்தான தேகமும் வயதுக்கதிகமான தோற்றமும் உடையவனாகவிருந்தான் திஸநாயகா.

அவன் தந்தை ஆரன்ஸ் சில்வா சீனன்வாடியில் எண்ணெய்த் தாங்கிகளுக்கு வர்ணம் பூசும் பெயின்டராக வேலை பார்த்தான். நல்ல சம்பளம்; ஆனால் நித்தியக் குடிகாரன். அதனால் எப்போதும் கடனாளி. வீட்டையும் குடும்பத்தையும் கவனிப்பதேயில்லை. சம்பளம் எடுக்கும் தினத்தன்று வீட்டுக்கே வரமாட்டான். அடுத்த அடுத்த தினம் காலியான மடியோடு வீட்டுக்கு வருவான். நிதானம் கெட குடித்துவிட்டு தெருக்களில் விழுந்து எழும்பியதனால் நெற்றியிலும் முழங்கை முழங்கால்களிலும் காயம் பட்டிருக்கும். திஸநாயகாவின் தாய் ஜேன் நோனா தன் கணவனின் காயங்களுக்கு மருந்து தடவுவாள். அக்கம் பக்கத்தில் கடன்பட்டு சாப்பாடு போடுவாள். இரண்டு நாள் படுத்துக் கிடந்துவிட்டு வேலைக்குப் போவான் ஆரன்ஸ் சில்வா. திரும்பவும் இதே சம்பவந்தான். இதனால் வீட்டில் தரித்திரம் தாண்டவமாடியது.


ஒரு சின்னஞ்சிறு வீட்டில் திஸநாயகா அவனுடைய எட்டு வயதான சகோதரி சோமாவதி தாய் ஜேன் நோனா, தந்தை ஆரன்ஸ்ஸில்வா ஆகியோர் வசித்து வந்தனர். குடிகாரத் தந்தை குடும்பத்தைக் கவனிக்காமல் நடந்ததனால் ஜேன் நோனா திஸநாயகாவையும் சோமாவதியையும் வளர்ப்பதற்கு பட்ட கஷ்டம் கொஞ்ச நஞ்சமல்ல. நிலக்கடலையையும் எள்ளையும் வறுத்து சர்க்கரைப் பாகுகாய்ச்சி ஊற்றி "கொடுதியால்" செய்து அதை விற்று வாழ்க்கை நடத்த வேண்டியிருந்தது.

தாய்படும் கஷ்டத்தைப் பார்க்கும்போது திஸநாயகாவுக்கு மிகவும் சங்கடமாயிருக்கும். தங்கை சோமாவதிமீது அவன் உயிரை வைத்திருந்தான். அவளுக்கு நல்ல ஆடையில்லையே நல்ல அலங்காரம் இல்லையே என்று அவன் கவலைப்பட்டதுண்டு. ஒரு நல்ல வேலை தேடிக்கொண்டு அவர்களைக் காப்பாற்ற வேண்டும் என்று பல சந்தர்ப்பங்களில் அவன் ஆசைப்பட்டான்.

யுத்தம் ஆரம்பித்ததும் இலங்கையிலும் படை திரட்டினார்கள் வெளிநாடுகளில் சுற்றிப் பார்க்க வேண்டும் என்ற எண்ணம் திஸநாயகாவுக்கு இயற்கையிலேயே இருந்தது. ஆர். ஏ. எஸ். ஸி. படையில் அவன் கல்லூரித் தோழர்கள் பலர் சேர்ந்தார்கள். திஸநாயகாவும் ஆர். ஏ. எஸ். ஸியில் சேர்வதென்று முடிவு செய்தான். தாய் அழுது புரண்டு வேண்டாம் என்றாள். அந்தப்படையில் சேர்ந்தால் யுத்தகளத்தில் நேரில் இறங்கிப் போரிடுவதில்லையென்றும் பின்னணியில் இருந்து தளவா[illegible]ளை உதவுவதுதான் தங்கள் கடமையாயிருக்கும் என்றும் திஸநாயகா தாய்க்கு சமாதானம் கூறினான்.

தங்கை சோமாவதியை விட்டுப் பிரிவது அவனுக்கு சங்கடமாயிருந்தது. யுத்தத்தின் கோரத்தை ஒன்றையும் சோமாவதி அறியமாட்டாள். அதை உணர முடியாத வயது அவளுக்கு. ஆனால் அண்ணன் தன்னை விட்டுப் பிரிந்து வேறு எங்கோ தூரதேசம் போகப் போகிறான் என்பதுமட்டும் அவளுக்குத் தெரிந்தது. அவள் கண்ணீர் விட்டாள். 'என்னையும் அழைத்துப் போ, அண்ணா" என்றாள். "நீ விட்டுப் போனால் உன்னை நான் எப்படிப் பார்த்துக்கொண்டிருப்பது?' என்று திஸநாயகாவின் கழுத்தைக் கட்டிக் கொண்டு கொஞ்சினாள். சாப்பிட மறுத்தாள். திஸநாயகாவுக்கு அவளைச் சமாதானப் படுத்துவது பிரம்மப் பிரயத்தனமாகிவிட்டது.

"கண்ணே சோமா, வா இருவரும்போய் ஒரு போட்டோபடம் எடுத்துக்கொள்வோம். நான் வெளியூரில் இருக்கும்போது நீ அந்தப் போட்டோவை வைத்து என்னைப் பார்த்துக் கொள்ளலாம். நானும் ஒரு பிரதியை வைத்துக் கொள்வேன்" என்று திஸநாயகா கூறி அவளைச் சமாதானப் படுத்தினான். அதன் பின்புதான் அவள் உணவருந்தினாள். வயது எட்டேயானாலும் அந்தச் சிறுமியின் சகோதரப் பாசத்தை மறக்க முடியாதவனாக மறுநாள் புறப்பட்டான திஸநாயகா.



இடுப்பில் ஒரு துண்டும் ரவிக்கையும் அதன் மேல் ஒரு துவாய்த் துண்டும் அணிந்தவாறு அங்கு சுமார் நாற்பத்தைந்து [illegible] காணப்பட்டாள். [illegible] மூன்று இளம் பெண்கள் நடமாடினர்.

கப்பலின் மேல் தளத்தில் நின்ற திஸநாயகாவின் மனத்திரையில் ஒன்பது வருஷங்களுக்கு முன்பு நடந்த இச்சம்பவங்கள் எல்லாம் ஒரு சலனப்படச் சுருள்போல் குலைந்தன. இந்த ஒன்பது வருஷங்களிலும் அவன் எகிப்து, ஜிப்ரால்டர், கிரீஸ், ரோம் ஆகிய இடங்களில் எல்லாம் கடமை பார்த்து, யுத்தத்தை நேரில்பார்த்து, வாழ்க்கையின் பல்வேறு கோணங்களையும் பார்த்து, இன்று இருபத்தேழு வயது துக்காளையாக பிறந்தநாட்டிற்குத் திரும்புகிறான்.

வெளியூருக்கு சென்று ஒரு வருடகாலம் தாய்க்கும் தங்கைக்கும் கடிதமும் பணமும் அனுப்பிக் கொண்டுவந்தான் திஸநாயகா. இரண்டு வருடத்தில் யுத்தம் உக்கிரமான கட்டத்தை அடைந்தது. அப்போது அவன் எகிப்தில் இருந்தான். இராணுவ இரகசியங்கள் பந்தோபஸ்தாகக் காக்கப்பட வேண்டியிருந்ததனால் கடிதத் தணிக்கை அதிகமாயிற்று. வெளியூருக்கு கடிதம் அனுப்பக் கூடாதென படையினர் கட்டுப்படுத்தப் பட்டனர். அதன் காரணமாக திஸநாயகாவும் வீட்டிற்கு கடிதம் எழுத முடியவில்லை. இரண்டு வருடங்களுக்குப் பின்பு அவன் ரோமம்போய்ச் சேர்ந்ததும் வீட்டிற்கு கடிதமும் பணமும் அனுப்பினான். விலாசதார் இல்லையென்று அவை திரும்பிவந்து அவனிடமே சேர்ந்தன. ஒருவேளை அவர்கள் வீடுமாறியிருப்பார்கள் என்று அவன் எண்ணினான்.

ஒன்பது வருடங்களாக அவன் இலங்கையின் பக்கமே வரமுடியவில்லை. இப்போதுதான் வர முடிந்தது. அதுவும் அவன் இலங்கையில மூன்று தினங்கள் தான் தாமதிக்க முடியும். அவன் வந்துகொண்டிருக்கும் கப்பல் மறுநாள் காலையில் திஸநாயகாவைத் திருகோணமலையில் இறக்கிவிடும். கப்பல் இரண்டு தினங்கள் திருகோணமலையில் தாமதித்து மூன்றாவது நாள் கொழும்பை அடையும்போது அவன் கொழும்பில் வைத்துக் கப்பல் ஏற வேண்டும். அவனுக்கு சிங்கப்பூரில் கடமை காத்துக்கொண்டிருந்தது.

ஒன்பது வருடங்களுக்குப் பிறகு, அதாவது 1948-ம் ஆண்டில் திருகோணமலையில் வந்திறங்கிய திஸநாயகாவிற்கு திருகோணமலை ஒரு புதிய இடம்போல் காட்சியளித்தது. புதுப் புதுக் கடைகளும் புதுப்புதுக் கட்டடங்களும் அதிகரித்துள்ள ஜனநடமாட்டமும் அவனை ஆச்சரியத்துள்ளாக்கின. அவன் அவசர அவசரமாக தன் வீட்டை நோக்கி ஓடினான். தங்கையையும் தாயையும் காணவேண்டும் என்ற தாபம் அவன் மனதில் பிரவகித்தது.

ஒன்பது வருடங்களுக்கு முன்பு அவர்கள் இருந்த வீட்டில் இன்று ஒரு மலையாளி தேநீர்க்கடை வைத்திருந்தான். அந்த மலையாளிக்கு ஜேன் நோனாவைப் பற்றியோ அன்றி சோமாவதியைப் பற்றியோ எந்த விவரமும் தெரியவில்லை. அக்கம்பக்கத்தில் ஓடியாடி விசாரித்தான். யாருக்குமே தெரியவில்லை. மூன்று நான்கு வீடுகளுக்கு அப்பால் இருந்த ஒரு கிழவி மட்டும் ஏதோ சில விவரங்களைக் கூறினாள். அதாவது திஸநாயகா பட்டாளத்தில் சேர்ந்த சில மாதங்களுக்கெல்லாம் அவன் தந்தை ஆரன்ஸ் ஸில்வா சீனன் வாடியில் ஏதோ பெயின்ட் டின்களைத் திருடி விற்றதாகக் கண்டுபிடிக்கப்பட்டு சிறைச்சாலைக்கு அனுப்பப் பட்டதாகவும் அதன்பின் அவன் என்ன ஆனான் என்று தெரியவில்லையென்றும் அந்தக்கிழவி கூறினாள்.

"அம்மாவும் சோமாவதியும் எங்கே?" என்று கேட்டான் திஸநாயகா.

"1942-ம் ஆண்டு ஜப்பானிய விமானங்கள் திருகோணமலையில் குண்டுகளைப் பொழிந்த விவரம் உனக்குத் தெரியும் அல்லவா? அப்போது மக்கள் அனைவரும் தத்துக்கெட்டுத் தறிகெட்டு வேற்றூருக்கு புறப்பட்டு கால்நடையாக, இரவிரவாகச் சென்றார்கள். அந்த நேரத்தில் ஜேன் நோனா ரொம்பவும் வருத்தமுற்றிருந்தாள். ஆயினும் அவள் சோமாவதியையும் அழைத்துக் கொண்டு கால் நடையாக சென்றாள். பாதி வழியில் நோய் அதிகரித்து மரணமானாளாம். சோமாவதியை யாரோ வீட்டு வேலைக்காரியாக அழைத்துச் சென்றார்களாம்" என்றாள் அந்தக் கிழவி.

திஸநாயகாவின் கண்களில் நீர் துளித்தது. சகிக்க முடியாத துக்கம் அவன் மார்பை அடைத்தது. மேற்கொண்டு அவனால் அங்கு நிற்க முடியவில்லை; அன்று முழுவதும் அவன் பித்துப் பிடித்தவன்போல் திருகோணமலையின் வீதிகளில் சுற்றியலைந்தான். அவனைக்கண்ட மற்றும் சிலர் அந்தக் கிழவி கூறிய விவரங்களையே ஊர்ஜிதம் செய்தனர். மறுநாள் திஸநாயகா கொழும்பிற்குப் புறப்பட்டான்.

திஸநாயகா கோட்டை ஸ்டேஷனில் இறங்கியதும்

]11-ம் பக்கம் பார்க்க]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சோமாவதி

[10-ம் பக்கத் தொடர்ச்சி]

ஒரு பழைய நண்பன் அவனை அடையாளம் கண்டுகொண்டான். அவன் பெயர் சைமன்.

திஸநாயகா தன்னுடைய தீராத துயரத்தை சைமனிடம் வெளியிட்டான். ஆனால் சைமனே அதைப் பற்றிக் கவலைப்படவில்லை. "இதெல்லாம் வாழ்க்கையில் ஏற்படுவதுதானே, திஸா. நீயோ ஒரு போர் வீரன். இதையெல்லாம் பொருட்படுத்துவதா? வா ஒரு ட்ரிங்ஸ் எடுட்போம்" என்று அவனை கொலோனியல் ஹோட்டலுக்குள் அழைத்துச் சென்றான்.

முதலில் திஸ்நாயகா சற்றுத் தயங்கினான். அவன் குடிப்பழக்கம் முற்றும் இல்லாதவனல்ல. ஆனால் அவன் மனோ நிலை அப்போது அப்படியிருந்தது. முடிவில் இருவரும் நன்றாகக் குடித்துவிட்டு வெளியேறினார்கள்.

இரவு வந்தது. "திஸா, நீ எங்கேபோய்ப் படுத்துக் கொள்ளப் போகிறாய்?" என்று சைமன் கேட்டான். "எங்காவது ஒரு ஹோட்டலில் போய்ப் படுத்துக் கொள்கிறேன். விடியற் காலையில் நான் கப்பலுக்குப் போய்ச் சேரவேண்டும்" என்றான் திஸநாயகா.

"அப்படியானால் நீ என்னோடு வருகிறாயா? அழகான ஒரு குட்டியிடம் கொண்டுபோய் விடுகிறேன். காலையில் நீ எழுந்து போய்விடலாம்" என்றான் சைமன்.

பட்டாளத்தில் சேர்ந்தவர்கள் விபசார விடுதிகளில் இரவுகளைக் கழிப்பது ஒன்றும் புதிய காரியமல்ல. இந்தப் பழக்கம் எகிப்தில் ஒரு முறை திஸநாயகாவிற்கு ஏற்பட்டதுண்டு. அப்போதிருந்த மனோ நிலையிலும் மது மயக்கத்திலும் "ரொம்பசரி" என்றான் திஸநாயகா.

கொம்பனித் தெருவில் ஒரு சந்தினுள் இருவரும் நுழைந்தனர் தாழ்ந்த தாழ்வாரத்தையுடைய ஒரு வீட்டினுள் சைமன் திஸநாயகாவை அழைத்துச் சென்றான். உள்ளே ஒரு மண்ணெண்ணெய் லாந்தர் விளக்கு சுவரில் மங்கலாக எரிந்து கொண்டிருந்தது. இவ்விருவரையும் கண்டதும் உள்ளேயிருந்த ஒரு முரட்டுத் தடியன் மெதுவாக வெளியேறினான். இடுப்பில் ஒரு துண்டும் ரவிக்கையும் அதன் மேல் ஒரு தவாய்த் துண்டும் அணிந்தவாறு அங்கு சுமார் நாற்பத்தைந்து வயது மதிக்கக் கூடிய ஒரு பெண் காணப்பட்டாள் வீட்டின் உட்புறத்தில் இரண்டு மூன்று இளம் பெண்கள் நடமாடினர். சைமன் வெளியிலிருந்த பெண்ணிடம் "இந்த மாத்தயா, இன்று இரவு இங்கு தங்குவார்" என்றான். அந்தப் பெண் நெடு நெடுத்த பற்கள் முழுவதையும் வெளியில் காட்டியவாறு "போம ஹரி" என்றாள். சைமன் திஸநாயகாவை விட்டுப் பிரிந்தான்.

அந்தப் பெண் திஸநாயகாவை அறைக்குள் அழைத்துச் சென்றாள். உள்ளே ஒரு கட்டில் காணப்பட்டது அந்த அறையுள்ளும் ஒரு மண்ணெண்ணெய் விளக்கு மிக மங்கலாக எரிந்துகொண்டிருந்தது. அங்கு நின்றவாறே அந்த பெண் "பொடி ஹாமி, பொடி ஹாமி" என்று கூப்பிட்டாள். ஒரு இளமை குன்றாத அழகு சுந்தரி உள்ளே வந்தாள். "இந்த மாத்தயாவைக் கவனித்துக் கொள்" என்று கட்டளையிட்டுவிட்டு திஸநாயகாவைப்பார்த்து "மாத்தயா" என்று கையை நீட்டினாள். திஸநாயகா அவள் கைக்குள் ஒரு பத்து ரூபாய் நோட்டைத் திணித்தான். வயதுவந்த அந்தப் பெண் வெளியேறினாள். யுவதி உள்ளே நின்றாள். அறையின் கதவு வெளியிலிருந்து சார்த்தப்பட்டது.

* * *

மறுநாள் காலையில் திஸநாயகா ஒரு சிகரட்டைப் புகைத்தவாறு கொழும்புத் துறைமுகப் பாலத்தில் இறங்கிக் கொண்டிருந்தான் இன்னும் சிறிது நேரத்தில் எச். எம். எஸ். பர்மிங்ஹாமுக்கு அவனை ஏற்றிச் செல்வதற்கான மோட்டார் லாஞ்சி அந்தப் பாலத்தை அடையும். அதன் வரவை எதிர்பார்த்தவனாக அங்கு நின்று கொண்டிருந்தான். பாலத்தின் ஒரு புறத்தில் ஏதோ மராமத்து வேலை நடைபெற்றுக் கொண்டிருந்தது. அங்கு ஒரு தூணுக்கு வர்ணம் பூசிக்கொண்டிருந்த ஒரு கிழவன் தன் கையில் வைத்திருந்த குறைச் சிகரட்டை மூட்டுவதற்கு திஸநாயகாவிடமிருந்து நெருப்புக் கேட்டான். திஸநாயகா தன் கையிலிருந்த சிகரட்டை அவனிடம் கொடுத்தான் திரும்ப அந்த சிகரட்டை கிழவன் நீட்டிய போது "வேண்டாம் நீயே கொண்டுபோ" என்றான் திஸநாயகா அலட்சியமாக. அந்த சமயத்தில் ஒரு இளம் பெண் தன்னை நோக்கி ஓட்டமும் நடையுமாக விரைந்து வருவதை திஸநாயகா கவனித்தான். சமீபத்தில் வந்ததும் அவள் வேறு யாருமல்ல தன்னோடு இரவைக் கழித்த அந்த பொடி ஹாமிதான் என்பதை திஸநாயகா அறிந்து கொண்டான்.

"பொடி ஹாமி, என்ன இத்தனை அவசரம்?" என்றான் திஸநாயகா.

"ஒன்றுமில்லை. நீங்கள் புறப்பட்டு வந்ததும் கட்டிலைத் தட்டிப் போட்டேன். தலையணையின் அடியில் இதோ இந்த மணிபேர்ஸ் காணப்பட்டது. நீங்கள் மறந்துபோய் விட்டுவிட்டு வந்துவிட்டீர்கள் அதைத் திறந்து பார்த்தேன் நிறைய பணம் இருந்தது வீட்டில் யாரிடமும் சொல்லிக் கொள்ளாமல் இதை உங்களிடம் சேர்ப்பதற்காக இங்கு ஓடிவந்தேன்" என்றாள் பொடிஹாமி.

"இப்படியும் ஒரு விபசாரி உண்டா?" என்ற ஆச்சரியம் திஸநாயகாவிற்கு ஏற்பட்டது. விலைமாதர் என்றால் பணம் பிடுங்கும் பிசாசுகள் என்றல்லவோ எல்லோரும் கருதுகின்றனர். மணிபேர்சுடன் நூற்றுக்கணக்கான ரூபாய்கள் அகப்படுகின்றன. உடையவன் ஊரில் நிற்கப் போவதில்லை. இன்னும் சற்று நேரத்தில் கப்பலிலேறி எங்கோ செல்லப் போகிறான். இவ்வளவும் தெரிந்தும் பணத்தை உடையவனிடம் சேர்க்கவரும் இவள் உடலில் விபசாரியாய் இருக்கலாம். உள்ளத்திலும் அப்படியிருக்க முடியுமா?

"பொடி ஹாமி, உன்னைப் போன்ற ஒரு உத்தமப் பெண்ணை நான் கண்டதில்லை. இப்படியான மனோபாவம் உள்ள நீ ஏன் இந்த இழிதொழிலில் ஈடுபட்டிருக்கிறாய்?" என்று கேட்டான் திஸநாயகா.

பொடி ஹாமியின் கண்களிலிருந்து நீர் தாரை தாரையாக ஓட ஆரம்பித்தது "நானா ஈடுபட்டேன்? விதி என்னை ஈடுபடுத்தி விட்டது. ஒரு பங்களாவில் வீட்டு வேலைக்காரியாக இருந்த என் வயிற்றை அந்த வீட்டு எஜமானியின் தம்பி ஆசைவார்த்தை காட்டி ஊதவைத்துவிட்டான். மானத்தைக் காப்பாற்ற அங்கிருந்து வெளியேறி இந்த வீட்டில்வந்து சேர்ந்து குழந்தையைப் பெற்றேன். அந்தக் குழந்தையை அந்த ராட்சசியும் அவளோடிருக்கும் அந்த முரடனுமாகச் சேர்ந்து கழுத்தைத் திருகிக் கொன்று வீட்டின் பின்புறம் புதைத்துவிட்டார்கள். அதன்பின் அவர்களே என்னைக் கட்டாயப்படுத்தி இந்த இழிதொழிலில் ஈடுபடுத்தினார்கள். மறுத்தால் நான் கள்ளக் குழந்தை பெற்றுக் கொலை செய்து புதைத்ததாக என்னைப் போலீஸில் பிடித்துக் கொடுத்து விடுவதாகப் பயமுறுத்தினார்கள்" என்று கூறி ஓவென் றழுதாள் பொடி ஹாமி.

திஸநாயகாவிற்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை. பரிதாபமும் இரக்கமும் அவனுக்கு ஏற்பட்டது. "பொடி ஹாமி இந்த மணிபேர்சுக்குள் சுமார் 200 ரூபாய் இருக்கிறது. அதை நீயே வைத்துக் கொள். நான் கப்பலுக்குப் போனால் எனக்கு அங்கு பணம் கிடைக்கும். நான் பார்த்துக்கொள்ளுகிறேன். நீ இந்த 200 ரூபாய்களையும் கொண்டு எப்படியாவது அந்தப் பேய்களிடமிருந்து தப்பிப்பிழை" என்று கூறிவிட்டு நடந்து சென்றான் திஸநாயகா. பொடி ஹாமி கற்சிலை போல் அங்கு நின்றுகொண்டிருந்தாள்.

சற்று தூரம் சென்ற திஸநாயகா திடீரெனத் திரும்பி "பொடி ஹாமி அந்தப் பெர்சுக்குள் ஒரு படம் இருக்கிறது. என் தங்கையின் படம் அதைமட்டும் என்னிடம் கொடுத்துவிடு" என்று கூறிக் கொண்டு முன்னேக்கி வந்தான். பொடி ஹாமியின் கையிலிருந்த மணிப்பர்ஸை வாங்கிப் பார்த்து அதற்குள் இருந்து ஒரு படத்தை எடுத்தான். "இதோ இது என் தங்கையும் நானும் இருந்து எடுத்தபடம் இதைமட்டும் நான் யாருக்கும் கொடுக்க முடியாது" என்று காட்டினான் திஸநாயகா.

"அண்ணா!" என்று அலறிக்கொண்டு திஸநாயகாவின் காலில் விழுந்தாள் பொடி ஹாமி. "என்ன, நீ என் சோமாவதியா?" என்று கத்தினான் திஸநாயகா.

பூமி சுழன்றது; வானம் சுழன்றது; கடலும் பாலமும் சுழன்றன. அடியற்ற மரம்போல் சாய்ந்தான் திஸநாயகா. மறுகணம் அவன் உடல் தொபகடீர் என்று கடலினுள் உருண்டது.

பக்கத்தில் வர்ணம் பூசிக்கொண்டிருந்த கிழவன் உடனே தண்ணீரில் குதித்தான். சில நிமிஷங்களில் திஸநாயகாவையும் இழுத்துக்கொண்டு நீந்திவந்து ஒரு மாவீரனைப்போல் பாலத்தில் ஏறினான் அந்த நரைக்கிழவன்.

* * *

ஜெனரல் ஆஸ்பத்திரியில் ஒரு கட்டிலின்மீது தலையைச் சுற்றிய பண்டேஜ் கட்டுடன் படுத்திருந்த திஸநாயகா கண்ணை விழித்தபோது அந்தப் பொடி ஹாமி — இல்லை, அவன் தங்கை சோமாவதி பக்கத்தில் உட்கார்ந்திருந்தாள். அவளருகே அந்தக் கிழவனும் காணப்பட்டான்.

"சோமா, நீ ஏன் அன்று பாலத்திற்கு வந்தாய்? நீரில் விழுந்த என்னை ஏன் காப்பாற்றினாய்?" என்று கேட்டான் திஸநாயகா.

"அண்ணா, முத்துமெனிக்கா வீட்டில் நான் எத்தனையோ பேருக்கு என் உடலை அர்ப்பணித்திருக்கிறேன் ஆனால் நீங்கள் ஒருவர்தான் அந்தப் பசாசுக்கு பத்து ரூபாய்களைக் கொடுத்துவிட்டும், என்னைத் தொட்டும் பார்க்காமல் விட்டுவைத்தவர்கள் பணம் கொடுத்து விட்டும் ஒரு பெண்ணின் கற்பைச் சூறையாடாத தெய்வப் பிறவி நீங்கள். அதனால் தான் உங்கள்மீது எனக்கு ஒரு பற்று ஏற்பட்டது. நீங்கள் மறந்துவிட்ட மணிபர்சை உங்களிடம் சேர்க்க வேண்டும் என்று ஓடிவந்தேன்" "ஆமாம் சோமாவதி அன்று உன் முகத்தை அந்த மங்கிய விளக்கொளியில் பார்த்தபோது நான் விட்டுப் பிரிந்த என் எட்டு வயதுத் தங்கையின் ஞாபகம்தான் வந்தது. அதனால் தான் நான் உன்னை என் சகோதரியாக நினைத்து பெரும் பாதகமான செயலிலிருந்து தப்பிக் கொண்டேன்" "அதுசரியண்ணா, அன்று தண்ணீரில் மூழ்கிய உங்களைக் கரைசேர்த்துக் காப்பாற்றியது நானல்ல. இவர்தான் உங்களைக் காப்பாற்றினார்" என்று கூறி சோமாவதி பக்கத்திலிருந்த கிழவரைச் சுட்டிக் காட்டினாள்.

"சோமா, இவர் யார்?" என்றான் திஸநாயகா.

"என்ன திஸா, உன் அப்பாவையே உனக்கு அடையாளம் தெரியவில்லையா?" என்று கேட்டார் ஆரன்ஸ் ஸில்வா.

## மரத் தண்டவாளம் மீது டயருடன் ஓடும் ரயில்!

பாரிஸ் — மரத் தண்டவாளத்தின் மீது ரப்பர் டயர் பூட்டி ஓடும் புது ரயில் ஒன்றை பாரிஸ் ரயில் கம்பெனி கண்டுபிடித்திருக்கிறது. இந்த மாடல் ரயிலை 25000 மைல் வெள்ளோட்டம் விட்டுப் பார்த்து திருப்தி ஏற்பட்டிருக்கிறதாம்.

இந்த ரயில்கள் லேசான உலோகத்தில் செய்யப்பட்டவை. மரத் தண்டவாளத்தில் சப்தமின்றி வேகமாக ஓடுகின்றன. ஒரு முறை பூட்டப்படும் டயர்கள் 3,70,000 மைல் வரை உழைக்குமாம். இப்புதுமை பற்றிய விவரங்களை அறிய ஏழு தேசங்களிலிருந்து பாரிஸுக்கு நிபுணர்கள் வந்திருக்கிறார்கள்.


## ஆனந்தா லேகியம்

இதன் குணததை ஓரேநாளில் அறிந்துகொள்ளலாம்

நிர். 174 ஆனந்தா வைத்தியசாலை என்ற விலாசத்தைப் பார்த்து வாங்குங்கள்.

ஆனந்தா லேகியம் நாள்தோறும் மலஜலத்தை சுகமாக கழித்து, அசதி, சோம்பல், மேல்கால் கைகளுக்களில் வலி, அஜீரணம், பசியின்மை, பித்த வாய்வு, புளியேப்பம், வயிற்றுப் பொருமல், வயிற்று வலி, இடுப்பு வலி, நெஞ்சுவலி, சிரங்கு, பற்றுகள், சொறி, தேமல், நெஞ்சு எரிவு, திரேகம் காந்தல், கண் எரிச்சல், உள்ளங்கால் கை எரிச்சல், வாய்வுக் குத்து நெஞ்சடைப்பு, சகலவித வாய்வுகள், வாதக்கடுப்புகள் முதலிய அநேக வியாதிகள் தீரும். சிலகாலம் சாப்பிட்டு வந்தால் மூலவியாதி அடியோடு தொலைந்துபோகும். பத்தியமில்லை பெரியது ரூ. 5-75 சிறியது விலை ரூ 3-00 இத்துடன் "ஆனந்தா கீழ்காய்நெல்லித்தைலத்தை" தேய்த்து வந்தால் அதிக உஷ்ணம், கண் எரிச்சல், மூலச்சூடு பித்த மயக்கம், கைகால் எரிவு முதலான அநேக வியாதிகளை நீக்கி மூளைக்கு குளிர்ச்சியையும் கண்ணுக்குப் பிரகாசத்தையும் கொடுக்கும். சகல வியாதிகளுக்கும் விபரமடங்கிய கேட்லாக் இனாமாக அனுப்புவோம்.

பெரிது ரூ 5-75 சிறியது ரூ3-00 வி பி பி. செலவுவேறு

புரோப்ரைடடா:- M. பொன்னையா

ஆனந்தா வைத்தியசாலை

நிர். 174 C, செட்டியார் தெரு, கொழும்பு-11


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# வங்க இலக்கியத்தின்.........

[7-ம் பக்கத் தொடர்ச்சி]
பனங்களிலே தொடர்பு கொள்ளவில்லை எனினும் அரசியல், சமுதாய, பொருளாதார, கலாச்சார தளைகளினின்றும் பொதுமக்கள் விடுபட வேண்டும் என்ற ஆர்வமும் ஆசையும் உடையவர் மனிதன் மனிதனாக வாழ உரிமை பெறவேண்டும் என்று விரும்பினார்.

**கோர்ட்டில் வாக்குமூலம்**

கவிஞர் தமது 22-வது வயதில 'வால் நட்சத்திரம்' என்ற வங்காள வாரப் பத்திரிகைகளுக்கு ஆசிரியரானார். புரட்சிக் கனல் தெறிக்கும் அவரது எழுத்தோவியங்கள், இயற்கையாகவே ஆங்கிலேயர்களுக்கு எரிச்சலையூட்டின. எனவே சிறைக்கு அனுப்பப்பட்டார். விசாரணை நடந்தது. நியாயமன்றத்தில் இவர் பேசிய பேச்சு இவரது வாழ்க்கையைப் பிரதிபலிப்பதாக விருக்கிறது. வங்க மொழியில் பேசிய இவருடைய பேச்சு புத்தக வடிவிலே வந்தது. அப்புத்தகத்தினின்றும் ஒரு சில வரிகளைத் தருகிறோம்.

"அரசனுக்கருகில் ஊதியம் பெறும் உத்தியோகஸ்தர்கள் இருக்கின்றனர்; என் பக்கத்திலோ, மன்னர்க்கு மன்னன், நீதிபதிக்கு நீதிபதி, என்றும் அழியாத, எல்லாம் உணர்ந்த, நிரந்தர உண்மையான இறைவனிருக்கின்றான்.

"சொல்லப்படாத உண்மைகளைச் சொல்லுவதற்காக இறைவனால் அனுப்பப்பட்ட கவிஞன் நான். கவிஞனின் குரலிலே இறைவனிருக்கின்றான்.

'என் குரல் உண்மையை எடுத்தோதுகிறது. அக்குரல், மன்னனின் சட்டப்படி குற்றமுள்ளதாக இருக்கலாம். ஆனால் நீதியின் பார்வையிலே அது நியாயமும் உண்மையும் நிறைந்தது. என் குரல் மன்னனின் நீதிமன்றத்திலே தண்டிக்கப்படலாம். ஆனால் தெய்வீக சட்டப்படி பார்க்கப் போனால், அது குற்றமற்ற, அப்பழுக்கற்ற, மங்காத அழியாத உண்மையாகும்.

'உண்மை தன்னைத் தானே விளங்கவைக்கிறது. மன்னனின் கோபப் பார்வை அதை அடக்கிவிட முடியாது நான் இறைவனின் கருவியாக இருக்கிறேன். எனவே என்மீது குற்றமில்லை. என் தொண்டையிலிருந்து என்னைப் பேசவைக்கும் அந்த இறைவன்தான் பெரிய குற்றவாளி. அவனைத் தண்டிப்பதற்கு அரசாங்க சக்தியினாலோ, அல்லது இரண்டாவது இறைவனாலோ முடியாது. அவனை சிறைபிடிப்பதற்குப் போலீஸோ அல்லது சிறையோ இது வரை இருந்ததில்லை.

"என்மீது' எனக்கு ஆழ்ந்த நம்பிக்கையிருக்கிறது. குற்றத்தைக் குற்றம் எனக் கருதுகிறேன். அநியாயத்தை அநியாயம் என அழைக்கிறேன். பொய்யைப் பொய் எனப் புகலுகிறேன்"

**விலங்குகளை அணிந்திருப்போம்**

இவ்வளவு வாதித்துங்கூட நஸ்ருல் இஸ்லாம் தண்டிக்கப்பட்டார் ஒரு வருடம். சிறை தண்டனை கிடைத்தது. சிரித்த முகத்துடன் சிறை சென்றார். எந்த சக்தியினாலும் இவரிடம் நிறைந்திருந்த புரட்சி மனப்பான்மையை ஒழித்துவிடமுடியவில்லை. இவர் சிறையில் இருந்துகொண்டு எழுதிய எழுத்தும், பாடிய பாட்டுக்களும் சிறை அதிகாரிகளைத் துன்பத்திற்காளாக்கியது. இங்குதான் இவர் தமது புகழ்பெற்ற "ஷிகால் பாரர் கான்" என்ற கவிதையை எழுதினார். அதிலிருந்து சில வரிகளைத் தருகிறோம்.

"விலங்கு அணிந்திருக்கிறோம் என்றால், அது பலப்பல விலங்குகளை உடைப்பதற்கு அறிகுறியாகும். செயற்கையான உங்கள் விலங்குகளின் மூலம் எங்களைப் பின்னிப் பிணைத்துள்ள எல்லா தளைகளையும் தகர்த்தெறிகிறோம். சிறைக்கு வந்தோம், விலங்கள் ன்மீது எங்களுக்கிருந்த பயம் பறந்தோடிவிட்டது. இந்த விலங்குகளை இனியும் அணிந்திருப்போம், ஏன்? அதைப்பற்றிய பயத்தையகற்றி, வெற்றிபெறுவதற்காகத்தான். உண்மையிலேயே இந்த விலங்கு பூட்டப்பட்ட பாதகங்களும் உண்மையும் சேர்ந்துவிட்டால் அது விலங்கைத் தகர்த்தெறியும் கருவியாகிவிடும்"

**49 நாள் உண்ணாவிரதம்**

இவ்வாறு கவிஞர் பாடியதற்காக, அவருக்கு அளிக்கப்பட்டிருந்த தண்டனை அதிகமாயிற்று கவிஞர் அதை மறுத்து உண்ணாவிரதம் இருந்தார். 49 நாட்கள் அவ்வாறு இருந்தார். எத்தனையோ நண்பர்களும், உறவினர்களும், பெற்ற தாயும் உண்ணாவிரதத்தைக் கைவிடும்படி மன்றாடியும் பயனில்லை. ஆனால் கல்கத்தாவில் காலஞ்சென்ற சித்தரஞ்சன் தாஸ் தலைமையில் நடந்த பொதுக்கூட்டத்தில் உண்ணாவிரதத்தைக் கைவிடுமாறு கேட்டுக்கொண்டு ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. கவிஞரும் நாட்டின் ஏகோபித்த குரலுக்கு மதிப்பளித்து உண்ணாவிரதத்தைக் கைவிட்டார்

சிறையிலிருந்து விடுதலையடைந்த நஸ்ருல் இஸ்லாம் வங்க இலக்கிய வானிலே இருபது வருடங்கள் சஞ்சரித்தார். 500 க்கு அதிகமான கவிதைகளை இயற்றினார்.

கவிதைகள் யாவும் வளம் செறிந்து, உன்மை பெற்று விளங்குகின்றன. இவரது கவிதைகள் கவிஞரின் இதய ஆழத்திலிருந்து ஊற்றெடுத்தவையாதலால் அவற்றில் இயற்கைக்கு விரோதமாக எதுவும் இல்லை.

**பரிதாபம்!**

இப்படிப்பட்ட அற்புதக் கவிஞரின் இன்றைய நிலையைப்பார்க்கும்போது வருந்தாமலிருக்க முடியவில்லை. எக்காரணத்தினாலோ இவ்விதம் மாறினார் என்று விளங்கவில்லை ஆத்மீகத் துறையிலே இவர் தனது நேரத்தைச் செலவிட்டுவந்தார். மதத்திலே இருந்த ஊக்கமும் உற்சாகமும் குறைய ஆரம்பித்தன. ஏறத்தாழ 10 வருடங்களாக நஸ்ருல் இஸ்லாம் மனத்தெளிவற்ற நிலையிலே இருந்துவருகின்றார். கிழக்குப் பாகிஸ்தான் அரசாங்கம் இவருடைய தற்போதைய பரிதாபகரமான நிலையையும், இவர் வங்க இலக்கியத்திற்குச்செய்த சேவையையும் உத்தேசித்து மாதம் ஒன்றுக்கு ரூ. 250 கொடுத்துவருகிறது. புரட்சிக் கவிஞரான நஸ்ருல் இஸ்லாம் இப்பொழுது தனது வீட்டிலேயே ஒரு கைதியைப்போல கண்காணிக்கப்பட்டுவருகின்றார். பரிதாபம்! இவர் மனைவியுங்கூட, பதினைந்து வருடங்களாகப் பாரிசவாயுவினால் கஷ்டப்பட்டுவருகின்றார்.

**வாழ்க நஸ்ருல் இஸ்லாம்**

இப்பொழுது எப்படியிருந்தபோதிலும், வங்க இலக்கியத்திற்கு இவர் செய்த மகத்தான சேவையை நாம் மறக்கவே முடியாது

மக்களின் மன உணர்ச்சிகளைத் தூண்டும் மாபெரும் சக்தி வாய்ந்த பாடல்கள் பலவற்றை நஸ்ருல் இஸ்லாம் இயற்றியிருக்கின்றார். இவரது பாடல்கள் இப்போது பள்ளிக்கூடங்களில் பாட நூல்களாகவும் ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கின்றன. இவருடைய கவிதைகள் இன்று வங்க இலக்கியச் செல்வங்களில் சிறந்தவைகளாகப் போற்றிப் பாதுகாக்கப்படுகின்றன. இவரது கவிதைகள் அனைத்தும் இந்தியா, பாகிஸ்தான் பிரிவினைக்கு முன்பே இயற்றப் பெற்றவையாதலால், இரு நாடுகளுக்கும் பொதுவான கவிஞராக இவர் விளங்கிவருகின்றார்.

"வாழ்க நஸ்ருல் இஸ்லாம்!" என்று இக் கவிஞரை இன்னும் வாழ்த்துவோமாக!

---

தமிழ், தெலுங்கு, இந்தி ஆகிய மூன்று பாஷைகளில் பரணி பிக்சர்சார் தயாரித்து வரும் "சண்டி ராணி" அதி ஜரூராக பரணி ஸ்டூடியோவில் வளர்ந்து வருகிறது. இது வரை 'சண்டி ராணி' ரூபாய்க்கு பன்னிரெண்டரையணா வளர்ந்துவிட்டதாகவும் கூறப்படுகிறது. சமீபத்தில் இப்படத்துக்கான அழகிய வெளிப்புறக் காட்சிகளை காமிராவுக்குள் திணிக்க கொடைக்கானல் வட்டாரத்திற்கு 'பரணி' யார் காம்ப் செய்திருந்தார்களாம்.

சண்டிராணியிலே பானுமதி, என் டி ராமராவ் இருவரும் பிரதம நடிகர்களாகத் திகழ, எஸ் வி ரங்கராவ், ரேலங்கி, இந்தி நடிகர் ஆகா ஆகியோர் பக்கத்துணை நடிகர்களாகநடித்து வருகின்றனர். பானுமதியின் டைரெக்ஷனிலே உருவாகும் இப் படத்திற்கு சைதரிகர் சேகர் செட்டிங்குகளையும், செல்வராஜ் ஒளிப்பதிவையும், கோடீஸ்வரராவ் ஒலிப்பதிவையும் கையாளுகிறார்களாம்.

---




## பானுமதி டைரெக்ஷனில் உருவாகும் "சண்டிராணி"

**பத்மினி**

'என் தங்கை"யில் சக்கைப்போடு போட்ட பி. எஸ்' கோவிந்தன் இப்போது சேலம் அசோகா புரொடக்ஷன்ஸாரின் 'பத்மினி" படத்தில் நடிக்கப் போகிறார் "பத்மினி" தமிழ் படப்பிடிப்பு பொங்கல் திருவிழா அன்று துவங்குமாம். இந்த படத்திலே பி எஸ். கோவிந்தன் முக்கியமானதொரு பாகத்திலே தோன்றுவாராம் பல புது நடிகர்களை ரசிகர்களுக்கு இந்த படத்தின் மூலம் அறிமுகப்படுத்திவைகக அசோகா புரொடக்ஷன்ஸார் தீர்மானித்திருக்கின்றனர். அசோக் ராஜு என்பவரும் இந்த படத்திலே நடிப்பாராம்.

**பூங்கோதை**

அடுத்த மாதத்தில் வெளியாகப் போகும் பல படங்களில் அஞ்சலி பிக்சர்ஸாரின் 'பூங்கோதை'யும் ஒன்று.

ஆந்திர அழகி அஞ்சலி தேவி, நாகேஸ்வரராவ், "பராசக்தி" புகழ் சிவாஜி கணேசன், பண்டரிபாய் முதலிய நட்சத்திரங்கள் இந்த படத்திலே நடித்திருக்கின்றனர்.

பிரசாத் டைரெக்ஷனில் உருவாகும் "பூங்கோதை" படத்திற்கான வசனங்களை சக்தி டி கே. கிருஷ்ணசாமி எழுதியுள்ளார்

"பூங்கோதை" அஞ்சலி தேவியின் சொந்தப் படம் என்பது நினைவிருக்கலாம். "பூங்கோதை" தெலுங்கிலும் தயாரிக்கப்பட்டு வருகிறது. சிவாஜி கணேசன், நாகேஸ்வரராவ், அஞ்சலி, பண்டரிபாய் ஆகிய நட்சத்திரங்களின் உயரிய நடிப்பு, பிரசாத்தின் சிறந்த டைரெக்ஷன், கிருஷ்ணசாமியின் கருத்துமிக்கவிறுவிறுப்புள்ள வசனங்கள் இவை அனைத்தும் இருக்கும்போது "பூங்கோதை"யின் வெற்றியைப்பற்றி சொல்லவேண்டியதில்லை.

**பதிவிரதை**

ஷியாம் சங்கர் பிக்சர்ஸார் என்ற புதுப்படக் கம்பெனியார் "பதிவிரதை" என்ற பெயரில் தமிழ் தெலுங்கு ஆகிய இரு மொழிகளிலும் படங்கள் தயாரிக்கப் போகிறார்கள்.

பி. எஸ். சரோஜா, ஜெயலெட்சுமி, சிவராவ் முதலியோர் இந்த படங்களில் நடிக்க ஒப்பந்தம் செய்யப்பட்டிருக்கிறார்கள். இந்த படங்களை சிவராவ் டைரெக்ட் செய்வார் என தெரிகிறது.

**நாம**

ஜுபிடர் - மேகலாவின் கூட்டுத்தயாரிப்பான 'நாம்' வளர்ச்சியில் துரிதமான முன்னேற்றம் காணப்படுகிறது

இதே நிலையில் 'நாம்' சென்றால், ஜனவரியில்தியேட்டரை எட்டிவிடலாம் என்று கூறப்படுகிறது.

மு. கருணாநிதியின் கனல் கக்கும் ஆனால் கருத்துமிக்க வசனங்கள் கொண்ட நாம், நெப்டியூன் ஸ்டூடியோவில் வளர்ந்து வருகிறது.

எம். ஜி. ராமச்சந்திரன், எம். என் நம்பியார், பி. கே. சரஸ்வதி, வி. என். ஜானகி ஆகியோர் நடித்து வருகின்றனர். ஒரே நட்சத்திரமயமாக இருக்கும் 'நாம்' படத்தை காசிலிங்கம் டைரெக்ட் செய்து வருகிறார்.

**சன்ஸ்கார்**

தென்னிந்திய நடன நட்சத்திரம் வைஜயந்திமால நடித்த 'அஞ்ஜாம்' இந்திப் படத்தை தயாரித்து வெளியிட்ட சன்ரைஸ் பிக்சர்ஸார் தற்போது 'சன்ஸ்கார்' என்ற உயரிய இந்திப் படத்தை ரசிகர்களுக்கு அளிக்கின்றனர்.

மும்தாஜ்சாந்தி. பூர்ணிமா, வீரா, பிரான்ஷஷிகபூர் ஆகியோர் இந்த படத்திலே நடித்திருக்கின்றனர்.


# கமலா பப்படம்

ரிஜிஸ்டர்ட் நிர். 13207

லீலா:- என்ன நீலா, முன்னைவிட ரொம்பவும் இளைத்திருக்கின்றாயே?

நீலா:- என்னவோ அம்மா? வரவர சரியாக உணவே சாப்பிட முடியவில்லை. நாவுக்கு ருசி இருந்தால்தானே?

லீலா:- பூ......இதுதானா பிரமாதம்? தினமும் ஆகாரத்தில் கமலா பப்படத்தைச் சேர்த்துக்கொள். அதன் குணமும், மணமும், ருசியும் உன்னை எவ்வளவு அபிவிருத்தி செய்கிறதென்பது தெரியும்.

Proprietor பி. எம். ஹமீது,

197, கெய்ஸர் வீதி, கொழும்பு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜனவரி 7உ தோ. தொழிலாளர் பொது வேலை நிறுத்தம்

## சர்பள வெட்டின் எதிரொலி

### தொழிற்சங்கங்களின் ஐக்கிய அணி

தேயிலைத் தோட்டத் தொழிலாளரின் சம்பளத்தைக் குறைப்பதென்று சம்பள நிர்ணய சபை தீர்மானித்திருப்பதை ஆட்சேபிப்பதற்காக நாடு முழுவதுமுள்ள தோட்டத் தொழிலாளர்கள் ஜனவரி 7ந் தேதி வேலை நிறுத்தம் செய்வார்கள்.

'சம்பள வெட்டு' முடிவை ஊர்ஜிதம் செய்வதற்காக சம்பள நிர்ணயசபை ஜனவரி 9ந் தேதி கூடுவதாயிருப்பதால், அதற்கு இரு தினங்களுக்கு முன்பு இந்த வேலை நிறுத்தம் நடைபெறும்.

பொது வேலை நிறுத்தம் ஒரே நாள் தான் நடை பெறும் தோட்டத் தொழிலாளர் சங்கங்கள் அனைத்தும் ஒன்று கூடி இந்த பொது வேலை நிறுத்தத்தை நடத்தும்

மத்திய, தாழ்ந்த பிரதேசங்களிலுள்ள தேயிலைத் தோட்டத் தொழிலாளரின் சம்பளத்தைக் குறைப்பதென்று தேயிலைத் தொழில் சம்பள நிர்ணய சபை முடிவு செய்திருக்கின்றதென்றும் இச் சம்பள வெட்டை எதிர்த்து தொழிற்சங்கங்கள் தீவிர நடவடிக்கை எடுக்கலாமென்றும் கடந்த வாரம் "சுதந்திரனில்" குறிப்பிட்டிருந்தோம்.

**அதிருப்திப் புயல்**

இச்சம்பள வெட்டு தொழிலாளர்களிடையே பரபரப்பை ஏற்படுத்தியிருக்கிறது. வாழ்க்கைச்செலவில் ஒரு புள்ளி கூட குறையக் காணோம். அதற்குப் பதிலாக மென்மேலும்வாழ்க்கைச்செலவு சிறகு கட்டிக் கொண்டு உயரே பறக்கத் தொடங்கி விட்டது. இந்த நிலைமையில் உழைப்பினையே நம்பி வாழும் ஏழைத் தோட்டத் தொழிலாளரின் அடிப் படைச் சம்பளத்தில் கை வைப்பது தொழிலாளர் வர்க்கத்தினிடையே பெரும் அதிருப்தி புயலைக்கிளப்பி விட்டிருக்கிறது. ஆகவே தீவிர நடவடிக்கை எடுத்தாலன்றி பிரச்னைக்கு முடிவு காண முடியாதென்ற நிலைமை ஏற்பட்டு விட்டது

இது விஷயமாகதொழிற் சங்கங்கள் அனைத்தும் ஒரே முகாமில் அணிவகுத்து நிற்பது வெற்றி நிச்சயம் என்பதை எடுத்துக்காட்டுகிறதல்லவா?

**ஜனவரி 7ந் தேதி**

தொழிலாளர் காங்கிரஸ், அகில இலங்கை தோட்டத் தொழிலாளர் யூனியன், லங்கா தோட்டத் தொழிலாளர் யூனியன், தென்னிலங்கை தோட்டத் தொழிலாளர் சங்கம் ஆகிய ஸ்தாபனங்களின் பிரதிநிதிகள் ஒன்றுகூடி கடந்த வாரம் இது விஷயமாக ஆலோசனை நடத்தினர் ஜனவரி 7ந் தேதியன்று தோட்டத் தொழிலாளரின் மாபெரும் பொது வேலை நிறுத்தமொன்று நடத்தி சம்பள வெட்டை ஆட்சேபிப்பதென்ற பிரஸ்தாப பிரதிநிதிகளின் மகாநாடு ஏகமனதாக முடிவு செய்திருக்கிறது.

"சம்பளவெட்டு" முடிவை ஊர்ஜிதம் செய்வதற்காக ஜனவரி 9ந் தேதி தேயிலைத் தொழில் சம்பள நிர்ணயசபை கூடுகிறது அன்று அச்சபை கூடும் போது, இச்சம்பள வெட்டைத் தோட்டத் தொழிலாளர் எவ்வளவுதூரம் எதிர்க்கிறார்களென்பதைத் தெரிந்திருக்க வேண்டியது அவசியமென்று தொழிற் சங்கப் பிரதிநிதிகள் கருதுகின்றனர்




# நமுனுகொல்லையில் வேலைநிறுத்த வாக்கெடுப்பு

## கந்தஹேனை போராட்டத்திற்காதரவு

நமுனுகொல்லையைச் சேர்ந்த கந்தஹேனைத் தோட்டத் தொழிலாளரின் போராட்டம் தொடர்ந்து நடைபெறுகிறது. இது சம்பந்தமாக தொழில் இலாகாவால் 2வது முறையாக நியமனம் செய்யப்பட்ட விசாரணை அதிகாரி பதுளை நகர மண்டபத்தில் விசாரணை நடத்தினாரெனினும், விசாரணையில் கலந்து கொண்டு சாட்சியமளிப்பதற்கு தோட்டத்துரை மறுத்துவிட்டாரென்ற செய்தி ஏற்கனவே இப்பத்திரியில் பிரசுரமாகியிருக்கிறது.

ஆதலால் பிரஸ்தாப போராட்டத்திற்கு ஆதரவு காட்டும் முகமாக நமுனுகொல்லை பிராந்தியத்தில் ஒரு பொது வேலைநிறுத்தம் நடத்துவதென்று தொழிலாளர் காங்கிரஸ் முடிவு செய்தது. அதற்கேற்ப கடந்த ஞாயிற்றுக்கிழமையன்று கீழ்க்கண்ட தோட்டங்களில் தொழிலாளர் கருத்தைத் தெரிந்து கொள்வதற்காக "வேலை நிறுத்த வாக்கெடுப்பு" நடைபெற்றது. அதன் விபரம் வருமாறு:—

| தோட்டங்கள் | தொழிலாளர்களின் மொத்தத் தொகை | வேலைநிறுத்தத்தை ஆதரிப்பவர் | எதிர்ப்பவர் |
|---|---|---|---|
| கின்னலின் | 345 | 338 | 7 |
| சுதர்லேண்ட் | 206 | 200 | — |
| நியூபர்க் | 590 | 491 | 16 |
| எலலவத்தை | 560 | 526 | 2 |
| கலபிட்டகந்த | 560 | 5?4 | — |
| இன்டாகலை | 580 | 419 | 1 |
| பிங்காரவ | 650 | 616 | 20 |
| தெனகோம் | 950 | 901 | 2 |
| வெவக்கலை | 500 | 401 | 2 |
| கனவரல்ல | 1550 | 1508 | 6 |
| கந்தஹேனை | 550 | 438 | 19 |

முருகன் தியேட்டர் (ஜிந்துப்பிட்டி)

மகத்தான காதல் சித்திரம்!

பார்க்கப் பார்க்கப் பரவச மூட்டும்

பாங்கான திரையோவியம்

மாய மாலை

நாகேஸ்வரராவ் - அஞ்சலிதேவி - சூர்யபிரபா

முதலியோர் நடித்தது.

சனிக்கிழமை பிற்பகல் 2 மணி, மாலை 6 மணி, இரவு 9-30 மணி

ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணி, பிற்பகல் 2மணி மாலை 6 மணி இரவு 9 30 மணி

மற்ற நாட்களில் மாலை 6 மணி இரவு 9-30 மணி

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## கடவுள்

ஆண்டவன் ஒருவன் உயிருடன் இருக்க வேண்டுமென்று விரும்பினுல், எவரும் விபத்திலிருந்து தப்பித்துவிடலாம் — இச்பால் குருட்டு ஆமை தண்ணீரில் இறங்குமானுல், கடவுள் கட்டாயமாக மிதக்கும் மரப்பலகையொன்றை அதற்கு உதவுவார்?

— ரோமியப் பழமொழி

வாழ்க்கையிலுள்ள இடுக்கண்களுக்கெல்லாம் கடவுள் ஒரு மாற்று மருந்து கொடுத்தாரே, தூக்கம் என்பதாக அது போதும்

— வால்டேர்

கடவுள் உன்னை ஒருவேளை கை விடலாம்! ஆனுல் முயற்சி ஒருபோதும் ஒருவனை கைவிடாது.

— திருவள்ளுவர்

நான் ஒரு நாத்திகன், என்னை நாத்திகனுக்கியதற்கு கடவுளுக்கு நன்றி செலுத்துகிறேன்!

— டாரோ

கடவுள் இல்லை என்பவர்கள் அறிவில்லாதவர்கள். கடவுள் இருக்கிறுர் என்டவர்கள் முழு முட்டாள்கள்.

— ஜார்ஜ் பெர்னுட் ஷா

கடவுள் கதவைஅடைத்தால் ஜன்னலை திறந்துவிடுகிறுர்.

— இத்தாலியப் பழமொழி

கடவுளை நம்பு, ஆனுல் உன் ஒட்டகத்தைக் கட்டிவை

— 'ஹதீஸ்'

"எஸ்டிஏ"

கொழும்பு-12

## இன்றைய இலங்கைத் தமிழர்

பண்டைக் காலத்திலே தமிழர்கள் மறப்போர்வீரர்களாயும், தீரர்களாகவும் விளங்கினர். அக்காலத்தமிழர்கள் பேரும் புகழும் உடையவராக விலங்கினர் இத்தகைய வீரர்களின் சந்ததியார்தான் இலங்கைத் தமிழர்.

"தமிழன் என்று சொல்லடா! தலைநிமிர்ந்து நில்லடா!! என்று வீரமொழி பகர்ந்து, பல்லவி பாடிக்கொண்டு, திரிந்த தமிழ்த் தலைவரெல்லாம் இப்போ தமிழன் என்று சொல்லத் தயங்குகின்றனர். தலைகவிழ்ந்து அடியவர்போல் வாழ்கின்றனர் இது மட்டுமா வீரத்தமிழனின் விழுமிய மொழியாகிய தமிழ் மொழியைப் பேசுவதற்கு வெட்கப்படுகிறுர்கள் சிலர் மேல்நாட்டு நாகரீகத்தில் மோகங் கொண்டு தமிழர் என்று சொல்லத் தயங்குகின்றனர்.

இடபடியானவர்தான் தமிழ் இனத்திற்கு இழுக்குண்டாக்குபவர் இவர்கள் தான் தமிழ்ச் சமூகத்தின் முதலாவது எதிரிகள் தமிழ்ச் சமூகம் முன்னேற வேண்டுமானுல்,பழையபடி தலைத்தூக்க வேண்டுமானுல், ஈழ நாட்டில் அடிபணிந்து வாழாது முதல் ஸ்தானத்தை அடைய வேண்டுமானுல், தமிழ் இனத்திற்கு இழுக்குண்டாக்கி அடிபணிந்து வாழும் ஐந்தாம் படையினரை ஒழித்துக் கட்டவேண்டும் அப்போதுதான்,நாம் தமிழ் சமூகத்திற்குத் தொண்டு செய்தவராவோம் விழுமிய வீரத்தமிழர்களாக, துல்லி




# சுதந்திர வீரன்

வில்லியம் என்ற டலசாலி சுவிட்சர்லாந்தென்னும் நாட்டில் வசித்துவந்தான். இவன் ஓர் இடையன்: இவ்விதவோர் தொழிலீடுபட்டிருந்தாலும் அஞ்சா நெஞ்சம் படைத்தவனுயிருந்தான்: வில் வித்தையில் தேர்ச்சி பெற்றவன். தன் தேசத்தை தாயைப்போல் நேசிப்பவன். இவனுக்கு ஒரு மகனுப் இருந்தான். தந்தையைப்போல் மகனும் பயம் என்பதை அறியாதவன். அக்காலத்தில் இந்நாட்டைவேறொருதேசத்து அரசன் ஆண்டுவந்தான். அவ்வரசன் மிகக் கொடியவன். மனிதர்களிடத்தில் ஈவிரக்கமின்றி ஆட்சிபுரிந்தான். இக்கொடுங்கோல் அரசன் ஒருநாள் ஒரு சந்தியில் தனது தொப்பியை ஒரு கம்பத்திலிட்டு அவ்வழியே போகிறவர்கள் அதை வணங்க வேண்டுமெனக் கட்டளையிட்டான். அன்று வில்லியம் தன் புத்திரனுடன் அவ்வழியே சென்ருன். தொப்பியைக் கவனியாமற் கடுகி நடந்தான் இதைக் கவனித்துக் கொண்டிருந்த சேவகர் அவனைப் பிடித்து அரசன் முன் கொண்டுபோய் நிறுத்தினுர்கள். அரசன் வில்லியத்தைப் பார்த்து "அடிமை நாயே! உனக்கு அவ்வளவு கர்வமா? தொப்பியை வணங்காயானுல் உன் சிரம் கொய்யப்படும்" என்று கர்ச்சித்தான். அதைக் கேட்ட வில்லியம் "இறைவன் ஒருவனுக்கே என் சிரம் சாயும். மற்றெவருக்கும் வணங்காது" எனக் கடுமையாகக் கூறி விட்டான். அரசன் மிகச் சினங்கொண்டு அவனைப் பிடித்துக் கட்டுங்கள் என சேவகருக்கு உத்திரவிட்டான். பக்கத்தில் அவனுடைய மகன் நிற்பதைக் கண்டு அவனையும் பிடித்துக் கட்டுமாறு சப்த மிட்டான். பின் அரசன் வில்லியத்தைப் பார்த்து 'அவனை சிறிது தூரத்தில் நிற்கவிட்டு அவன் தலையில் ஓர் அத்திப்பழம் வைப்பேன். அப்பழம் இரண்டாகப் பிளக்கும்படி அம்பெய்வாயானுல் உன்னை விடுதலை செய்வேன்' என்று கூறி மகன் தலையில் ஒரு அத்திப்பழம் வைக்கும்படி கட்டளையிட்டான். வில்லியம் சிறிது தயங்கினுன். ஐயோ! கொடுமை! கொடுமை! எனசனங்கள் கத்தினுர்கள் — சிலர் கண்ணீர்விட்டார்கள் வீரனே தன் கையில் அம்பை எடுத்தான். கைகள் நடுங்கின! தன் அருமை மைந்தனைப் பார்த்தான். கண்கள் கண்ணீரால் நிரம்பின என் செய்வான். பாவம்! அப்போது அரசன் அவனை நோக்கி நேரம் போகிறது. விரைந்துசெய் என்று உரத்துக் கத்தினுன். தந்தையின் பரிதாப நிலைமையைக் கண்ட மகன் தைரியத்தை வரவழைத்து தந்தையைப் பார்த்து அப்பா! அப்பா! எய்யுங்கள். மரணம் அல்லது சுதந்திரம் என்றுஉரத்துக் கூறினுன்: புலிக்குப் பிறந்தது பூனையாகுமா? வில்லியம் அம்பை வில்லில் பூட்டினுன் — குறி பார்த்தான். சூழநின்ற சனங்கள் என்னவாகுமோவென ஆர்வத்தோடு கவனித்து நின்றனர் மகன் மீண்டும் தாமதிக்கவேண்டாமெனக் கத்தினுன். வில்லியம் கடவுளை மனதில் எண்ணி குறி வைத்து அம்பை எய்தான். அம்பு மின்னலைப் போல் பளிச்சென்று அத்திப்பழத்தை இரண்டு துண்டுகளாக்கிற்று. பார்த்துநின்ற சனங்கள் சந்தோஷம் பெருகி கைதட்டி ஆரவாரம் செய்தனர். அதைக் கண்ட அரசன் ஏமாற்றமடைந்து வெட்கினுன். வில்லியம்தன் மகனண்டை சென்று 'மகனே! என் நேசமகனே! வீரமகனே! இன்றுதான் நீ எனது மகன்' என்று கட்டித் தழுவினுன். அரசன் வில்லியத்தைப் பார்த்து நீ ஜெயம் அடைந்தாய்உன்னை விடுதலை செய்கின்றேன். என்னை வணங்கி வீடு செல்லலாம் என்ருன். அரசன் சொன்ன சொற்கள் அவனை ஆத்திரப்படுத்தி விட்டது. உன்னை வணங்கேன். எனக்கு வெற்றியைத் தந்த கடவுளைவணங்குகிறேன். இந்த அம்பைப் பார். நான் எய்த அம்பு என் மகனைக் கொன்றிருக்குமாயின், இவ்வம்பு உன் மார்பையும் பிளந்திருக்கும் எனக் கூறி தன் வழியே சென்ருன். பெற்ற தாயும் பிறந்த பொன்னுடும் நற்றவானினும் நனிசிறந்தன என்பதை தந்தையும் மகனும் மெய்ப்பித்துக் காட்டி விட்டனர் நம் நாடுவாழ்க, சுதந்திரம் வாழ்க

தேவா மைக்கல்,
அறப்பொலக்கந்தை,
தெபுவன.

யமாகப் பிரகாசிக்கும் துருவ நட்சத்திரம் போல துலங்கலாம்.

தமிழினம் வாழ்க!
தமிழ்மொழி ஓங்குக!!
"நீழ்க்கா வை நவம்"



மத்தியக்கிழக்கு நாடுகளில் அடிக்கடி ஏற்படும் வெட்டுக்கிளிகளின் படையெடுப்பினுல் பயிர்பச்சைகளுக்கு பலத்த சேதம் ஏற்படுகிறது. வெட்டுக்கிளி ஒழிப்புக்காக வருடந்தோறும் கோடிக்கணக்கான ரூபாய் செலவிடப்படுகிறது ஐ. நா உணவு ஸ்தாபனம் இதற்கென தனி கமிட்டியொன்றையும் நிறுவியிருக்கிறது. வெட்டுக்கிளிகளை நாசம் செய்யும் மருந்தை இறைப்பதற்காக இப்புதிய இயந்திரம் பெரிதும் உபயோகப்படுகிறது. இதனுல் 3 ஏக்கர் பரப்புள்ள நிலத்தில் மருந்துத் தண்ணீரை இறைப்பதற்கு ஒருசில நிமிடங்கள்தானுகும்.

## செல்வம

இவ்வுலகத்தில் வாழ்க்கையை இன்பமாய் கழிக்க வேண்டுமாயின் பொருட் செல்வமும் வேண்டும். பொருட் செல்வம் இல்லாதவர்கள் தங்கள் வாழ்க்கையை இன்பமாய் கழிக்க முடியாது. முனிவர்களும், அரசர்களும் தாம் நினைத்த காரியங்களைச் செய்வதற்குப் பொருளின் உதவியை வேண்டுவார்களாயின் மற்றையோர் கதி என்னவாகும். திரைகடல் ஓடியும் திரவியந்தேடு என்று ஔவையார் கூறியிருக்கின்ருர். கடலில் ஓடி அந்நிய தேசங்களை அடைந்தாயினும் பொருளைச் சம்பாதிக்கவேண்டும். அப்பொழுதுதான் நாம் நினைத்த காரியங்களைச் செய்ய முடியும். நாம் மிகுந்த செல்வராயிருப்பின் புகழையும் ஏழைகளுக்கு உதவி. செய்வதால் புண்ணியத்தையும் அடையலராம்.

கல்லானே ஆனுலும் கைப் பொருளொன்றுண்டாயின் எல்லோரும் சென்றங்கு எதிர் கொள்வர்.

இல்லானை இல்லாளும் வேண்டாள்; மற்றீன்றெடுத்த தாய் வேண்டாள் சொல்லாதவன் வாயிற் சொல் என்று ஆன்ருேர் கூறியிருக்கின்றனர். ஒரு நூலையும் கல்லாதவனுனுலும் பொருள் அவனிடம் இருந்தால் அவனை வரவேற்பார்கள். பொருள் இல்லாதவனை மனைவியும் விரும்பாள் தாய்கூட விரும்பாள் பொருளில்லாதவர் தாம் நினைத்த காரியத்தை செய்யமாட்டார் இவ்வுலகில் நடைப்பிணமாகவே இருப்பர்

ஆதலால் நாம் நல்வழியில் பொருளைத் தேடி அதனுல் இன்புற்றிருப்போமாக!

நா சிவசுப்பிரமணியம்
வீரசிங்கம் வித்தியாசாலை
மீசாலை

## பௌண்டன் பேனு

வினு: "பௌண்டன்" பேனுக்களைக் கண்டுபிடித்தவர் யார்?

விடை: பௌண்டன் பேனுவை லீவிஸ் எட்சன் வாட்டர்மன் என்பவர் கண்டுபிடித்து, அதற்காக நியூயார்க்கில் 1884ல் ஒரு உற்பத்திசாலையையும்ஏற்படுத்தினுர். ஆரம்பத்தில் கையால் செய்யப்பட்டன பேனுக்கள். சிறிதுகாலத்துக்குப் பின் வாட்டர்மன் ஒரு இயந்திரத்தைக் கண்டுபிடித்தார். அதனுல் பேனுக்களை மிகுதியாய்ச் செய்ய முடிந்தது.

## வானளாவும் கட்டிடங்கள்

வினு: நியூயார்க் நகரத்தில் ஐம்பது மாடிகளுக்குக் குறைந்த கட்டிடங்களே இல்லை என்பது உண்மையா?.

விடை: 50 மாடிக்கு அதிகமாயுள்ள கட்டிடங்களின் எண்ணிக்கை நகரம் முழுவதிலும் பதின் மூன்றே ஆகும் அவற்றுளபல [illegible] பாகத்தில் உள்ளன [illegible] யார்க்கில் பெரும்பாலான கட்டிடங்கள் 15முதல் 20 அடுக்குகள் உள்ளவை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெஞ்சத்தொருமையால் நிகழும் காதற்பண்பு

## நிகழ்காலத்தை மறக்கச்செய்யும் பிரமை

"நாவேந்தன்"

[ப]ண்டைத் தமிழ் இலக்கிய நூல்களிலே [ப]ழந்தமிழ் மக்களின் பண்பு [நி]றைந்த காதல் வாழ்க்கையை நாம் காணலாம். நெஞ்சத்தொருமையால் நிகழும் காதலின் பண்புகளையும், அதனால் நினைவிழந்த காதலர்கள் 'நிகழ்கால நிகழ்ச்சிகளையும் மறந்து நிற்கும் காட்சியையும் அவைகளிலே கண்டு நாம் இன்புறலாம். இந்த அகத்துறை இலக்கியம் தமிழர்களுக்கேயுரிய தனிச் சொத்து. அவற்றைத் தமிழ் மக்கள் நன்கு 'அனுபவித்து' இன்பம் பெறுதல் வேண்டும். பரிபாடல் என்ற பழந்தமிழ் நூற்செய்யுளொன்று அழகான காதற் காட்சியை நமக்குப் படம்பிடித்துக் காட்டுகிறது. வையையாற்றில் கார்காலத்தில் மழைநீர் கரைபுரண்டுவந்த காட்சியை வருணிக்கப்போந்த ஒரு பழந்தமிழ்ப் புலவர் அங்கே அழகான ஒரு காதற்காட்சியையும் "குளோசப்" எடுத்துத் தமிழ் நாட்டு இலக்கிய ரசிகர்களுக்கு உரிமையாக்கிச் சென்றிருக்கிறார். அவருடைய 'இலக்கியப் படத்தை' இப்பொழுது கவனிப்போம்?

கார்காலம். வையை ஆற்றில் மழைபெய்து வெள்ளம் கரைபுரண்டது ஒரு நாள் ஊரிலுள்ள ஆடவர் பெண்டிர் அனைவரும் புதுப்புனல் ஆடப்போனார்கள். ஆற்றில் ஓர் வாழை மரத்தின் அடித் துண்டு அள்ளுப்பட்டுவந்தது. ஒரு கட்டிளங்காளை அசனைப் புணையாகத்தழுவி நீந்திவிளையாடிக் கொண்டிருந்தான். தற்செயலாக அவன் கண்கள் ஒரு அழகியைக் கண்டு விட்டன. இவன் நெஞ்சத்தை அவள் தனக்கே உரிமையாக்கிக் கொண்டாள். 'கண்டதும் காதல்' கொண்டு விட்டான் காளை! உள்ளம் பறிகொடுத்தவுடனே அந்த இளைஞன் தனது நிலையை மறந்து விட்டான. வெள்ளப் பெருக்குப் போகும் வழியே அவன் கைகள் சோர்ந்தன ஆனல் அவன் கண்கள் மட்டும் அந்த அழகியினிடமே நிலை பெற்று நின்று விட்டன, பாவம்!

ஆற்று நீர் தன்பாட்டுக்கு அடித்துப் புரண்டு கொண்டிருந்தது. அவன் விரும்பிய அவளிடம் அவனை கொண்டு போய்ச் சேர்க்க அது 'மறந்து' விட்டது. தான் செல்லும் போக்கிலேயே அவனையும் இழுத்துச் சென்று கொண்டிருந்தது அது மிகவும் பரிதாபமான நிலை! இருவர் உள்ளமும் கண்களும் அசைக்க முடியாதபடி ஒன்றி விட்ட தன்மையினால் அவனை நீர் இழுக்க, இழுக்க அவளும் தன் தோழிப் பெண்களின் கூட்டத்தினின்றும் நீங்கித் தனியாகத் தன்னையறியாமலே அவனைத்தொடர்ந்து சென்று கொண்டிருந்தாள்!

ஆனல் அவளுடைய தாய்க்கு மட்டும் இதன் காரணம் ஒன்றுமாகத் தெரியவில்லை. அவள் தன் மகளுக்கு ஏற்பட்டுள்ள 'காதல் நோயை' எப்படியறியமுடியும்? பயந்துபோன அந்தப் பேதைப் பெண் தன் மகளைப் பரிவோடு அழைத்தாள். "அங்கே தனியாகப் போகாதே; தோழிமாரோடு வந்து சேர்ந்துகொள்' என்று இதனல் ஏற்பட்ட திகைப்பு அந்த அழகியைத் திணறச்செய்து விட்டது. அத்தனை நேரமாக அந்த வாலிபனின் அழகிலே லயித்துப் போய்க்கிடந்த அவள், தனது நிலைமையைத் தாயுணர்ந்து விட்டாளோ என்றெண்ணித் தவித்தாள். அந்தத் தவிப்பிலே அவளுக்கு "நாம் எங்கிருக்கிறோம் என்ன செய்கிறோம்" என்பதொன்றும் தெரியாமற் போய் விட்டது. எனவே 'ஓ' வென்று வாய் விட்டு அரற்றினள்! எத்தகைய காதற் காட்சி இது?

கார் காலத்திலே கரைபுரண்டோடியவையையாற்றிலே நிகழ்ந்த இக்காட்சியைப் புலவர் தந்த பூரண வடிவிலே பார்ப்போம்!

"தண்டு தழுவாத்
தாவுநீர் வையையுள்,
கண்ட பொழுதில்
சுடும் புனல் கைவாங்க
நெஞ்சம் அவள் வாங்க
நீடு புணை வாங்க
நேரிழை நின்றுநிக் கண்
நிற்ப நீர் அவன்
தாழ்வும் உய்யாது
தான் வேண்டும் மாறு உய்ப்ப,
ஆயத்துள் நில்லாள்
ஆங்கு அவன் பின் தொடரூஉத்
தாய் அத்திறமறியாள்
'தாங்கித் தனிச் சேறல்
'ஆயத்திற் கூடு' என்று
அரற்றெறப் பத் தாக்கிற்றே
செயுறகார் நீர் வரவு
—பரிபாடல், 11 106-14

காதலின் பண்புகளை விளக்கிக் காட்டும் இக்கவிதை தமிழிலக்கியச் சுவை கண்ட எல்லோராலும் ஏகோபித்த பாராட்டுதலைப் பெருமல் இருக்க முடியுமா ......? அன்றியும் இக்[illegible] துப் பெருமலிருக்குமா?


இந்தியாவுக்குப் போகும்பொழுது ஓர்

## ஒட்டக மார்க்

குடையை வாங்கிச் செல்லுங்கள்




ரெஜிஸ்டர் நிர் 12336.

நீடித்த உழைப்பிற்கும் உறுக்கும் உத்திரவாதம் நீங்கள் கொடுக்கும் பணத்திற்கு பெறுமதிவாய்ந்தது

ஆடவர், பெண்டிர் ஆகிய இருபாலருக்கும் தேவையான குடைகளைத் தெரிவு செய்துகொள்ளலாம்.

இலங்கையில் எல்லோரும் விரும்புவது ஒட்டகம் மார்க் குடைகளே!

எங்களிடம் புதிதாய் இறக்குமதி செய்யப்பட்ட பார்க்கர் ஜூனியர் பென் சகாயமான விலைக்குக் கிடைக்கும்

உங்களுக்கு வேண்டிய ஜவுளிகளுக்கு எங்கள் மாளிகைக்கு ஒரு முறை விஜயம் செய்யுங்கள்.

வியாபாரிகளுக்கு விலையில் சலுகை உண்டு.

ஜக்கியா டிரேப்பரி ஸ்டோர்ஸ்

6, சைனாவீதி, கொழும்பு 11 போன் 5118



## வேல் தைலம்

இதனால் குணமாகும் வியாதிகள்:— ஜலதோஷம், மூக்கடைப்பு, தலைவலி தலைப்பாரம், ஒருதலைச் சந்நி, பீடரிச்சனம், கைகால் உளைச்சல், முதுகுவலி, வயிற்றுவலி, விஷக்கடி, தேள்கடி, பூரான்கடி, [illegible]க்கடி, ஜன்னி 13, வாதம் 80, வாய்வு குத்து, வாய்வு பிடிப்புகள், விரைவாய்வு, நரம்புவலி, பல்வலி, பல் ஆணை, இழுப்பு, கக்குவான், இருமல், காதுகுத்து காதுவலி, சுளுக்கு வீக்கம், ரத்தக்கட்டு, வெட்டுக்காயம், புண் சொறி, சிரங்கு, கட்டிகள் புறப்பாடுகள் முதலிய சகல வலிகளுக்கும், வியாதிகளுக்கும் அந்தந்த இடங்களில் வேல் தைலத்தை நன்றுய்த் தேய்த்துவர ஆச்சரியமான குணம் கொடுக்கும். இது ஒவ்வொரு வீட்டிலும் இருக்கவேண்டிய மகாசஞ்சீவி ஒவ்வொரு புட்டியிலும் உபயோக விபரம் வைக்கப்பட்டிருக்கின்றது.

புட்டி 1 ரூ. 1-25. டஜன் 1 ரூ. 12-00
வி. பி. பி தபால் செலவு வேறு

## லக்சால்

இது நாள்பட்ட சொறி, சிரங்கு, முகப்பரு, தமைச்சல், கக்கூஸ்பற்று, படை, தேமல், வண்டுகடி தண்ணீர்கடி, பித்தவெடிப்பு, ரணங்கள், புண்கள், காயம், வேனல்கட்டி, கரப்பன், தழுவணி, அக்கி, தீச்சுட்ட புண்கள் முதலிய சகல சர்ம வியாதிகளையும் குணமாக்கும். இது தோலிலுள்ள விஷக் கிருமிகளை சில நிமிஷங்களில் அழித்து பூரணசுகத்தைக்கொடுத்து சர்மத்திற்கு பளபளப்பை உண்டாக்குகிறது. துணிகளில் கறைபிடிக்காது.

புட்டி 1 சதம் 57 டஜன் 1 ரூ. 7-00
வி பி பி தபால் செலவு வேறு.

## கோபால் பல் பொடி

பல்களுக்கு வெண்மைதந்து பிரகாசிக்கச் செய்யும். பல்வலி, பல் ஆணை பல்கூச்சம், ஈறுகளில் இரத்தம்வருதல் முதலியவைகளை நீக்கி பல்களுக்கு தீர்க்காயுள் தரும் வாய்க்கு ருசியும், முகத்துக்கு அழகையும் உண்டாக்குகிறது 100 பாக்கெட்டுகள் விலை ரூ 7-50 வி பி பி. தபால் செலவு வேறு இம்மருந்துகள் எல்லா இடங்களிலும் விற்கப்படுகிறது. உங்களுக்கு சமீபத்தில் உள்ள கடைகளில் கேட்டு வாங்குங்கள். அல்லது எமது இலங்கை சோல் ஏஜண்டுக்கு எழுதி பெற்றுக்கொள்ளுங்கள்.

தயாரிப்பவர்கள்:

எஸ். பி. எஸ். ஜெயம் அன் கோ.
வேல் கெமிகல் ஒர்க்ஸ், 280, கீழ மாசிவீதி, மதுரை

இலங்கை சோல் ஏஜண்ட்:

எம். ஏ. ஆர். எஸ். மனுவேல் நாடார் அன் கோ.
34, செட்டியார் தெரு, கொழும்பு-11

ஹெட் ஆபீஸ்:
193, காலிரோட் கொள்ளுப்பிட்டி, கொழும்பு-3

TELE { gram: jayaJeevi
phone: 6019.



## மூல வியாதிக்கு!

## ரிஷி லேகியம்

(ரிஷி கருணைக் கிழங்கு லேகியம்)



மூலம், இரத்த மூலம், சீழ் மூலம், வௌங்கிரம் கடுப்பு, கிருமி பூச்சி, உள்மூலம், கைகால் அசதி, சோம்பல், அஜீரணம், பசியின்மை, பித்தவாய்வு, புளிபேப்பம், வயிற்றுப் பொருமல், இடுப்புவலி, நெஞ்சுவலி பிடிப்புகள், சொறி, சிரங்கு, பற்றுகள், கண், கை, கால், கிரேகஎரிச்சல் கண்சூட்டினால் தேகமெலிவு, வாத கடுப்புகள் தீராத மலச்சிக்கல், மற்றும் மூலசூட்டினால் ஏற்படும் வியாதிகள் யாவும் தீரும்.

ரிஷி மார்கைப் பார்த்து வாங்குங்கள்.
போலிகளை கண்டு ஏமாறுதீர்கள்.

15நாள் மருந்து டின் ரூ. 3-00
30நாள் மருந்து டின் 1க்கு ரூ. 5-00
தபால் செலவு சதம் 85.

தீராதவியாதிகளுக்கு எங்களைகலந்து ஆலோசியுங்கள்
டாக்டர் T H மதுரநாயகம் வைத்தியராஜ்
M D. M S (H) (கல்கத்தா)

ஞானசுந்தர வைத்தியசாலை
87, செட்டியார் தெரு. கொழும்பு.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


கிங்ஸ்லி [கொழும்பு] வெம்பிளி [கண்டி] வெல்லிங்டன் [யாழ்ப்பாணம்] வெல்லிங்டன் [திரிகோணமலை]



மாடர்ன் [பதுளை] தீவொளி [நுவரேலியா]

நடராஜா டாக்கீஸ் [நீர்கொழும்பு]

# 4-வது வெற்றி வாரம்!




அண்ணன்மார் மூவர். ரங்கூனிலே சீரும்சிறப்புமாய் வாழ்ந்தனர். குள்ள ஜப்பானின் கோரத் தாக்குதலால் சாந்திமிக்க பௌத்தநகர் பாழாயிற்று. உயிர்தப்பிப் பிறந்தகம்வந்தனர் அவர்கள். இதற்கிடையில் ஆசைத் தங்கைக்குக் கல்யாணம். அழகான குழந்தையைப் பெற்றபின் விதவையானாள் கல்யாணி.

கல்யாணியின் வாழ்வு சோகரசம்மிக்கது. அனாதைப் பெண். யௌவனம் அவளைத் துரத்தித்துரத்தியடித்தது. பச்சிளம் பாலனுடன் ஆற்றிலே குதித்தாள்.

இந்த உலகத்திலே எத்தனை விநோதங்கள் நடக்கின்றன? சமுதாயத்திலே விபசாரம், ஏமாற்று, வைத்தியக்காரத்தனம், சபலம் முதலிய எண்ணற்ற புரைகள் மண்டிக்கிடக்கின்றன.

ஒருகாலத்தில் சீரும் சிறப்பும், செல்வமும், கீர்த்தியும் பொருந்தித்திகழ்ந்தது தமிழகம். ஆனால்கால வைத்தவட்டன் "தயா பிச்சை" என்று முதல் குரல் கேட்கிறதே என வருந்துகிறான் புதுமைப் பெண்ணின் ஊசல் - ஆசைச் கல்யாணியின் அருமைத் தமையன்.

பராசக்தியைத் திரையில் காண்க.



## ஹாஸ்யமும், கருத்தும், கண்ணீரும் மகிழ்ச்சியும் கலந்துஉறவாடும் மகத்தான படம்.

பார்த்துப் படிக்க வேண்டிய பாங்கான கருத்துக்கள்.

# பராசக்தி

நடிகர்கள்:

- சிவாஜி கணேசன்,
- டி. கே ராமச்சந்திரன், ஸ்ரீ ரஞ்சனி
- எஸ். வி. சகஸ்ரநாமம்,
- சுசீலா, முத்துலக்ஷ்மி.

## மைலனில்

மாதுரிதேவி - ஜானகி - குமாரி கமலா லலிதா - பத்மினி நடித்த

"தேவகி"

## காமினியில்

சர்க்கஸ் அரங்கத்தில்

(ரஷ்ய சர்க்கஸ் படம்)

இப்பத்திரிகை கொழும்பு தட்டாரதெரு, 1, 6ம் இலக்க இல்லத்தில் வசிக்கும் எஸ். டி. சிவநாயகம் அவர்களால் ஸிலோன் நியூஸ்பேப்பர் லிமிட்டெட ஸ்தாபனத்தாரின் சார்பில் 1 ம் தட்டாரதெரு, அச்சகத்தில் பதிப்பித்து 1952 டிசம்பர் 28ந்தேதி பிரசுரம் செய்யப்பட்டது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org